# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 06 புதன்கிழமை (19-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 176


# அமைச்சர் கதிர்காமர் வெளியிடும் கருத்துகளால் சந்திரிகாவின் அணுகுமுறை மீது புலிகள் சந்தேகம்

## செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் கருத்து

கிளிநொச்சி,மே19

அரசில் பொறுப்புவாய்ந்த அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் சமாதானச் சூழலுக்கு முரணாகக் கருத்துக்களை வெளிப்படுத்துவது ஜனாதிபதியின் அணுகுமுறை மீது எமக்கும் எமது மக்களுக்கும் சிறு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

கதிர்காமரின் நிலைப்பாட்டின் அடிப்படையில் பார்த்தால் பேச்சுக்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

இப்படிக்கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை ஹெலி மூலம் வந்த ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷியுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே அவர் செய்தியாளர்களிடம் இப்படிக் கூறினார்.

நேற்றுக் காலை ஹெலி மூலம் வந்த அகாஷிக்கும் தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான பேச்சு ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

*கேள்வி:* இன்றைய சந்திப்பின் போது என்ன விடயங்கள் தொடர்பாகப் பேசினீர்கள்?

*பதில்:* சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் அகாஷியுடன் பேசினோம்.

முக்கியமாக பேச்சுக்கள் விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதும் - மிகவிரைவில் ஒரு சுமுகமான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதும் - அவர்களின் பெரும் அக்கறையாக இருந்தது. தங்கள் கரிசனையையும் எங்களுக்கு வெளிப்படுத்தினார்கள்.



*கேள்வி:* டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் மாநாட்டில் இணக்

(2ஆம் பக்கம் பார்க்க)

### ஆரவாரமின்றி ஏகமனதாக

# சு.க. - ஐ.தே.க. இணங்கி

# பிரதி சபாநாயகர் தெரிவு!

## ஓரங்கட்டப்பட்டது ஜே.வி.பி.

கொழும்பு,மே19

**பலரும் எதிர்பார்த்ததற்கு மாறாக பிரதி சபாநாயகர் தெரிவு நேற்று நாடாளுமன்றத்தில் தேர்தல், வாக்கெடுப்பு ஏதுமின்றி அமைதியாக - ஏகமனதாக - நடைபெற்று முடிந்தது.**

**பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சேர்ந்து - ஜே.வி.பியை ஓரங்கட்டிவிட்டு - தங்களுக்குள் இணங்கி, பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித்தலைவர் ஆகியோரை ஏகமனதாக - சத்தம் சந்தடியின்றி - தெரிவு செய்ததன் மூலம் பெரும் நாடாளுமன்ற சர்ச்சையைத் தவிர்த்துக்கொண்டன.**

தம்மை ஓரங்கட்டி விட்டு பிரதான கட்சிகள் தங்களுக்குள் விடயத்தை கச்சிதமாக முடித்துக்கொண்டதால் சீற்றமடைந்த ஜே.வி.பியினர், அரசில தங்களின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக பிரச்சினை கிளப்பியபோதிலும், அது எடுபடாமல் அடங்கிப்போய்விட்டது.

பிரதி சபாநாயகராக அரச தரப்பைச் சேர்ந்த கீதாஞ்சன குணவர்த்தனவும், குழுக்களின் பிரதித் தலைவராக எதிர்த்தரப்பைச் சேர்ந்த இ.தொ.கவின் பதுளை மாவட்ட எம்.பியான முருகன் சச்சிதானந்தனும் ஏகமனதா

(2ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சு விரைவில் ஆரம்பிக்கும் என நம்பிக்கை

### தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின் அகாஷி தகவல்

கிளிநொச்சி,மே19

வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என நம்புகிறோம். பேச்சை ஆரம்பிப்பதில் புலிகள் மிகவும் ஆர்வமாகவுள்ளனர் என்பதை இன்றைய பேச்சுக்களில் என்னால் உணரமுடிந்தது.

- இப்படிக் கூறினார் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று நடத்திய பேச்சுக்களை அடுத்து செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சு முன்னேற்றகரமானதாக அமைந்தது. சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் உறுதிப்பாட்டையும் அப்போது உணர்ந்து கொண்டேன்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கும் என உறுதியாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## நையப்புடைக்கப்பட்ட பின் கடத்தப்பட்ட பிக்கு எம்.பி.!

### நேற்று பதவியை ராஜினாமாச் செய்தார்

கொழும்பு,மே19

ஜாதிக ஹெல உறுமய சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பின்னர் அரசுப் பக்கம் சாய்ந்த இரண்டு பிக்கு எம்.பிக்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு நையப்புடைக்கப்பட்ட பின்னர் கடத்தப்பட்டார். அவர் பின்னர் நேற்று மாலை நாடாளுமன்றத்துக்கு வந்து நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்யும் தனது கடிதத்தை ஒப்படைத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பதவியை ஏற்க சோனியா திடீர் மறுப்பு

### மன்மோகன்சிங் பிரதமராகிறார்?

புதுடில்லி,மே19

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தான் இந்தியப் பிரதமர் பதவியை ஏற்க விரும்பவில்லை என்று நேற்று அறிவித்தார். இதனையடுத்து புதுடில்லியில் பரபரப்பான சூழ்நிலை நிலவிவருகின்றது.

சோனியாவின் அறிவிப்பை அடுத்து அவசர அவசரமாக நேற்று மாலை மீண்டும் கூட்டணித்தலைவர்களின், புதிய காங்கிரஸ் எம்.பிக்களின் கூட்டமும் நடைபெற்றது. நேற்று நள்ளிரவு வரை கூட்டம் தொடர்ந்தது.

அவரது முடிவை திரும்பப் பெறுமாறு கோரி ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சோனியாவின் இல்லத்தின் முன்பாகவும் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகம் இருக்கும் பகுதியிலும் கூடி நின்று கோஷமெழுப்பி வருகின்றனர்; பலவித போராட்டங்களிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## மு.காவின் 4 எம். பிக்கள் ஹக்கீமுக்கு எதிராகச் சீற்றம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நான்கு எம்.பிக்கள், அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருக்கின்றனர்.

ரவூப் ஹக்கீம் தொடர்பாக சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் பெண்மணியான குமாரி குரேக்கும், ஹக்கீமுக்கும் இடையில் இரண்டரை வருடங்களாக தொடர்பு இருப்பது என்பது உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)




# அமைச்சர் கதிர்காமர் வெளியிடும் கருத்துகளால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கம் காணப்பட்ட நிதி உதவி பற்றி ஏதாவது பேசப்பட்டதா?

### முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே உதவி

*பதில்:* ஜப்பான் உதவி பற்றி அகாஷி கூறும்போது, சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இந்த உதவி வழங்கப்படும் என்பதை நினைவுபடுத்தினார். டோக்கியோ பிரகடனத்தில் அது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்றும் அதில் சர்வதேச சமூகமும் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சமாதான முன்னெடுப்புக்களின் உறுதிப்பாட்டிலும் அதன் வெற்றியிலுமே சர்வதேச உதவிகள் வழங்கபடும் என்று மீண்டும் உறுதிபட எம்மிடம் கூறினார்.

*கேள்வி:* பேச்சுக்கள் இதுவரை ஆரம்பிக்கப்படாத நிலையில், வடககு - கிழக்குக்கு நிதி உதவிகளை ஜபபான் அரசு வழங்கிவருகிறது. அதில அவசரமாகத் தேவைப்படும் மேலதிக நிதி குறித்து ஏதாவது கோரிக்கையை முன்வைத்தீர்களா?

*பதில்:* சிறிய அளவிலான உதவிகளை சர்வதேச சமூகம் தொண்டு நிறுவனங்கள் ஊடாக வழங்கிவருகின்றது. யுத்தத்தால் சிதைந்துபோன வடக்கு - கிழக்கில் எமது தாயகப் பிரதேசத்தைக் கட்டியெழுப்பப் பாரிய அளவிலான உதவிகளை இதுவரை சர்வதேச சமூகம் வழங்க முன்வரவில்லை.

அரசியல் உறுதிப்பாடு, சமாதானப் பேசசுக்களின் முன்னேற்றம், பேசசுக்களின் சாதகத்தன்மைகள் ஆகியன தெளிவில்லாத நிலையில் சர்வதேச சமூகம் தமது பாரிய உதவிகளை வழங்க இன்னமும் கரிசனை காட்டவில்லை என்பது இன்றைய கலந்துரையாடலில் தெளிவாகத்தெரிந்தது.

அதே சூழ்நிலையில் எமது தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைததோம். அதாவது தமிழர் தாயகப் பிரதேசத்தில் மீள்கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டுமாக இருந்தால் சரியான உறுதியான நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

இடைக்கால நிர்வாகசபை குறித்துப்பேசி முடிவுசெய்யப்படவேண்டும். அந்தச் சபை ஊடாகவே தமிழா தாயகத்தைக் கட்டியெழுப்பும் பணியை நாங்கள் உரிய முறையில் - உறுதியான - முறையில் முன்னெடுக்கலாம் என்று வலியுறுத்தினோம். அவர்களும் இந்தக் கருத்தை - எமது நிலைப்பாட்டை - ஏற்றுக்கொண்டார்கள்.

### டோக்கியோ பிரகடனம்

*கேள்வி:* கடந்த அரசு சர்வதேச சமூகத்துடன் பேசி டோக்கியோ பிரகடனத்தை உருவாக்கியது. அந்தப்பிரகடனத்தில் புதிய அரசு மாற்றும் வாய்ப்பு உண்டா?

*பதில்:* புதிய அரசு பதவி ஏற்றபன நிலைமைகள் மாறியுள்ளன. ஆனால, சர்வதேச சமூகத்தின் கரிசனைகளிலும் நிலைப்பாடுகளிலும் எந்தவித மாற்றங்களும் ஏற்பட்டதாக எமக்குத் தெரியவில்லை.

அதாவது பேச்சுக்கள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதும்-

இணக்கப்பாடான சூழலை - தீர்வை - எட்ட வேண்டும் என்பதும் -

குறிப்பாக இடைக்கால நிர்வாக சபை நிறுவப்படவேண்டும் என்பதும் -

சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடுகளாக இருக்கின்றன. அதில் கரிசனையாக இருப்பதையும் நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் சர்வதேச உதவிகள் கிடைக்கும் எனக் கருதுகின்றேன்.

*கேள்வி:* புதிய அரசு வந்தபின் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறினீர்கள் அது குறித்து...?

*பதில்:* புதிய அரசு பதவி ஏற்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முன்னெடுத்த நிலைப்பாடுகளுக்கும் புதிய அரசின் நிலைபபாடுகளுக்கும் மாறுதல்கள் உள்ளன. ஆயினும் இந்தச் சமாதான முன்னெடுப்புக்களின அடிப்படையில் ஒரே விடயங்கள்தான் தொக்கி நிற்கின்றன.

அந்த அடிப்படையில்தான் பேச்சுக்களை முன்னெடுப்பதாகத் தேசியத் தலைவர், நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தார். அந்த அடிப்படையில் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு இடைக்கால நிர்வாக சபை குறித்து முதலில் முடிவு செய்ய வேண்டும் என்பதுதான் விடுதலைப்புலிகளினதும் எமது மக்களினதும் விருப்பமாகும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இதுதொடர்பாக ஜனாதிபதியிடம இருந்து சாதகமான பதில் கிடைத்ததும் நோர்வேத் தரப்பு, இருதரப்பு இணக்கப்பாட்டோடு ஓர் அறிக்கையை வெளியிடுவதாகக் கூறியிருந்தது.

ஆனால், இன்றும் அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் நாம் எதையும் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், கொள்கை ரீதியான இணக்கப்பாடான சந்திப்பின்போது தெளிவாக்கப்பட்டது.

### முஸ்லிம்களின் விவகாரம்

*கேள்வி:* அகாஷி - முஸ்லிம் தரப்பு சந்திப்புக் குறித்து இன்று பேசப்பட்டதா?

*பதில்:* ஆம். எமது நிலைப்பாட்டை அகாஷிக்கும் தெளிவாகக் கூறினோம். அதாவது இடைக்கால நிர்வாகசபை பற்றிப்பேசும்போது - முஸலிம் தரப்பு விடயங்கள் ஆராயப்படும்போது முஸ்லிம் தரப்புக் குழுவுடன் பேசவேண்டிய தேவை ஏற்படும்.

அந்த நேரத்தில் முஸ்லிம் தூதுக் குழுவையும் அழைத்துப்பேசவிருக்கின்றோம்.

முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மற்றும் நலன்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் நிச்சயம் ஆராயப்படும்; அவர்களின் நலன்கள் பேணப்படும்; பேணப்படவேண்டும். இதில் எமது தலைமைப்பீடம் உறுதியாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில் தகுந்த சூழலில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நிச்சயமாகப் பேசுவோம். பேசித்தான் ஒரு தீர்வை கொண்டு வருவோம்.

*கேள்வி:* இடைக்கால நிர்வாக சபை அமைப்பது குறித்து புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கும்படி அகாஷி, இலங்கை அரசுக்கு அழுத்தம் ஏதும் கொடுத்துள்ளாரா?

*பதில்:* பொதுவாக சர்வதேச சமூகம் இதில் தெளிவாக இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதிலும் - தமிழ்மக்களின் பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளின் தலைமையுடன்தான் பேசித் தீர்வுகாணவேண்டும் என்பதிலும் - சர்வதேச சமூகம் தெளிவாக இருக்கிறது. அந்த வெளிப்பாடுகளை நாங்கள் பார்க்கின்றோம்.

இந்த வகையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு விளக்கி வருகின்றது. அதனை சர்வதேச சமூகம் ஏற்றிருக்கிறது. அகாஷியும் அந்த நிலைப்பாட்டை ஏற்றிருக்கிறார். ஆகவே, சர்வதேச சமூகம் அந்த நிலைப்பாட்டை மிக அழுத்தமாக புதிய அரசுக்குக் கூறும் என உறுதியாக நம்புகிறோம்.

### குழப்பமான கூட்டணி

*கேள்வி:* லக்ஷ்மன் கதிர்காமர், இடைக்கால சபையைப் புலிகளிடம் ஒப்படைப்பது தமிழீழத்தின் அடிப்படையை ஒப்படைப்பது போன்றது எனக் கூறியுள்ளார். அது குறித்து....?

*பதில்:* லக்ஷ்மன் கதிர்காமரின் நிலைப்பாடு எப்போதுமே தமிழ்மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிரானது தான். கடந்த காலங்களின் அவரின் கருத்துக்கள், தமிழ்மக்களின் அபிலாஷைகளை, அவர்களின் எதிர்கால முன்னெடுப்புக்களைக் கொச்சைப் படுத்தும் வகையில்தான் அமைநதன.

ஆனால், புதிய அரசு பதவியேற்ற பின் பொறுப்பு வாய்ந்த அமைச்சரானபின் அவரில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்த்தோம். ஆனால், அவரிடம் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஜனாதிபதியின் பொறுப்பு வாய்ந்த அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் இப்படியான கருத்துக்களை வெளிப்படுத்துவது, ஜனாதிபதியின் அணுகுமுறைமீது எமக்கும் எமது மக்களுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

கதிர்காமரின் நிலைப்பாட்டின் அடிப்படையில் பார்த்தால் பேச்சுக்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

ஆனால், ஜனாதிபதி, நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக எங்களுக்கு முன்வைத்த நிலைப்பாட்டின் அடிப்படையில் சாதகமான நிலைதான் எமக்குத்தெரிகின்றது. இது ஒரு குழப்பமான நிலைதான்.

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்களுக்கும் ஜனாதிபதியின் கருத்துக்களுக்கும் இடையே பாரிய முரண்பாடு உள்ளது. அதே போல ஊடகங்கள் மூலம் இன்று கிடைத்த செய்திகளின் படி ஜே.வி.பியின் நிலைப்பாடுகளும் இதற்கு எதிர்மாறாகத்தான் இருக்கின்றது.

ஆகவே, தென்னிலங்கை அரசியல் சூழலில் ஜனாதிபதி அவர்களின் நிலைப்பாடுகளும் அவரின் கூட்டுக்கட்சிகள் மற்றும் அமைச்சர்களின் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் ஒவ்வொரு கோணத்தில் முரண்பாடாக இருக்கின்றன.

இந்த நிலையில் எதிர்காலத்தில் நோர்வே அனுசரணையாளர் மூலம் கிடைக்கும் உறுதிப்பாடான அரசின் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு தான் நாங்கள் தீர்க்கமான முடிவை எட்டமுடியும் என்று நினைக்கின்றோம்.

*கேள்வி:* இந்தச் சந்தேக நிலை குறித்து நோர்வேத்தரப்பு ஊடாக அரசின் கவனத்துக்கு ஏதேனும் விடயங்களைச் கொண்டு வந்துள்ளீர்களா?

*பதில்:* நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக எமது சந்தேகங்களை வெளிப்படுத்தியுள்ளோம். அகாஷியுடன் பேசும்போது இதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அண்மைக்காலத்தில் முரண்பாடான செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதை நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

நிதானமாகவும் பொறுமையாகவும நிலைமைகளை அவதானித்து தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலையில் எமது தலைமைப்பீடம் இருக்கின்றது. இதை அகாஷியிடம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

*கேள்வி:* பேச்சுக்கள் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஜப்பான் தூதரின் சந்திப்பு எந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

*பதில்:* பேச்சுக்களை விரைவாகத் தொடங்கி சாதகமான சூழலை தோற்றுவிக்கின்ற நிலையை ஊக்குவிக்கும் வகையில் அகாஷியின் விஜயம் அமைந்தது.

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை சட்டவிரோதமானது என்று ஜனாதிபதி முன்னர் கூறினார். இப்போது பேச்சு ஆரம்பிக்க முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை மீளச் கையொப்பம் இடப்படுமா?

*பதில்:* சந்திரிகா அம்மையாரின் பழைய நிலைப்பாடுகள், பழைய கருத்துக்களை திரும்பக்கிளற நாம் விரும்பவில்லை. இன்று அவரிடம் நிறைவேற்று அதிகாரமும் அரசும் உள்ளது. அந்த நிலையில் ஏற்கனவே உள்ள உடன்படிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொண்ட நிலைப்பாடு நோர்வே அனுசரணையாளர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் கடந்த காலங்களில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் பற்றி நாம் பொருட்படுத்தவில்லை. இன்றைய சூழலில் உத்தரவாதமளிக்கப்பட்ட முறையில நோர்வே அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் உறுதிப்பாடு தந்துள்ளன. அந்த வகையில் இதை முன்னெடுத்தும் செல்லலாம்.

*கேள்வி:* பேச்சு ஆரம்பிக்கும்போது புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தான் கைச்சாத்திடவில்லை என்று ஜனாதிபதி கூறினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

*பதில்:* அப்படியொரு நிலை உருவானால் அது முற்றாக இந்தச் சமாதான முன்னெடுப்புகளைச் சீர்குலைப்பதாகவே அமையும்.

சர்வதேச சமூகம் எமக்கு ஓர் உத்தரவாதத்தைத் தந்துள்ளது. அனுசரணையாளர்களாக நோர்வேத்தரப்பை ஜனாதிபதி அழைத்திருக்கிறார். அவர் அழைத்த அனுசரணையாளர்கள் ஊடாக அந்த உத்தரவாதத்தைத் தந்துள்ளார். இதிலிருந்து ஜனாதிபதி மாறுவாரானால் அது முழுஅளவில் சமாதான சூழலை சீர்குலைப்பதாகவே அமையும். (ஒ-3)

# சு.க. – ஐ.தே.க. இணங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை பத்துமணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. வழமையாக உத்தியோகபூர்வ கோல அங்கியுடன் சபைக்கு வரவேண்டிய சபாநாயகர் நேற்று வழமையான தேசிய உடையுடன் படைக்கல சேவிதர் செங்கோல் ஏந்திவர நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம் ஆகியோருடன் சபாபீடத்தில் வந்தமர்ந்தார்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கலரி உட்பட பார்வையாளர்கள் கலரிகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன. பார்வையாளர் கலரியில் மேலதிகமான நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன.

சபை கூடுவதற்கான கோரம் மணி ஒலித்த பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களைத் தேடிப்பிடிப்பதற்காக அங்கும் இங்கும் ஓடித்திரிந்தது வெகு சுவாரஸ்யமாக இருந்தது.

பல உறுப்பினர்கள் சபை நிகழ்வுகள் ஆரம்பித்த போதும் எழுந்து நின்றுகொண்டே இருந்ததையும் காணமுடிந்தது.

முதற்கட்டமாக முன்னாள் பிரதமா ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, மேர்வின் சில்வா, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் ஆளும் தரப்பிலும், அரியநேத்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து விறுவிறுப்பானதும் அதேவேளை சுவாரஸ்யமானதுமான பல விடயங்கள் இடம்பெற்றன.

### ஹக்கீம் சிறப்புரிமை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபாநாயகரின் அனுமதியுடன் சிறப்புரிமை பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அதன் தலைமைத்துவத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்களில் உண்மைக்கு மாறான கட்டுக்கதைகளைத் திரித்துப் பிரசாரம் செய்கின்றனர் என்று அவர் குற்றம் சுமத்தினார்.

அரச தரப்பில் சில பிரதான அமைச்சர்களும் மற்றும் சில அரசியல் வாதிகளும் இணைந்தே இந்தக் கீழ்த்தரமான செயலில் திட்டமிட்டு செயல்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. ஒரு கௌரவமான கட்சியின் தலைவர் என்ற வகையிலும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் எனக்கு இது பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. எனது அடிப்படை சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன. எனவே சபாநாயகர் இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கேகம அடிக்கடி இடையூறு செய்து கொண்டே இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் தாம் நினைத்தபடி சிறப்புரிமை என்று கூறிக்கொண்டு தாம் நினைத்தவற்றை எல்லாம் இங்கு கூற முடியாது என்று அவர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

ஆனால், சபாநாயகர் அதனை நிராகரித்து விட்டார். இதனால் சபையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

### பிக்கு எம்.பிக்கள் கிளப்பிய ஆட்சேபம்

இதனைத் தொடர்ந்து தேசிய ஹெல உறுமய உறுப்பினர்களான மேதானந்த தேரரும், அபரத்த புன்யானந்த தேரரும் கடந்த அமர்வின் போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக கண்டனம் தெரிவித்தனர். தம்மை அகௌரவமான வார்த்தைகளால் நிந்தித்ததோடு கடிதக்கோ[illegible]களையும், புத்தகங்களையும் தம்மீது வீசி எறிந்ததையும் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன. இது தொடர்பாக சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அதேவேளை, அபரத்த புன்யானந்த தேரர் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார். தமது சகாவான ரத்தொளுவ ரத்னசீல தேரர் கடத்தப்பட்டுள்ளார். அவருக்கு என்ன ஆனது என்பதும் தெரியவில்லை. அவரை கண்டுபிடிக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

### ஜெயராஜ்ஜின் சீற்றம்

இந்தச் சந்தர்ப்பத்தில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சரான ஜெயராஜ் பெனாண்டோ புள்ளே பேச ஆரம்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப போதிய பாதுகாப்பு அளிக்க முடியாத ஒருவர் ஏன் சபாநாயகராக இருக்க வேண்டும்? பொலீஸ் மா அதிபருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், காணாமற்போன பிக்கு எம்.பியை இன்னும் கண்டுபிடிக்கவில்லை எனக் கூறியதோடு, சபாநாயகரையும் கடுமையாக விமர்சனம் செய்ய ஆரம்பித்தார்.

இவ்வேளை, சபாநாயகர் சிரித்தபடியே இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்ததோடு, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பேசிய அனைத்து வாக்கியங்களையும் வார்த்தை தவறாமல் நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கி விடும்படியும், ஊடகவியலாளர்கள் இவைகளைப் பிரசுரிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டார்.

இந்த அறிவிப்பால் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கோபத்தின் உச்சக் கட்டத்திற்கே போய்விட்டார். தன்னுடைய பேச்சை நீக்கச் சொன்னதற்கான காரணத்தை சபாநாயகர் அறிவிக்கும் வரை தான் ஆசனத்தில் அமரப் போவதும் இல்லை. சபையை கொண்டு நடத்தவிடப் போவதும் இல்லை எனக் கூச்சலிட்டார் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

அப்போது "அமைச்சர் ஜெயராஜ் நீண்டகால நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்து அனுபவப்பட்டவர். நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை நன்கு அறிவார். அதன்படியே நான் செயற்பட்டுள்ளேன். நாடாளுமன்றப் பதிவேடு (ஹன்ஸ்சாட்) ஒரு முக்கியமான ஆவணம். அதில் குப்பைகளை கொட்டி நிரப்ப நான் இடமளிக்க மாட்டேன். நீங்கள் எவ்வளவு நேரமும் பேசலாம் ஆனால், அவை எவையுமே பதிவேட்டில் இடம் பெறா" - என்றார் சபாநயகர்.

அதேவேளை, அமைச்சர் கூறிய வார்த்தைகளுக்கு மாற்றீடாக பிரயோகிக்கக் கூடிய நாகரிகமான வார்த்தைகள் சிலவற்றையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சபாநாயகர் விநயமாகவும் அதேவேளை நகைச்சுவையாகவும் கூறிய விடயங்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயையும் சிரிக்க வைத்துவிட்டன.

"ஐயா நீங்க உங்களுடைய சிங்கள மொழி பாண்டித்தியத்தை வைத்துக்கொண்டே எல்லோரையும் மடக்கி விடுகின்றீர்களே" என சபாநாயகரின் பாணியிலேயே எதையோ கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

அப்போது சபையில் இரு பக்கத்திலும் ஏற்பட்ட சிரிப்பொலி அடங்க சிறிது நேரம் பிடித்தது.

### ரிஷாத் பதியுத்தீன் சிறப்புரிமை

சபையில் அமைதி ஏற்பட்டவுடன் ஸ்ரீல.மு.கா. உறுப்பினரான ரிஷாத் பதியுத்தீன் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

அதாவது "தனிப்பட்ட நபர் ஒருவரின் ஆசை நாயகி தொடர்பான விடயத்தில் தன்னைத் தொடர்புபடுத்தி செய்தி ஒன்று ஒளிபரப்பப்பட்டுள்ளது. இதனை நான் கண்டிக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினரான எனது பெயர் சந்திக்கு இழுக்கப்பட்டுள்ளது" என்றும் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக முறைப்படி அணுகும் படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

இப்படியாக சபையில் ஆரம்பக்கட்டத்திலேயே காரசாரமான விவாதங்களும் பிரதிவாதங்களும் ஏற்பட்டதால் பிரதி சபாநாயகர் தெரிவிலும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவிலும் சூடுபிடிக்கும் பல சர்ச்சைகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நிலைமை உப்பு சப்பற்றதாகிவிட்டது.

பிரதி சபாநாயகராக ஆளும் கட்சி உறுப்பினரான கீதாஞ்சன் குணவர்த்தனாவின் பெயரைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வழிமொழிந்தார்.

இவ்வேளை எதிர்கட்சிக் கொறடாவான மஹிந்த சமரசிங்க பிரதி சபாநாயகர் பதவிக்கு எதிர்கட்சியின் சார்பில் எவரையும் நிறுத்தவில்லை என்று அறிவித்தார்.

"அரசாங்கத்தினால் பிரேரிக்கப்படுபவரை நாங்கள் ஆதரிக்கிறோம். அதேவேளை, குழுக்களின் பிரதித் தலைவராக எதிர்க்கட்சியின் தரப்பில் பிரேரிப்பவருக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என்ற இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம்" எனக் குறிப்பிட்டார் எதிர்க்கட்சிக் கொறடாவான மஹிந்த சமரசிங்க.

### துள்ளிக் குதித்த விமல் வீரவன்ஸ

அப்போது ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ எழுந்து "அப்படி ஏதும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக் ஆளுநர் சபைத் தலைவரின் மறைவு ஆட்சிமாற்றம் ஏற்படுவதைப் பாதிக்காது!

## அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிக்கிறார்


பக்தாத்,மே19

தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஈராக்கிய ஆளுநர் சபைத் தலைவர் கொல்லப்பட்டமை அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படுவதைப் பாதிக்காது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஈராக்கிய நிர்வாகத்தை ஈராக்கியர்களிடமே ஒப்படைத்துவிட அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பக்தாத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட ஈராக்கிய ஆளுநர் சபைத் தலைவர் கொல்லப்பட்டார். இது ஆட்சி மாற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பரவலாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் புஷ்ஷின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிஸா ரைஸ் ஆட்சி மாற்றம் திட்டமிட்டபடி நடைபெறும் என்பதை உறுதிப்படுத்தினார். "அரசியல் அதிகார மாற்றம் தொடர்ந்தும் அதன் தடத்திலேயே இருக்கிறது. ஈராக்கில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு முடிவடைவதற்கான நேரம் நெருங்கிவிட்டது' - என்றார் அவர்.

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானும் இதே கருத்தைத் தெரிவித்தார். ஈராக்கிய ஆளுநர் சபைத் தலைவர் கொல்லப்பட்ட விவகாரம் அதிகார மாற்றத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்றே தான் கருதுகின்றார் என்றும் அவர் கூறினார்.



ஈராக் ஆளுநர் சபைத் தலைவர் சலீம், நேற்றுமுன்தினம் பக்தாத்தில் உள்ள கூட்டுப் படையினரின் தலைமையக வளாகம் அருகில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (8)

# நரம்புகளைப் பாதிக்கும் இரசாயனக்குண்டு பக்தாத்தில் வெடிக்க வைக்கப்பட்டது

பாக்தாத்,மே19

நரம்புகளைப் பாதிக்கும் சிறிதளவு நச்சு வாயுவைக் கொண்ட ஆட்லறி குண்டு ஒன்று ஈராக்கில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகள் ஈராக்கில் தாக்குதல் ஆரம்பித்ததன் பின்னர் முதல் தடவையாக அங்கே இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை நிரூபிக்கும் சம்பவமாக இக்குண்டுவெடிப்பு இருக்கிறது என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அக்குண்டிலிருந்து சிறிதளவு நச்சுவாயு வெளியேறியதாகவும் அதன் பாதிப்புக்குள்ளான இருவர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர் என்றும் பிரிகேடியர் ஜெனரல் மார்க் கிம்மிட் தெரிவித்தார்.

155 எம்.எம்.ஆட்லறி குண்டு வீதியோரத்தில் வெடிக்கும் விதத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அதுவெடிக்கும் முன் அமெரிக்கப் படைகள் கண்டுபிடித்து தற்காப்புடன் வெடிக்கவைத்ததாகவும் தெரியவருகின்றது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இக்குண்டில் நரம்புகளைப் பாதிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான இரசாயனம் அடங்கியிருந்ததாகத் தெரிவித்த ஜெனரல் கிம்மிட் 1991ஆம் ஆண்டு நடந்த சண்டைக்கு முன்பே அவ்வாறான இரசாயனங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டதாக முன்னைய ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றார்கள் என்றும் கூறியுள்ளார்.

இக்குண்டில் அடங்கியிருந்த சாரின் என்ற இரசாயனப்பொருள் சயனைட்டைவிட 20 மடங்கு ஆபத்தானது என்று கருதப்படுகின்றது.

1930இல் 2ஆம் உலக மகா யுத்தத்தின்போது ஹிட்லருக்காக ஜேர்மன் விஞ்ஞானிகளால் இந்த நச்சு இரசாயனப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. (ப-8)

# கொண்டூரஸ் சிறையில் தீ விபத்து: 100 கைதிகள் கருகி மாண்டனர்!

கொண்டூரஸ்,மே19

கொண்டூரஸ் நாட்டில் சிறைச்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 100 கைதிகள் தீயில் கருகி மாண்டனர். மேலும் 27 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சான்பெட்ரோ சூலோ நகரில் உள்ள சிறைச்சாலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. மின்சுற்றில் ஏற்பட்ட ஒழுக்குக் காரணமாகவே விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ள கைதி ஒருவர் தீயில் இருந்து தாங்கள் தப்பிய விதம் குறித்து விவரித்தார். "எல்லாமே எரிந்துபோயின" என்றார் அவர். "நாங்கள் நித்திரையாக இருந்தபோது விரைவாக நடந்துமுடிந்து விட்டது. எங்களுடைய ஆடைகளும் கட்டில்களும் பற்றி எரிய ஆரம்பித்த பின்னரே நாங்கள் தப்பி ஓடுவதற்கு முயன்றோம்" என்று ஜேஸ் முறிஸியோ லொய்ஸ் என்ற அந்தக் கைதி மேலும் கூறினார்.

தீக்காயங்களுக்கு உள்ளான கைதிகள் சிலரின் நிலை மிகக் கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய அமெரிக்காவின் குற்றக்கும்பல்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைப் பகுதியிலேயே முதலில் தீ பிடித்தது. அங்கு 186 கைதிகள் இருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த சில வருடங்களில் கொண்டூரஸ் அரசு, குற்றக்கும்பல்களுக்கு எதிராக மேற்கொண்ட பெரும் நடவடிக்கைகளின்போது கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் போதைப்பொருள் மற்றும் ஆள் கடத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய குற்றங்களில் இவர்கள் சந்தேக நபர்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்தச் சிறைச்சாலை 800 கைதிகளைத் தடுத்து வைப்பதற்காகவே அமைக்கப்பட்டது, ஆனால், தற்போது அங்கு 2,200 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது ஒரு ஜீரணிக்கமுடியாத சோகம் என்று இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த சான் பெற்ரோ சூலோ நகர அயர் கூறினார். "அங்கு நிலைமைகள் மிக மோசமாக இருந்தன. ஒரு தனித்தடுப் பறையில் மிகப்பலர் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இதனாலேயே பெரும் இழப்பு ஏற்பட்டது என்றார் அவர்.

கைதிகளால் நிரம்பி வழியும் கொண்டூரஸ் நாட்டு சிறைகளில் இவ்வாறு தீ விபத்து ஏற்படுவது இது முதற்றடைவையல்ல. கடந்த ஆண்டு எல் மாகாணத்தில் உள்ள சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 69 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-8)



கொண்டூரஸின் வடபகுதியிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் கொல்லப்பட்ட கைதிகளின் சடலங்களை செய்தியாளர்கள் பார்வயிடுவதையும் சடலங்கள் நிரையாக அடுக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## எதிர்க்கட்சித் தலைவராக வாஜ்பாய்



இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து பா.ஜனதா எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்தது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வாஜ்பாய் ஏற்கமாட்டார் என்றும் அதனால் எல்.கே.அத்வானி எதிர்க்கட்சித் தலைவர் ஆவார் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு நேற்று முன்தினம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக வாஜ்பாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தகவலை பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் விரைவில் நடைபெறவிருக்கின்றது. நாடாளுமன்றம் கூடும் முன்பு இந்தக் கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கையில் எப்படிப் பங்கேற்பது?, காங்கிரஸ்"க்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைள் என்ன என்பது பறறி இந்தக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது. (ப-8)

# விபத்துக்குள்ளான பிரேஸில் விமானத்தில் சென்றோர் மரணம்!

## இரண்டு நாள்களின் பின் சடலங்கள் கண்டுபிடிப்பு

கடந்த சனியன்று விபத்துக்குள்ளாகி காணாமற்போன பிரேஸில் விமானத்தில் பயணம் செய்த 33 பேரும் இறந்துவிட்டனர் என்று தெரியவந்துள்ளது.

கொலம்பியா நாட்டின் எல்லையியுள்ள சாபாலோடி ஒலிவென்கா என்னுமிடத்தில் இருந்து புறப்பட்ட பிரேஸில் நாட்டின் ரிகோலினா ஏரியார்ஸ் விமானம் அமேடசா மாநிலத்தின் மானஸ் என்னுமிடத்தில் தரையிறங்குவதற்கு 20 நிமிடங்களின் முன்னர் திடீரென விபத்துக்குள்ளானது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த விமானம் விபத்துக்குள்ளானது. ஆனால், விபத்து நடந்து இரண்டு நாளகள்வரை அதன் பகுதிகள் மீடகப்படாததால் பயணிகள் கதி குறித்துத் தெரியவில்லை. இந்த விமானத்தில் 33பயணிகள் மற்றும் 3 விமான ஊழியர்கள் இருந்தனர்.

தற்போது மானஸ்நகரில் இருந்து 16 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அடர்ந்த காட்டிற்குள் விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஹெலிகொப்டர் மூலம் இரவு பகலாகத் தேடியபோதுதான் விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விமானத்தில் பயணம் செய்த 30 பயணிகளும் 3 விமான ஊழியர்களும் இறந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விமானத்தின் கறுப்புப் பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து பிரேஸில் நாட்டு விமான கட்டுப்பாட்டு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். விமானத்தில் பயணம் செய்தவர்களில் நீதிபதியும் உயர் பொலீஸ் அதிகாரியும் அடங்குவர். (8)

# பலஸ்தீன அகதி முகாம் பகுதிகளுக்குள் இஸ்ரேலியப் படையினர் மீண்டும் நுழைந்தனர்

## ஆயுதம் கடத்தும் சுரங்கப் பாதைகளை தகர்ப்பதே நோக்கமாம்

பலஸ்தீன கிளர்ச்சியாளர்களுக்கெதிரான புதிய தாக்குதல் ஒன்றை முன்னெடுக்கும் வகையில் இஸ்ரேலிய டாங்கிப் படைகளும் புல்டோசர்களும் ராபாஹ் அகதிகள் முகாம்கள் இருக்கும் பகுதிகளுக்குள் நகரத் தொடங்கியுள்ளன.

நேற்று இரவு மட்டும் மோதல்களிலும் ஏவுகணைத் தாக்குதல்களிலும் 12 பேர் மரணமாகியிருப்பதாக பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலியர்கள், அகதிமுகாம் பகுதியில் மேலும் பல வீடுகளைத் தகர்த்துவிடுவார்கள் என்ற பீதியில் ஆயிரக் கணக்கான பலஸ்தீனியர்கள் அப்பகுதிகளைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரேலியரின் இந்த இராணுவ நடவடிக்கை சர்வதேச மட்டத்தில் கண்டிக்கப்பட்டபோதிலும், பலஸ்தீனக கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் கடத்துவதற்குப் பயன்படுத்தும் சுரங்கங்களை தகர்ப்பதே தங்கள் நோக்கம் என அறிவித்துள்ளனர். ராபாஹ் பகுதியில் சுரங்கப்பாதைகள் மூலம் கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் கடத்துவதற்கு முற்றுமுழுதாக முற்றுப்புள்ளிவைக்கும் விதத்திலேயே இந்தத் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் காஸாப் பகுதியில் இராணுவக் கவசவாகனம் ஒன்றை தகர்த்ததின் மூலம் கிளர்ச்சியாளர்கள் 5 படையினரைக் கொன்றதைத் தொடர்ந்து இஸ்ரேலியர் இந்தப் புதிய தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். அதிலிருந்து இஸ்ரேலியர்கள் இதுவரை அகதிமுகாம் பகுதியில் 100 வீடுகளைத் தகர்த்துள்ளனர். ஆயிரத்து நூறு பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

வீடுகளைத் தகர்க்கும் இஸ்ரேலியரின் நடவடிக்கை ஒரு போர்க்கால குற்றச்செயலாகும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய டாங்கிகளும புல்டோசர்களும் டெல்சுல்தான் பகுதியின் எல்லைப் பகுதியில் ஏனைய பகுதியிலிருந்து துண்டிப்பதற்காக பதுங்கு குழிகளை அமைப்பதையும், உயர்நத கட்டடங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டு வீட்டுக்கு வீடு சோதனை நடத்துவதையும் கண்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்கள். (ப-8)

# பாராட்டி மகிழ்ந்து இன்புறுகிறேன்



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் வடமராட்சி துன்னாலை அ.மெ.த.க.பாடசாலை, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் சிறந்த சமூக சேவையாளரும் சமயத் தொண்டரும் ஐயப்ப பக்தரும் கொழும்பு ஜெனரல் இன்டஸ்றீஸ லிமிட்டெட் முன்னாள் முகாமையாளரும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவருமான

**சமய சேவாமணி**

## உயர்திரு. இராசதுரை புஸ்பராஜா

அவர்கள் 20.02.2004 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி மகிழ்ந்து இன்புறுகின்றேன்.

- லயன்ஸ் திரு.கனகசபை சுந்தரலிங்கம்
சமாதான நீதிவான் *(காரை மணிகண்டன்).*

(32093) (26-12-21)


# ஜே.கே. அரம மற்றும் டிரில் பிட்ஸ்



உலகளாவிய ரீதியில் அரங்களின் பாரிய உற்பத்தியாளர்கள்

இலங்கையில் ஏக முகவர்

**ஜெனரல் இக்குவிப்மென்ஸ் லிமிட்டட்**

316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799 பக்ஸ்: 2434637



# இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் !

**கௌரவ் பப்படம்**

உன்னத சுவையின் கௌரவ நாமம்



உங்கள் கௌரவமான விருந்துகளை மேலும் கௌரவிக்க...

**கௌரவ் பப்படம்**




**கௌரவ்**
இம்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்.
44/1, 4th Cross Street, Colombo-11.
Tel : 2380130, 2380131 Fax : 2399832
E-mail : gaurav@visualnet.lk. / gaurav@pan.lk

Piccaso Ads



# STUDY IN LONDON

LONDON ல் உள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கான...

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு.

கலந்துகொள்ளும் மாணவர்களில் 05 வருக்கு 50 % கட்டணக் கழிவு வழங்கப்படும். (குலுக்கல் முறையில்)

JULY / SEPTEMBER 2004 இற்கான அனுமதிகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இடம் : MMIC மண்டபம், வெள்ளவத்தை.
(Elephant House Super Market மேல் மாடியில்)
காலம் : 28-05-2004 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : குழு 1 - காலை 9.00 - 12.00 வரை.,
குழு 2 - மாலை 2.00 - 5.00 வரை.

Call us & Reserve yours seats! 0114-203646.

**Courses Offered :**
**HND/BSC/BA/MSC/MA/BBA/BTEC/MBA,**

| | | |
|---|---|---|
| Business Studies | Engineering | Marine Engineering |
| Computing | E-commerce | Tele comminication |
| Marketing / Law | Internet Computing | Banking & Finance |

தகுதியான மாணவர்களுக்கு முதல் வருடம் விலக்களிக்கப்படும் (First Year Exemptions).
G.C.E. (A/L) ல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு கட்டணக்கழிவுகள் உண்டு.
G.C.E. (O/L) ஆங்கிலப் பாடத்தில் D சித்தி பெற்றவர்களுக்கும் விஷேட கழிவு உண்டு.
பட்டதாரிகளுக்கு மேற்படி MBA படிப்பதற்கு இலவச புலமை பரிசில்களும் உண்டு.
அடிப்படை அனுமதிக்கான தகமைகள் : G.C.E. (O/L).

மேலதிக விபரங்களுக்கு...
**EBS International (Pvt) Ltd.**
162B-1/1, Galle Road, Dehiwela. Tel/Fax : 0114-203646.
(Opp. to E-Bert Silva Petrol Shed)


# Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6204247 முதல் 6215084 வரை
சீட்டிழுப்பு இல. 33 திகதி 17-05-2004

வெற்றி எண்கள் **9 1 0 1 3 4** சுப்பர் எண் **19**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,94,23,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,94,23,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 5,000/- | 4,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 953 | 500/- | 4,76,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,554 | 50/- | 4,77,700/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 94,645 | 10/- | 9,46,450/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 95 | 1,000/- | 95,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 958 | 100/- | 95,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,472 | 20/- | 1,89,440/- |
| மொத்தம் | 1,15,792 | | 42,55,890/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 41,66,130/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,96,89,025/-**

தொடர் இல. 7182080 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மே 20 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**6210189-1-45**
**6208173-9-00**
**6205266-4-63**
**6208851-3-91**
**6208239-1-46**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# துயர் பகிர்கின்றோம்



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய
எம்முடைய சங்கத்தின் செயலாளரான
**திருமதி மனோகரன் குமுதினி** (கிரிஜா)
அவர்களின் அருமைத் தந்தையார்

## இராசையா நல்லையா

*(கிளி அண்ணர்)*


அவர்கள் 14.05.2004அன்று காலமாகிவிட்டார். அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பகிர்ந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- இமையாணன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.
இமையாணன் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

(32105) (24)

# மரண அறிவித்தல்

## சின்னப்பிள்ளை சிவலிங்கம்



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை சிவலிங்கம் அவர்கள் 17.05.2004 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் திருமதி தங்கப்பாக்கியத்தின் அன்புக் கணவரும காலஞ்சென்ற சின்னப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பவளம் தம்பதிகளின் மருமகனும் சிவயோகம் (இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர்) அவர்களின் அன்புச் சகோதரனும் சுபாஜினி, சிலோஜினி (சுவிஸ்), சுதர்ஜினி (சுவிஸ்), சத்தியேந்திரன், சத்தியசாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகாந்தன், நிர்மலதாசன் (சுவிஸ்), வசந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரோஜா (சுவிஸ்), ஏகபரநாயகி (சுவிஸ்), மேரின் தவராணி ஆகியோரின் மைத்துனரும் சண்முகராஜா (சுவிஸ்), அருமைலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஜெனார்த்தனி, ஜெனனி, துவாரகன், வித்தியா, பிரியதர்சினி, சோபினி, நிரு பகீரதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2004) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

*கம்பன் படிப்பகம்,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (24-21-12)

(32106)

யாழ்ப்பாணம்

உதயன்

# மீண்டும் டிக்ஸிற்

இந்தியாவில் பொதுத்தேர்தலை அடுத்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. தனித்து அறுதிப்பெரும் பான்மையைப் பெறாத இந்தியக் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டு, இடதுசாரிகளின் ஆதரவோடு இன்று ஆட்சிப்பீடம் ஏறுகின்றது.

இலங்கையிலும் இந்தியாவிலும் சுமார் மூன்று வார கால வித்தியாசத்தில் பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. ஆனால், முடிவுகள் ஏறத்தாழ ஒரே அடிப்படையைக் கொண்டவையாகத்தான் அமைந்திருக்கின்றன.

இங்கு ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. அங்கு ஆட்சியிலிருந்த வாஜ்பாய் அரசு வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

அந்த இரண்டு அரசுகளுமே தங்களுக்குரிய ஆட்சிக் காலத்துக்கு முன்னதாகவே தேர்தலைச் சந்தித்து ஆட்சிப்பீடத்தில் இருந்து அகன்றிருக்கின்றன.

இங்கும் பெண்மணி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தது. அங்கும் சோனியா காந்தியின் தலைமையிலான கூட்டமைப்பு ஆட்சிப்பீடம் ஏறுகிறது.

இந்த இரண்டு அரசுகளுக்கும் தலைமை தாங்கும் பெண்மணிகள் இருவருமே அரசியல் வன்முறைகளில் தங்கள் கணவன்மாரை இழந்தவர்கள்தாம்.

இரண்டு அரசுகளுக்குமே தனித்து அறுதிப்பெரும் பான்மை இல்லை. இங்கும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க, மார்க்ஸிஸ்டுகளான ஜே.வி.பியில் தங்கியிருக்கும் நிலை. அங்கும் சோனியா காந்தி, முற்றுமுழுதாக இடதுசாரிகளின் ஆதரவை நம்பியிருக்கும் நெருக்கடி.

இப்படிப்போகும் ஒற்றுமை வேறு ஒரு விடயத்திலும் பொருந்திப் போகுமா என்பதுதான் பலரின் கேள்வி.

இலங்கை அரசுத் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் விஜய குமாரணதுங்கவை ஜே.வி.பியினரே கொன்றனர் என்ற குற்றச்சாட்டு பகிரங்கமாக உள்ளது. ஆனால், அதை மறந்துவிட்டு ஜே.வி.பியை பங்காளிக் கட்சியாகச் சேர்த்து 'முன்மாதரி' காட்டியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

அதே பாணியை இந்தியாவின் புதிய அரசுக் கூட்டின் தலைவி சோனியா காந்தியும் பின்பற்றுவாரா என்பதுதான் அந்தக் கேள்வி.

சோனியாவின் கணவரான முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகளே கொன்றனர் என்பது குற்றச்சாட்டு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியை அணைத்துக்கொண்டு அதனுடன் கூட்டமைத்து கடந்த தேர்தலில் ஐ.தே.கட்சி அரசை வீழ்த்தியமை போல- இந்தியாவில் அரசை வழிநடத்தப்போகும் சோனியா காந்தியும் விடுதலைப் புலிகளுக்காக நாளும் பொழுதும் குரல் எழுப்பி தங்களையே புலிகளாகக் காட்டிக்கொள்ளும் வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றை அணைத்துக்கொண்டு, அவற்றுடன் கூட்டமைத்துத்தான் இந்தத் தேர்தலில் வாஜ்பாஜ் அரசை வீழ்த்தியிருக்கின்றார்.

இந்தப் பின்னணியில்தான் இந்தியத் தேர்தல் முடிவு தொடர்பாக விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன் வெளியிட்ட கருத்துககளை நாம் நோக்க வேண்டும். கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 'விடுதலை' நூல் வெளியீட்டு விழாவில் அவர் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியருந்தார்.

*"பொதுவாக, இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் இப்போது வரலாறு திரும்பிக்கொண்டிருக்கின்றது. வரலாறு காணாத முடிவு இந்தத் தேர்தலில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த வரலாற்று மாற்றத்துக்கு ஈழத் தமிழர்கள் சிந்திய கண்ணீர் - அடைந்த துன்பம் - எதிர்கொண்ட அவலம் - எல்லாமே காரணமாக அமைந்திருக்கின்றன.*

*"எனவே, இந்த மாற்றத்தின் மூலம் நாங்கள் அனைவருமே (விடுதலைப் புலிகள் உட்பட) மீண்டும் தமிழ் நாட்டில் கால்வைக்கும் ஒரு சூழல் விரைவில ஏற்படும்."*

- பாலகுமாரன் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். அது சாத்தியமாகுமா - இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஈழத் தமிழர்களுடனான இந்தியாவின் உறவைச் சீர்செய்யுமா - என்பதே இன்றைய சிந்தனைக்குரிய விடயமாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அரசியல் தலைமைத்துவங்களில் மாற்றம் ஏற்பட்டாலும் விடயங்களைக் கையாளும் அதிகார வர்க்கம் கொள்கை விடயங்களில் இலகுவில் தனது பிடியையும் ஆதிக்கத்தையும் விட்டுக்கொடுப்பதில்லை.

போதாக்குறைக்கு 1980களின் பிற்பகுதியில் இலங்கையில் இந்தியாவுக்கான தூதுவராக இருந்து, ஈழத் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிரந்தர மனக்கசப்பை உருவாக்குவதில் பெரும் பங்காற்றிய ஜே.என்.டிக்ஸிற், சோனியா காந்தி வழிநடத்தும் அரசுக்கு உத்தியோகபூர்வ பாதுகாப்பு விவகார ஆலோசகராக நியமிக்கப்படலாம் என்ற செய்தியும் வெளியாகியிருக்கின்றது.

அது உண்மையானால் - இந்தியப் பாதுகாப்பு விவகாரங்களில் மிக முக்கிய பதவிக்கு டிக்ஸிற் வருவாரானால் - ஈழத்தமிழர்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான நல்லுறவைச் சீரபடுத்த அந்த இரு தரப்பு மக்களும் விரும்பினாலும், அது சாத்தியமாவது சந்தேகமாகிவிடும்.

## காலத்தின் பதிவு



உழுதுணை (படம்: தீபன்)

## நான்கு மாதங்களாக நிலுவையாக இருக்கும்

# ரெலிக்கொம் கட்டண அறவீடு இலகு தவணை முறையின் கீழ்!

கொழும்பு,மே19

கடந்த நான்கு மாதங்களாக அறவிடப்படாமல் நிலுவையில் இருந்த ரெலிக்கொம் நிறுவனத் தொலைபேசிக் கட்டணங்கள் இம்மாதத்தில் இருந்து அறவிடப்படும். இக்கட்டணங்களை இலகு தவணை முறையில் செலுத்தக்கூடிய புதிய முறையும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தபால் தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி பிரதி அமைச்சர் பி.ரோஹித குணவர்த்தன.

நேற்றுமுன்தினம் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக விளக்கமளித்தார்.

கடந்த 4 மாதங்களாகத் தொலைபேசிக் கட்டணங்கள் அறவிடப்படவில்லை. அதற்கான கட்டணப்பட்டியலும் வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்படவில்லை. இதனால் தொலைபேசி பாவனையாளர் மத்தியில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

பாவனையாளர்களிடம் இருந்து கட்டணம் அறவிடுவதற்கான புதிய கட்டணப் பட்டியல் முறை ஒன்றை அறிமுகப்படுத்த ரெலிக்கொம் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்து வருவதாலேயே இத்தாமதம் ஏற்பட்டது என ரெலிகொம் நிறுவனம் அறிவித்துள்ளது.

- எனினும், நிறுவனத்தில் 49.5வீத பங்குகளை அரசு கொண்டிருப்பதனாலும், நிர்வாகத்துறையில் அரசின் பங்களிப்பு காணப்படுவதாலும், வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் மேற்படி விடயங்களைக் கையாள்வதை அரசு உறுதி செய்திருக்கிறது.

இதுவரை அறவிடப்படாத 4மாதங்களுக்குரிய கட்டணங்களை ஒரேமுறையில் வசூலிப்பதற்கு மாற்றாக 23 நாள்களுக்கு ஒருமுறை கட்டணங்களை வசூலிப்பதற்கு ரெலிக்கொம் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இம்முறை, இம்மாத இறுதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் - மேற்படி 4 மாதத்திற்குரிய நிலுவை செலுத்தித் தீர்ந்தபின் மீண்டும் வழமைபோல மாதாந்த அடிப்படையில் கட்டணங்கள் வசூலிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(க)

# இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,மே19

இலங்கை இலக்கியப் பேரவையின் 1977 - 2002 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா அடுத்த மாதம் 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் சிறப்புரையினை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து இலக்கியப் பேரவைப் பரிசில் வழங்கலும் கனகசெந்தி கதா விருதுப் பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

இந்த விழாவில் இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசு பெறுவோரின் விவரங்கள் வருமாறு:-

**ஆய்வு:-**

பத்திரிகையாளர் நடேசய்யர் - சாரல் நாடன் (1998), தமிழர் முழவியல் - சி.மகேந்திரன் (1999),

பத்திரிகையியலுக்கான ஓர் அறிமுகம் - ரூபன் மரியாம் பிள்ளை (2001), ஈழத்து இலக்கியச் செல்நெறி - கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (2001), ஈழத்துச் சிறுகதை வரலாறு - கலாநிதி க.குணராசா (2001).

**நாவல்:-**

வன்னியர் திலகம் - முல்லைமணி (1998), கலிகொண்ட மேகங்கள் - ப.ஆப்டீன் (1999), தர்மங்களாகும் தவறுகள் - அ.ஸ.அப்துஸ்ஸமது, மரணங்கள் மலிந்த பூமி -செங்கை ஆழியான் (2000) மனநதியில் சிறு அலைகள் - கே. விஜயன் (2000), இனி வானம் வெளிச்சிரும் - தமிழ்க்கவி (2002) கானலில் மான் - தெணியான் (2002).

**சிறுகதை:**

ஆளடையாள அட்டையும், ஐந்து ரூபாவும் - எஸ்.எச்.நிஃமத் (1997),

அல்சேஸனும் ஓர் பூனைக் குட்டியும் - தி.ஞானசேகரன் (1998), புதிய பரிமாணங்கள் - புலோலியூர் க.சதாசிவம் (1998), கசின் சிறுகதைகள் - கசின் சிவகுருநாதன் (1999), சிவாவின் சிறுகதைகள் வண்ணை சே.சிவராஜா (1999), வேட்கை - நீர்வைப் பொன்னையன் (2000), சுதாராஜின் சிறுகதைகள் - சுதாராஜ் (2000), சத்திய தரிசனம் - சிற்பி சரவணபவன் (2001). யுகமொன்று உடைகிறது - ஆரையம்பதி ஆ.தங்கராஜா (2001), முனியப்பதாசன் கதைகள் - முனியப்பதாசன்( 2001), சர்ப்ப வியூகம் - செம்பியன் செல்வன் (2002)

**கவிதை:-**

வடலி - சி.சிவசேகரம் (1999), இயல்பினை அவாவுதல் - அமரதாஸ் (1999), மீண்டும் வாசிப்பதற்காக - மேமன்கவி (1999), கனவுகளின் எல்லை - த.ஜெயசீலன் (2001), புள்ளிகளில் சில புள்ளிகள் - இக்பால் அலி (2001), ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள் - ச.வே.பஞ்சாட்சரம் (2002).

**காவியம்:-**

ஜின்னாவ்வின் இருகுறுங்காவியங்கள் ஜின்னாசரிபுத்தீன் (1997), யாழ்ப்பாணக்காவியம் - க.சச்சிதானந்தன் (1998).

**நாடகம்:-**

சங்கடங்கள் - இ.முருகையன் (2000), மானிடம் சாகவில்லை - எஸ்.முத்துமீரான் (2001), எங்கள் நாடு - அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை (2002).

**சிறுவர் இலக்கியம்:-**

பூதத்தீவுப் புதிர்கள் - செங்கைஆழியான் (1997), சிறுவர் நாடகங்கள் - வி.என்.எஸ்.உதயச்சந்திரன் (2000), நரியின் தந்திரம் - ஓ.கே.குணநாதன் (2000), பயங்கொள்ளலாகாது பாப்பா - ச.அருளானந்தம் (2000), காற்றின் குழந்தைகள் - செ.யோகநாதன்), குயில்கள் - கோகிலா மகேந்திரன் (2001), தங்கமுடிப்பூனையார் - செ.சத்யன் (2002),

**பல்துறை:-**

எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் டொமினிக் ஜீவா (சுயசரிதை) (1999), ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை - எஸ்.எம்.கோபாலரத்தினம் (2000), கார்ட்டூன் ஓவிய உலகில் நான் - சிரித்திரன் சுந்தர் (2001), ஆபிரிக்கக் கவிதைகள் தமிழாக்கம் - சோ.பத்மநாதன் (2001), வாழ்வற்ற வாழ்வு - சி.வேலுப்பிள்ளை (தமிழாக்கம்-சாரல்நாடன்), வடிவில்லாத வாத்துக்குஞ்சு தமிழாக்கச்சிறுவர் கதை - செ.யோகநாதன் (2002).

கனகசெந்தி கதாவிருது பெறுவோர் விவரம் வருமாறு:-

கருவேலங்காடுகள் தாண்டி (தினகரன்) - எம்.என்.அமானுல்லா, வேட்டை (தினக்குரல்) - புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், ஜலசமாதி (தினகரன்) - ஏ.எஸ்.உபைத்துல்லா, வீடு (ஈழநாதம்) - சி.கதிர்காமநாதன் ஆகியோர்களுக்கான விருதுகளை இரசிகமணி கனக செந்திநாதன் கதா விருதுக் குழுவினர் வழங்கவுள்ளனர்.

(10-ரி)

## நாளை

வைகாசி 07
வியாழக்கிழமை
(20.05.2004)
திதி : பிரதமை
பகல் 12.22 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
இரவு 11.38 வரை.
சுபநேரம்: 7.22 - 8.52
ராகுகாலம்: 01.22 - 2.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அன்பளிப்பாகக் கிடைக்கும் எதுவும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது. அதன் மதிப்பை பணத்தால் எடை போடுவது தவறு.

# யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தின்
# ஒய்வு பெற்ற முதல்வர், செல்வி அ.கந்தையா அவர்களின்
# பணிநலம் பாராட்டுவிழாச் சிறப்பிதழ் - 2004.05.19



## செல்வி அன்னலட்சுமி கந்தையா

(இலங்கை அதிபர் சேவை தரம்-1)

**கலை இளவல், இந்துநாகரிக டிப்ளோமா**

**கல்வி டிப்ளோமா**

### சேவை விவரம்

| | |
|---|---|
| 01. யா/புங்குடுதீவு ம.வி. | 10.06.77 -08.08.77 |
| 02. யா/கனகரத்தினம் ம.வி. | 09.08.77-09.11.80 |
| 03. யா/இந்துமகளிர் கல்லூரி | 10.11.80-10.05.81 |
| 04. யா/கனகரத்தினம் ம.வி. | 11.05.81-12.05.83 |
| 05. யா/இந்துமகளிர் கல்லூரி | 13.05.83 21-01-91 |
| 06.யா/பெரியபுலம் ம.வி. | 22.01.91-18.09.03 |

### அன்பும் பண்பும் நிறைந்த
### செல்வி அ.கந்தையா அதிபர்

எனது மாணவப் பருவத்தில்
இரு "கந்தையா "க்கள்
என்னில் செல்வாக்குச் செலுத்தினர்
ஒருவர் பொன்.கந்தையா
வடமாகாணத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் நா.உ.என்று
அழைக்கப்பட்டவர்.
அடுத்தவர் "கந்தையா"அண்ணை என
எம்எல்லோராலும் அன்பாகக் கூப்பிடப்பட்டவர்- யாழ்
இந்துவில்
செல்வி அன்னலட்சுமி அதிபர் இன்றுபாராட்டுப பெறுபவர்
கந்தையா "அண்ணை"யின் அன்பு மட்டுமல்ல
அவரின் மகன்மார் என் சகமாணவர்கள்
அவ்வேளை செல்வி யாழ்.இந்து மகளிர் மாணவி- இவை
எல்லாம் சேர்ந்ததால்
இவரின்பால் எனக்கு ஓர் அன்பு
அதன் பரிசு-நான் அவருக்கு வழங்கிய
"அதிபர்" பதவி
அவர் தந்த பரிசு - நல்ல அதிபராகக் கல்லூரியை
வளர்த்தது
"பெரியபுலம்" என்றால்
"கனகசிங்கம்" தான் மனதில் வரும்
கட்டைபறிச்சான் என்ற
கிழக்கின் குக்கிராமம் தந்த
கல்வியியற் சிந்தனையாளன்
அவன் அதிபர்
செல்வி அன்னலட்சுமி உப அதிபர்
கட்டுக்கோப்பான நிர்வாகம்
அன்பால் பிணைந்த ஆசிரியர் குழாம்
சொல்லவும் வேண்டுமா கல்லூரி வளர்ச்சிபற்றி?
கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் முகவரி கிடைத்தகாலம்
இவர்களின் பள்ளிக்கு
நண்பனாக-
அன்பனாக-
ஆதரிப்பவனாக-
செயலாளராக-
பலமுறை சென்றுள்ளேன்
வரவேற்பில் எவ்வித வேறுபாட்டையும்
நான் "துளாவியும" காணமுடியவில்லை
அதுதான் முகாமைத்துவம்
செல்வியின் தற்துணிவினை நான் பலமுறை
பாராட்டியுள்ளேன்
பெரியபுலப்பள்ளி கண்டு
தட்டிக்கொடுத்தேன்
துரும்பைத் தூணாக்கியவர்கள்
இந்தப் புதிய பாரம்பரியத்தை
மேலும் வளர்த்தெடுத்த
செல்வியைப் புகழ்ந்து பாராட்டுகிறேன்
செல்வி அவர்கள் என்றும் அதிபர்தான்
கல்விச் சேவை வாழ்நாள் வரை என்பர்
அச்சேவையில் அவரை அறிந்தோர்
ஈடுபடுத்தவேண்டும் அது இன்று எமக்கு மிகவும்
வேண்டியது
சம்பந்தப்பட்டோர் செய்வார்கள்
எனத் திடமாக நம்புகின்றேன்
பெரியபுலம் பள்ளி யாழ்ப்பாணத்தில் ஒரு
புதிய வரலாற்றைப் படைத்ததையும் கூறவேண்டும்
அதிபர் அதிகாரியாகிச் செல்ல
உப அதிபர் அதிபராகினார்
அதிகாரிகளின் சிறந்த நிர்வாகத் திறமையினால்
"அதிகாரி" அதிபரின்
மேலதிக அதிபராகினார்
அதிபர் ஓய்வுபெற
மேலதிக அதிபர் -அதிபரானார்-புதிய அத்தியாயம்-
இதனை எதிர்கொள்ள
மனப்பக்குவம் மட்டுமன்றி
சேவையைக் கடமையாகப்பார்க்கும்
பக்குவமும் வேண்டும்
இதற்கு உரைகற்கள்தான்
கனகசிங்கமும்
செல்வி அன்னலட்சுமியும்!
அதிபர் அன்னலட்சுமி
என்றும் குட்டிபோட்டநாய்போல
பெரியபுலத்தையே சுற்றிச் சுற்றித் திரிவார்
அவரின் அனுபவத்தை
ஆர்வத்தை
அறிவை
அன்பை
அரவணைப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்
அதிபர் மகிழ்வுடன்
வாழ வாழ்த்தும் நான்
என்றும் ஓர் அன்பன் மட்டுமே!

**சுந்தரம் டிவகலாலா**
முன்னாள் செயலர்,
கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு,
வ.கி.மா. தொழில்நுட்ப ஆலோசகர்
ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், வவுனியா.

### பள்ளி மேம்பாட்டையப் பாடுபட்ட முதல்வர்

நீலக்கடல் தாலாட்ட பால்வளமும் பனைவளமும் ஆள் வளமும் அறிவுவளமும் மிக்க நெடுந்தீவுக் கிராமத்தில் திரு.இராமநாதர் கந்தையாவுக்கும் திருமதி கந்தையா சின்னம்மாவுக்கும் மூத்த மகளாக 19.09.1943 இல் செல்வி அன்னலட்சுமி பிறந்தார்.

இவர் தனது தொடக்க நிலைக் கல்வியை நெடுந்தீவிலும் - இடை நிலைக்கல்வியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றார். கல்லூரி ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற மாணவியாகிய இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியானார். இந்து நாகரிகத்தில் டிப்ளோமாப்பட்டமும் பெற்றார். ஆசிரியப் பணியைத் தொடங்கு முன் சமூகசேவை உதவியாளராகச் சிலகாலம் கடமையாற்றினார்.

10.06.1977 இல் ஆசிரியநியமனம் பெற்று யாழ்.புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கடமையேற்றார். பின் 09.08.1977 இலிருந்து 09.11.1980 வரை யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும் 10.11.1980 இலிருந்து 10.05.1981 வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் 11.05.1981 இலிருந்து 12.05.1983 வரை யா.கனகரத்தினம் ம.வியிலும் 13.05.1983 இலிருந்து மீண்டும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கடமையாற்றினார்.

அதிபர் தரத் தேர்வில் சித்தி எய்தி யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் துணைமுதல்வராகப் பதவியேற்று 22.01.1991 இலிருந்து முதல்வரின் முகாமிப்புக்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார். கடமையுணர்வும் துணிச்சலும்மிக்க வீரப் பெண் மணியாகத்திகழ்ந்த செல்வி கந்தையா 26.11.1996 இல் பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். பின்பு பள்ளியின் தரத்தை உயர்த்துவதில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்.

பள்ளியில் மிளிர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான ஆய்வகம், நூலகம் மூன்று மாடிக்கட்டடத்துக்கான அடித்தளம் போன்றவை இவரது அயராத முயற்சியால் எம் மாணாக்கருக்குக் கிடைத்தவை.

மாணாக்கரின் முன்னேற்றத்துக்குரிய கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பாடுபட்டவர். கல்வி மற்றும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டதுடன் பின்தங்கிய மாணவர்களுக்குத் தனிப்பட்ட நலனிலும் உதவிகளை வழங்கியவர்.

இவருடைய காலத்தில் மாணவர்கள் தமிழ்த்திறன் போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் மாகாணநிலை, தேசிய நிலைக்குத் தெரிவாகியது மட்டுமல்ல, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணத்தேர்வு, உயர்தரத்தேர்வுகளில் சிறப்புத்தேர்ச்சி-சித்திகளையும் முன்னேற்றத்தினையும் பெற்றுள்ளனர்.

ஆசிரியர்களது வாண்மையை ஊக்குவித்து அவர்களை அன்போடு வழிநடத்தியவர். அவர்களுடன் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் ஆளணியினர், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் போன்றோரது ஒத்துழைப்புடன் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் உறுதியுடன் நின்று 18.09.2003 வரை பள்ளியைத் தரமுயர்த்திப் பெயர்விளங்கச் செய்த பெருமைமிக்க முதல்வர் இவர். இவரது ஓய்வுக்காலம் சிறப்புற்று விளங்கவும் நீண்ட ஆயுளோடு மேலும் பல சமூகப் பணிகளை ஆற்றவும் வாழ்த்துகிறோம்.

**- பள்ளிக்குழுமம்.**

### மழையின் புன்னகை போல் மகிழும்
### செல்வி அன்னலட்சுமி கந்தையா வாழ்க!!

சமுத்திரம் தாலாட்டும் தங்கத்தீவில் மலர்ந்த தாமரைச் சூரியன் செல்வி அன்னலட்சுமி கந்தையா வாழ்வின் முழுமையும் கல்விக்குள் நனைந்து யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் எட்டு ஆண்டுடன் அதிபராகப் பணி சுமந்து பணியில் ஓய்ந்திடும் பவளத் தேராகி வாழ்கின் றார்.பட்டதாரி வாழ்வில் நிறைந்து வாழும் சமூகத்தைக் கவர்ந்து மாணவ நிலாக்களை மணிமுடி சூடும் மின்னல் களாக உயர்த்தியுள்ளார்.புலனுக்கு விளைச்சலை அதிகரித்த பெரியபுலம் மகா வித்தியாலயம், அமைதியான அதிபரின் மௌனப் புன்னகையால் பல்வேறு மகத்துவங்களைத் தன்னுள் நிறைத்துள்ளது.இவர் அதிபர் சேவையுடன் தொழில் நுட்பக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளராகவும் உயர்தர வகுப்பில் இந்து நாகரிக விடைத்தாள் குழுவின் தரப்படுத்தல் தலைவராகவும் பணிசுமந்தவர். மழை ஓய்ந்த பின் மலர்கள் மழைத்துளிகளின் ஆலாபனையில் அசைகின்றன,வளர்கின்றன, சிரிக்கின்றன.அதே போல் செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்களும் அதிபர் சேவையில் மழையாகக் கரைந்தாலும் மக்கள் சேவையில் நிலவாக வாழ்ந்து நீடூழி சேவை செய்திட வாழ்த்துக்கள். கல்விக்காக,பாடசாலைக்காக வாழ்வின் முழுமையை அர்ப்பணித்த செல்வி அன்னலட்சுமி கந்தையாவின் சுவாசத்தில் எமது பாடசாலைச் சமூகம் ஆளுமை நிறைந்த நிமிர்வுகளைச் சுவாசிக்க வேண்டும்.ஓய்வு பெற்ற அதிபரின் மணிவிழா நாள்கள் மகிழ்ச்சியில் மகிழட்டும்!!!

**ப.விக்னேஸ்வரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

### பெரியபுலம் தலைநிமிரப் பெரும் பணி ஆற்றியவர்

மக்கள் குழுமத்தின் முறைசார்ந்த அமைப்புக்களில் முதன்மையானவை பள்ளிகள் ஆகும். பள்ளிகளிலேதான் நாட்டின் தலைவர்கள் உருவாகின்றார்கள், உருவாக் கப்படுகின்றார்கள்.

முகாமிப்புச் செய்கின்ற முதல்வர்கள், ஆசிரியர்கள் ஏனைய பணியாளர்கள்,மக்கள் குழுமத்தினர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து திட்[illegible] பணியாற்றும்போது தான் பள்ளிகள் எதிர்பார்ப்புக்களை [illegible]நிறைவு செய்யும் நிறுவனங்களாகச் சிறக்கின்றன.

பல்வேறு வகைப்பட்ட சூழல்களில் நின்றும் பல்வேறு தனியார் வேறுபாடுகளுடன் வருகின்ற மாணாக்கரின் உள்ளங்களில் நல்லெண்ணங்களையும், நற்பண்புகளையும் ஊட்டி அவர்களை வாழ்க்கைக்கு உகந்தவர்களாக ஆக்கும் பெரும் பணியினைப் பள்ளிகள் ஆற்றுகின்றன.

பள்ளிகள் சீராக இயங்குவதற்கு உரியபணிகளை ஒருங்கிணைக்கின்ற பணிகளைச் செம்மையாகச் செய்கின்ற முதல்வர்கள் இருக்கின்ற பள்ளிகளே முதன்மை நிலையை அடைகின்றன.

இந்த வகையில், பள்ளியின் சீரான இயக்கத்திற்கு அச்சாணியாக இருந்து யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அரிய பணியாற்றிய செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்கள் தொடர்ந்தும் கல்விப் பணியாற்ற வேண்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**திரு.க.கனகசிங்கம்**
**முதல்வர்,**
**யாழ்/பெரியபுலம் மகாவித்தியாலயம்**

### துணிவுமிக்க நல்லதிபர்

சமூகத்தின் பொறுப்பான உயர்ந்த பதவி அதிபர் பதவியாகும். யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் உயர்வுக்கு அருந்தொண்டாற்றியவர் செல்வி அ.கந்தையா அவர்களே. இவர் இவ்வித்தியாலயத்தின் உப அதிபராய், அதிபராய்த், கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்.

அதிபர் கடமையோடு மட்டும் நிற்காது மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு நல்லாலோசனை வழங்கி வழிகாட்டியாகவும் வாழ்ந்தவர். அன்பு வார்த்தைகளால் மாணவர்களை, ஆசிரியர்களை அரவணைத்துக் கொண்டவர். துணிவும் செயற்பாடும் மிக்க நல்லதிபர்.

சைவபரிபாலன சபையால் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட சமயபாடக் கருத்தரங்கில் சிறந்த விரிவுரையாளராகத் திகழ்ந்தவர். அத்துடன், பாடவிடய அறிவு கைவரப் பெற்றவர். மாணவர்களின் உளநிலைக்கேற்ப ஆசிரியர்களின் பாடபோதனை அமையவேண்டும் என எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கம் தந்தவர். அதிபர் பதவிக்குத் தம்மை அர்ப்பணிப்புச் செய்து வாழ்ந்தவர்.

செல்வி அ.கந்தையா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்டாலும் கல்விச் சமூகத்துக்குத் தனது சேவையை வழங்கவேண்டும் என நல்லாசி கூறி அமைகிறேன்.

**சைவப்புலவர் வ.கந்தசாமி**
முன்னாள் துணைமுதல்வர்
(யா.பெரியபுலம் ம.வி.)
தலைவர், சைவ பரிபாலனசபை,யாழ்ப்பாணம்.

(C/35066)

(12ஆம் பக்கம் பார்க்க)

# கரையோரப் பிரதேசத்தில் புதுவாழ்வு பிறக்க ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் அவசியம்

குடாநாட்டின் மூத்த புவியியற்றுறைப் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை வரையும் தொடர் கட்டுரையன் மூன்றாம் பகுதி கடந்த 17.05.2004 அன்று வெளியாகி இருந்தது. அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது

யாழ். நகரின் நீண்ட கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்கிறார் கட்டுரையாளர்.



## யாழ். நகர கரையோரப் பகுதி ஆய்வு

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை

**பண்ணைப் பொலீஸ் வீடுதிக் குடியிருப்பு**

யுத்தத்தால் அழிவுற்ற இக்குடியிருப்பு இன்றும் புனருத்தாரணம் செய்யப்படவில்லை. இப்பகுதி பற்றையும், புதர்களும் மண்டிக்காணப்படுகிறது. இங்கிருந்த பண்ணை மீன்சந்தையும், மிருகவைத்திய அலுவலகமும் இன்றும் புனருத்தாரணம் செய்யப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

**கோட்டைப் பகுதி**

கோட்டைக்குள் பொலீஸ் குடியிருப்பு, சிறைச்சாலை, நீதிவான் இல்லம், தேவாலயம் என்பன செயற்பட்டு வந்தன. இன்று கோட்டைப் பகுதி அழிவுக்குட்பட்டு தெற்குச் சுவர் இல்லாமலும் முழுப்பகுதியும் புதர் மண்டி அகழிகள் சதுப்பு நிலங்களாக மாறியுள்ளன. இப்பகுதியின் எதிர்காலப் பயன்பாடு கேள்விக்குரிய விடயமாக உள்ளது.

**பொலீஸ் நிலையக் கட்டடப் பகுதி**

பழைய பொலீஸ் நிலையம் அமைந்த பகுதியில் இருந்த கட்டடங்களின் இடிபாடுகள் யாவும் நீக்கப்பட்டு இன்று சமபூமியாக இப்பகுதி காணப்படுகிறது. இதற்கு முன்னால் அமைந்துள்ள துரையப்பா விளையாட்டு அரங்கு புனருத்தாரணம் செய்யப்பட்டும் பின்னர் விரிவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டும் மேம்படுத்தப்பட்டு உள்ளது.

**மாநகரசபைப் பகுதி**

இங்கு இடிந்து அழிந்துபோன கட்டடங்களின் இடிபாடுகள் யாவும் நீக்கப்பட்டு, சமதரையாக உள்ளது. மக்கள் நடமாட்டம் அற்ற பகுதியாக உள்ளது. மாநகரசபைக்கு முன்னால் இருந்து, பின் அழிந்துபோன சுப்பிரமணியம் பூங்கா புனருத்தாரண நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளது. திறநத வெளியரங்கும் அழிந்த நிலையிலேயே காணப்படுகிறது. நீதிவான் மன்றக் கட்டடத் தொகுதியும் புனரமைக்கப்பட இருப்பதாக அறியப்படுகிறது. யாழ்ப்பாண நூல்நிலையம், மெதடிஸ்த தேவாலயம் என்பன புதுப் பொலிவு பெற்றுள்ளன.

**மாநகரசபைக்கும் சுங்கப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதி**

இப்பகுதியில் அமைந்திருந்த கட்டடங்கள் போராலும், வயதாலும் பெரும் அழிவுக்குட்பட்டுள்ளன. முன்னர் துடிப்பாகச் செயற்பட்ட இப்பகுதி இன்று பொலிவிழந்து அகதிகள் தங்கும் இடமாக உள்ளது. இப்பகுதி நகரின் முக்கிய ஸ்தானத்தில் அமைந்தும், சிறந்த வீதி வலைப்பின்னலைக் கொண்டிருப்பதாலும் மீள அபிவிருத்தி செய்யக்கூடிய உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. எனவே, உரிய முறையில் அபிவிருத்தியை முன்னெடுப்பது அவசியமாகின்றது.

**அலுப்பாந்தி**

இக்குடியிருப்பு 1960களுக்கு முன்னர் குடாநாட்டில் ஒரு முக்கிய துறையாக இருந்தது. யாழ்ப்பாண இராஜ்ஜிய காலத்திலிருந்தும் பின், மூன்று அந்நியராட்சிக் காலத்தின்போதும் கடல்வழிப் போக்குவரத்திலும், வியாபாரத்திலும் இத்துறை முக்கிய இடம் பெற்றிருந்தது. அலுப்பாந்தியில் இருந்து ஊர்காவற்றுறை வரை யாழ்ப்பாணக்கடல் நீர் ஏரி ஊடாக பாய்க்கப்பல் பயணம் செய்யக்கூடிய முறையில் வாய்க்கால் வெட்டப்பட்டிருந்தது. இன்று இக்கடல் வாய்க்கால் தூர்ந்து போய் உள்ளதுடன் இரு துறைகளின் செயற்பாடுகளும் அற்ற நிலையில் உள்ளன. அலுப்பாந்தித் துறையின் முக்கியத்துவம் காரணமாக இத்துறைக்கும் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற்கும் இடையே புகையிரதப் பாதை இணைப்பு அமைக்கப்பட்டு 1960 வரை போக்குவரத்து இடம்பெற்றிருந்தது. இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஓடு, அரிசி மளிகைப் பொருள்கள், மாடு போன்றவை இத்துறையில் இருந்து இலங்கையின் பிறபகுதிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டு வந்தன. இன்று இப்பாதை கைவிடப்பட்டுள்ளது. இப்பாதையில் இன்று அனுமதியில்லாமல் கட்டடங்கள் அமைக்கப்பட்டதைக் காணலாம். அலுப்பாந்தி துறைமுகப் பகுதியில் உள்ள கிட்டங்கிகளிலும், கட்டடங்கள், காணிகளிலும் அத்துமீறிய குடியேற்றங்களை இன்று காணலாம். எனவே, சரியான முன்நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின், பின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது சிரமமாக இருக்கும்.

**றெக்கிளமேஷன் பகுதி**

இப்பகுதி கடற்பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாகும். குருநகர் குடியிருப்புப் பகுதியில் இருந்தே மக்கள் இங்கு குடியேற்றப்பட்டனர். மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மக்களே இங்கு கூடுதலாக வாழ்கின்றனர். இங்கு வீடுகள் மிக நெருக்கமாகவும், மக்கள் குடியடர்த்தி உயர்வாகவும் இருப்பதால் அடிப்படைத் தேவைகள் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பல உள. கடற்கரையில் இராணுவவேலி இருப்பதால், குறிக்கப்பட்ட இடம் வழியாகவே மீனவர் கடலுக்குச் செல்ல முடியும். சில பகுதிகளில் இடம்பெயர்நத மக்கள் மீளக்குடியமர முடியாதிருப்பதால், அவர்கள் சுங்கப்பகுதிக்கு அண்மித்த இடங்களில் தற்காலிகமாக வாழ்கின்றனர்.

**தொடர்மாடி வீட்டுத் திட்டம்**

இத்திட்டம் 1980களில் அமைக்கப்பட்டது. இராணுவம் சிறிது காலம் இங்கு நிலைகொண்டிருந்தது. 1980களின் பிற்பகுதியில் இராணுவம் வெளியேறிய பின் மக்கள் இங்கு குடியேறினர். இத்தொடர்மாடித் திட்டம் 5 அடுக்குகளைக் கொண்டிருந்த போதும், இதற்கு மின்தூக்கி இணைக்கப்படாமையால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இங்குள்ள மக்களின் சமூக - பொருளாதார பின்னணிக்கும் மாடி வீட்டு வாழ்க்கை முறைக்கும் இடையே ஒத்துப்போகாத தன்மை காணப்படுகிறது. குடும்ப அங்கத்தவர்களின் உயர் எண்ணிக்கைக்கு ஏற்ப வீட்டு நிலப்பரப்பு மிகச் சிறியதாக இருப்பதும் போதிய அடிப்படைத் தேவைகள் இல்லாதிருப்பதும் வீட்டின் நாளாந்த குப்பை, கூளங்களை உரிய முறையில் அகற்றும் வசதியின்மையும் கவனிக்கத்தக்கவை.



**தொடர்மாடிக்கும் பாஷையூருக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதி**

1995இற்கு முன்னர் இப்பகுதியில், குறிப்பாக வீதிக்குத் தெற்கில் தனியார்கள் கடலிலிருந்து நிலமீட்சி செய்து வீடுகள், கட்டடங்களைக் கட்டுப்பாடற்ற முறையில் அமைத்துள்ளனர். இதனால் குடியிருப்பு நடவடிக்கைகள் இங்கு இடம்பெறலாயிற்று. இப்பகுதியில் Holy Cross மருத்துவமனைக்கு முன்னால் உள்ள கரைப் பகுதி தவிர ஏனைய பகுதிகளில் நிலமீட்சிக் கட்டடச் செயற்பாடுகள் நடைபெற்றன. இச்செயற்பாடுகள் 1995 இடப்பெயர்வால் நிறுத்தப்படாது இருந்திருப்பின் குருநகரும் பாஷையூரும் தொடர்ச்சியான கட்டடத் தொகுதிகளால் இணைந்திருக்கும்.

இன்று கரையோர வீதி, மக்கள் பாவனைக்குத் திறக்கப்படாததாலும், இராணுவவேலி அமைக்கப்படாததாலும் இடம்பெயர்ந்த மக்கள் இன்றும் இங்கு மீளக்குடியேறவில்லை.

**பாஷையூர்**

இது ஒரு மேட்டில் அமைந்துள்ள பழைய புகழ்பெற்ற கரையோர மீன்பிடி குடியிருப்பு ஆகும். இதன் தெற்குப்பகுதி கடலாகவும் வடபகுதி முன்னர் குளமாக இருந்து இன்று நிலமீட்சி செய்யப்பட்ட விளையாட்டுத் திடலாகவும் உள்ளது. கடற்கரையில் அமைந்துள்ள சந்தைப் பகுதியும் அழகையா அரங்குப் பகுதியும் அமைந்துள்ள இடம் நிலமீட்சியினால் கிடைக்கப் பெற்றதாகும். இப்பகுதி மக்களின் நிலத்தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பெரியளவிலான நில மீட்சித் திட்டம் வகுக்கப்பட்டிருந்த போதும், யுத்தம் காரணமாக அது கைவிடப்பட்டது. நிலம் ,வீடு, குடிதண்ணீர், மகளிர் தொழில் என்பன கவனத்திற்குரிய பிரச்சினைகளாகும்.

**எழிலூர், மகேந்திரபுரம், வசந்தபுரம்**

இக்குடியிருப்புக்கள் பாஷையூருக்கும் கொழும்புத்துறைக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியில் 1980களின் பின்னர் ஏற்பட்ட குடியிருப்புக்கள் ஆகும். தரவைகளாகவும், கடற்கரைத் தாழ்நிலங்களாயும் இருந்த நிலங்களை மீட்டு குடியிருப்புக்களாக அமைக்கப்பட்டுள்ளன. குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளிலிருந்து மக்கள் இங்கு குடியேறினர். குடிதண்ணீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் போன்றன முக்கிய பிரச்சினைகளாக இருந்தன. 1995 இடப்பெயர்வும் 2000 ஆண்டு யுத்தமும் இப்பகுதிகளைப் பெரிதும் பாதித்துள்ளன. தற்போது கரையோரமாக இராணுவவேலி அமைக் கப்பட்டிருப்பதால், கரையோர வீதியில் உள்ள வீடுகளிலும் வீதிக்குத் தென்புறமாக உள்ள இடங்களிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

**கொழும்புத்துறை**

இது, குடியிருப்புப் பரந்ததொரு பிரதேசத்தை உள்ளடக்கியிருப்பினும் இங்கு கரையோரப் பிரதேசம் பற்றியே நோக்கப்படுகிறது. 1995 இடப்பெயர்வாலும், 2000 ஆண்டு யுத்தத்தாலும் இப்பரதேசம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. சமூக - பொருளாதார, செயற்பாடுகள் பெருமளவு சீர்குலைந்துள்ளன. கொழும்புத்துறை மீனவக் குடியிருப்பு பகுதி வீடு, குடிதண்ணீர் மற்றும் அடிப்படைத் தேவைகளில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. முன்னர் இப்பகுதியில் தும்புத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் தற்போது தம் தொழிலை மீளக்கட்டியெழுப்புவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். கொழும்புத்துறைக்கு அப்பால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் இருப்பதால் மக்கள் அப்பகுதிகளுக்குச் செல்லமுடியாதுள்ளது.

**கிழக்கு அரியாலை**

இது பழைய குடியிருப்புக்களைக் கொண்ட பகுதியாகும். நாவலடி, காடு, முணங்குக் குடியிருப்புகள் பழையனவாகவும், மணிப்புரி, உதயபுரம், பூம்புகார் குடியிருப்புகள் அண்மையில் உருவாகின; புதியவையாகவும் விளங்குகின்றன. இக்குடியிருப்புகள் யாழ்ப்பாண நகரிலிருந்து தூரத்தில் அமைந்திருந்தமையால் போக்குவரத்து மற்றும் பொருள்களையும் சேவைகளையும் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டன. இப்பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்டங்கள் நெற்காணிகள், பனை வளவுகள் ஆகியவற்றின் உடைமைக்காரர் பெருமளவில் கிழக்கு அரியாலையை விட மேற்கு அரியாலை, யாழ்ப்பாணத்திலேயே வாழ்கின்றனர். மணிப்புரி, உதயபுரம், பூம்புகார் வீற்ற மக்களுக்கான குடியேற்றத் திட்டங்களாகும். இங்கு வாழ்ந்தோர் யாழ்ப்பாண நகரை முறைசாராத் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

1995 இடப்பெயர்வுக்குப் பின்னர் மீள்குடியமர்வு இடம்பெறவில்லை. மேலும் இப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டுள்ளது. 2000 ஆண்டு யுத்தம் காரணமாக தாவரப் போர்வை பெருமளவு அழிவுக்குட்பட்டது.

கல்லுண்டாய்க்கும் முணங்குக்கும் இடைப்பட்ட கரையோரப் பிரதேசம் இன்று பௌதிக, சமூக பொருளாதார, சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. நன்கு திட்டமிட்டு, ஒழுங்கான முறையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டால் இக்குறித்த பிரதேசம் மாத்திரமன்றி, யாழ்ப்பாண நகரும் முழுமையான நன்மை அடையும். 1980களின் பின்னர் கரையோரப் பிரதேசம் பாதிக்கப்பட்டதால், யாழ்ப்பாண நகரில் பல முக்கிய செயற்பாடுகள் கரையோரப் பகுதியிலிருந்து நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகள் நோக்கி நகர்கின்றன. இதனால் கரையோரப் பகுதியும், உட்பகுதியும் வெவ்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. கரையோரப் பகுதியை விட்டு மக்கள் செயற்பாடு உள்நோக்கி இடம்பெயர்வதால் விவசாய நிலங்கள் மாற்றுநிலப் பயன்பாட்டிற்கு மாறுகின்றதும், காணி விலை உயர்வடைவதும் குடியடர்த்தி அதிகரிப்பதும், வாழ்விடப் பரப்புகள் வர்த்தக மையங்களாக மாறுவதும் பிரச்சினைக்குரியதாக விளங்குகின்றன. அதேநேரம், கரையோரப் பகுதி மேன்மேலும் வறுமைநிலை அடைவதையும் சமூக, பொருளாதார நிலையில் பின்னோக்கிச்செல்வதையும் காணமுடிகின்றது. இதனால் இப்போக்கினைத் தடுத்துநிறுத்தி கரையோரப்பிரதேசத்தில் புதுவாழ்வு பிறக்க, ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்படவேண்டும். மத்திய, மாகாண, மாவட்ட, மாநகரசபை நடவடிக்கைகள் மூலம் கூடிய வளமும் கவனயீர்ப்பும் இப்பிரதேசத்திற்குக் கிடைக்குமானால் அபிவிருத்தி முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு குறுகிய காலத்தில் முன்னேற்றத்தைக் காணலாம். (முற்றும்)

# புனரமைப்புப் பணியில் ஈடுபடும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு

## ஜனாதிபதி நடவடிக்கை

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுவரும் சகல அரச நிறுவனங்களையும் ஒரே செயற்பாட்டு அமைப்பின் கீழ் ஒருங்கிணைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

தற்போது புனரமைப்புப் பணிகளில் உயர்மட்ட நிறுவனமாக நிவாரணங்கள் தொடர்பான புனர்நிர்மாணம் மற்றும் புனரமைப்பு அமைச்சு செயலாற்றி வருகிறது. வடக்குக் கிழக்கின் சகல புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப்பணிகளை பயன்தரும் வகையிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெருமளவு வசதிகள் கிடைக்கக்கூடிய வகையிலும் நடைமுறைப்படுத்துவதே ஒருங்கிணைப்பின் நோக்கமாகும்.

தற்போது இப்பணிகள் தொடர்பாகப் பெரும் எண்ணிக்கை கொண்ட நிறுவனங்கள் செயற்படுகின்றன. இதனால் புனர்நிர்மாணப் பணிகளைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதில் தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அத்துடன், பெருமளவு வளங்கள் விரயமாவதோடு, பண ஒதுக்கீடுகள் முறையற்ற விதத்தில் கையாளப்படுவதும் தெரியவந்துள்ளன. இதனைத் தவிர்க்கவே சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக இலங்கை அரச நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி எம்.எஸ்.ஜயசிங்க நிவாரணங்கள் தொடர்பான மேற்படி புனரமைப்பு அமைச்சின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அனுபவம் வாய்ந்த திறமைமிக்க அதிகாரிகளும், ஆலோசகர்களும் கொண்ட குழு அவருக்கு அனுசரணை வழங்கவுள்ளது. (ஒ-ரி)

# பல் மருத்துவ பீடத்திற்குப் புதிய பீடாதிபதி

பேராதனை,மே19

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல்மருத்துவ பீடத்தின் புதிய பீடாதிபதியாகப் பேராசிரியர் லக்ஷமன் விஜேவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரும், லயன்ஸ் கழக உறுப்பினரும் சிறந்த சமூகசேவையாளருமான இவர், பல்மருத்துவத்திற்கான சிறப்புப் பட்டத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தை அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

சர்வதேச ரீதியில் மிகச்சிறந்த ஆராய்ச்சியாளருக்காக வழங்கப்படும் 'சிக்மா-II' விருதைப்பெற்ற ஒரேயொரு இலங்கையரும் ஆவார்.

பல்மருத்துவக் கல்விக்கென இலங்கையில் அமைந்துள்ள ஒரேயொரு பீடம் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

### தமிழ்நாட்டிற்கு புலம்பெயர்ந்த

# இலங்கை - அகதிகளின் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் சிரமம்!

## இந்தியப் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,மே19

இந்தியாவின் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் 7 ஆயிரம் குழந்தைகள் தமது பிறப்புச் சான்றிதழைப் பெறுவதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்று இலங்கைக்கான இந்திய பிரதித்தூதுவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு வைத்தியசாலையில் பிறக்கும் இலங்கைக் குழந்தைகள் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு உரித்து உடையவர்கள் என்பதை இந்தியாவிற்கான இலங்கைத் தூதரகம் ஏற்றுக்கொண்டு அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்திலே இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நீண்ட செயல்முறையை இந்தியத் தூதரகம் செயற்படுத்த முடியாத காரணத்தினால் குறிப்பிட்ட குழந்தைகளின் பெற்றோர் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகின்றனர்.

மேலும், இச்செயல்முறையில் ஒரு குழந்தைக்கு தலா 600 ரூபா வரை செலவு ஏற்படுவதனால் இத்தொகையைப் பெற்றோர் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தமிழ்நாட்டில் காணப்படும் 111 அகதிமுகாம்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் பல்வேறு இடர்பாடுகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் அனுபவித்து வருகின்றனர் என இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் சுமீத் நாக்கந்தல மேலும் தெரிவித்தார். (க)

## இரண்டு ஆண்டு நிறைவை முன்னிட்டு
## விசேட விலைக்கழிவு விற்பனை

நேற்றுமுன்தினம் 17.05.2004 திங்கட்கிழமைமுதல்
22.05.2004 சனிக்கிழமை வரை
எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முகூர்த்தப் பட்டுப்புடைவைகள், நவநாகரிக டிசைன் சாறிவகைகள், துணிமணிகள், சேட், சூட் போன்ற இன்னும் பல உங்களுக்காகவே காத்திருக்கின்றன!

தாமதிக்கவேண்டாம்!

இன்றே விரையுங்கள்!

நவீன பாணிகள் அறிமுகஞ்செய்யப்படுகின்றன!
கொள்வனவு செய்பவர்களுக்கு நன்கொடைகள் உண்டு.

**மில்லேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்**

இல.10,11, பெரியகடை (மலேயன்கபே முன்பாக)
யாழ்ப்பாணம். T.P.021-4590174
(முற்றிலும் குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையம்)

(C/35401)(36-13-14-21)

# UNIVERSITY OF JAFFNA
# Tender Notice

Sealed Tenders are invited from reputed Suppliers for the following items.

| Serial No. | Item | No. |
|---|---|---|
| 1. | Computer | 19 |
| 2. | DVD Drive | 02 |
| 3. | Printer | 11 |
| 4. | Scanner | 02 |
| 5. | UPS | 21 |
| 6. | Stabilizer | 02 |
| 7. | Computer Chair | 29 |
| 8. | Computer Table | 25 |
| 9. | Multimedia Projector | 01 |
| 10. | Digital Copy Printer | 01 |
| 11. | OHP with Screen (Complete Set) | 05 |
| 12. | OHP Screen with Stand only | 02 |
| 13. | DVD Player | 01 |

Tenderers are requested to pay a non refundable tender fee of Rs.2000.00 by Money Order drawn infavour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or by Cash at the Shroff Counter of the University of Jaffna. Tender Documents with relevant specification could be collected from the Senior Assistant Bursar (Supplies), University of Jaffna between 19-05-2004 to 28.05.2004 during working hours, by producing the Money Order or Cash Receipt. The Money Order/Cash Receipt to be attached with the Tenders. The University may at its discretion either increase or decrease the number of items to be purchased. The successful supplier should deliver these items at the University of Jaffna and to extend one month credit facility. After confirmation of the order supply should be completed within four weeks.

Tenders in duplicate may be sent by post under registered cover or deposited in the Tender box available at the Bursar's office, University of Jaffna before 2p,m. on 8th June 2004. Tenders will be opened immediately after the closing at the Board Room, University of Jaffna. Tenderers or their authorised representative could be present at the opening time. The left hand top corner of the envelope should be marked as "Tender for Computers & Equipments".

**Registrar,**
UNIVERSITY OF JAFFNA. (C/35550) (26-21-13-14)

## ஐ.தே.கட்சி முன்னாள் எம்.பி. பொலீஸில் சரண்

கொழும்பு,மே19

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பெரேரா பொலீஸில் சரண் அடைந்துள்ளார்.

கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இவர், குறைந்த வருமானம் உடையவர்களுக்கு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கூரைத்தகடுகளை விநியோகித்ததில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாகப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தார். (ஒ-ரி)

## முறைப்பாடுகளைத் துரிதமாக விசாரிக்க நடவடிக்கை

கொழும்பு,மே19

தேசிய மனித உரிமைகள் ஆணைகுழுவிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் நிகழும் மனித உரிமை மீறல்கள் பற்றி நாளாந்தம முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. இவற்றைத் துரிதமாக விசாரிப்பதற்கு அதிகாரிகள் சிலர் நியமிக்கப்படுவர்.

அத்துடன், விசாரணைகளை மேற கொள்ள தேசிய பொலீஸ் ஆணைக் குழு, அரச சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றின் ஒத்துழைப்பும் பெறப் படவுள்ளது.

- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

## 'மகாபொல' தொகையை அதிகரிக்க முடிவு

பல்கலைக்கழக மாணவர்களின் 'மகாபொல' புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

'மகாபொல' புலமைப்பரிசிலை வழங்குவதற்காக இதுவரை விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச ஊழியர்களின் பிள்ளைகள் புலமைப்பரிசில் பெறமுடியாத நிலையில், பாரிய வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு 'மகாபொல' புலமைப்பரிசில வழங்குவது நீதிக்குப் புறம்பானது என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதைப்பற்றி ஆராய 'மகாபொல' கட்டளைச்சபை ஒன்று நிறுவ யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் இச்சபை அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## விற்பனைக்கு

இல. 15/8, ஓட்டுமடம், செபஸ்ரியா வீதியில் ஐந்து பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**த.கனகரத்தினம்,**
இல. 234/6, செபஸ்ரியார் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
(43) (32075)

## அர்ச்சனை - பூசைகளுக்கு
## அடியார்கள்- தேவை

**ஸ்ரீ சர்வ மங்களேஸ்வரி அம்பாள் கோயில்,**
மயிலணி , சுன்னாகம்

எமது ஆலயத்தில் நவராத்திரி விசேட பூசைகள், ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை, வெள்ளிக்கிழமைகளில் அம்பாளின் திருவருளைப் பெற ஸ்ரீ சக்கர, சர்வ மங்கள இராஜராஜேஸ்வரியின் விசேட குங்கும அர்ச்சனை ஆகிய பூசைகளுக்கு அடியார்கள் தேவைப்படுகின்றனர்.

(உபயகாரர்களைச் சேர்க்கின்றோம்.)

விரும்பியவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T.P 0112816550 (C/35040)(38-21-14-13)



## சுயதொழில் பயிற்சி

ஸ்கிறீன் பிரின்டிங் வகுப்புகள்
ஓர் அரிய சந்தர்ப்பம்! விசிட்டிங் கார்ட், திருமண அழைப்பிதழ், லெட்டர் பேட், பொலித்தீன், CD, பிளாஸ்டிக், மரம் மற்றும் Textile (துணிகளில்) பிரிண்டிங் எம்போஸ் பிரிண்டிங் இன்னும் பலவகையான பொருட்களில் பிரிண்டிங் செய்வதற்கான பயிற்சியினை வழங்க இந்திய அச்சுக்கலை நிபுணர் R. பரதன் D.P.Tech அவர்கள் வருகை தந்துள்ளார். வயது வரம்பு தேவையில்லை. பயிற்சிநெறி முடிவில் தரமிக்க சான்றிதழும், தொழில் தொடங்கும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
மே மாதம் **22, 23ம்** திகதிகளில் வகுப்புகள் நடைபெறும்.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**London Language School**
No. 774, Hospital Road, Jaffna.
T.P. 0777 222300

மேலதிக விபரங்களுக்கு
D. Anto Dinesh M.T.Sk. (Dip..)
Director - Archanab Academy - Sri Lanka.
T. P. No 0777 706334, 0777 108423

TALENT

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

உயிர்ப்பு 16 - 06 - 1919



உதிர்வு 19 - 05 - 2000

அமரர் **முருகேசு முத்தையா**

அன்பின் ஒளியாய்
ஆற்றலின் ஊற்றாய்
இதயமுள்ள மனிதராய்
நம்பிக்கையின் உருவாய்
வாழ்ந்தீர்!
வாழ வழிகாட்டி நின்றீர்
எங்கே சென்றீர்?
வருடங்கள் நான்கு
கடந்து சென்று விட்டதே
நம்பத்தான் முடியுதோ ஐயா!

*141பி,கடற்காட்சி வீதி,*
*திருகோணமலை.*

*ஸ்ராலின் குடும்பத்தினர்.*

(31712)(42-21-13-14)

## இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

*தாயின் மடியில்* 20 – 10 – 1937



*இறைவன் அடியில்* 11 – 06 – 2002

அமரர் **அப்புத்துரை பரமசிவம்**
(ஓய்வு பெற்ற தபால் ஊழியர் - வட்டுக்கோட்டை)

இரண்டு ஆண்டுகள் ஆனதப்பா!
இருவிழியும் உம்மைத் தேடுதப்பா!
இனியமொழி எம்மை வாட்டுதப்பா!
இல்லமே வெறிச்சோடிப் போனதப்பா!

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.* (32079)(42-21-14-14)

என்றும் உங்களின் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## உங்களின் இசை ஆவல்களைப் பூர்த்திசெய்ய எம்மிடம்

புதிய, பழைய **VIDEO CD'S**, புதிய பழைய இடைக்கால **AUDIO CD'S**
அனைத்து வகையான **MP3 CD'S**, தமிழ் ஆங்கில **DVD**,
கர்நாடக சங்கீத **CD'S**
இந்து, கிறிஸ்தவ பக்தி பாடல் **CDS.**
**SOFT WARE, GAMES CD'S**

உலக நாடுகளின் டிஸ்கவரி **CD'S**
குழந்தைகளுக்கான ரேசரிஸ் **CD'S**

மற்றும் CDகவர், BLANK CD, போன்றவற்றை மொத்தமாகவும், சில்லைறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்.

க்களின் **CD** சங்கமம்

**Music World**

பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி
திருநெல்வேலி யாழ்ப்பாணம்
☎ 021 222 6554

BLANK CD விற்பனை நிலையங்களுக்கு விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும்.

(C/35014)

# ஆரோக்கியமான வாழ்க்கை முறையினால் இருதய நோய்களைக் குணமாக்கலாம்



**இருதய நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இராஜ யோகப் பயிற்சி மிகவும் பயனளிப்பதாகும் என கட்டுரையாளர் டாக்டர் சதீஸ்குமார் குப்தா (இருதய வைத்திய நிபுணர்) விளக்குகிறார்.**

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் மவுன்ட் அபு என்ற இடத்தில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவர், இதுபற்றி விரிவாக ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஆய்வுகளால் கண்ட உண்மைகளை இக்கட்டுரையில் தந்துள்ளார் இருதய நோய் வைத்திய நிபுணரான அவர்.**

இருதயத்திற்குக் குருதி வழங்குகின்ற முடியுருநாடிகளில் கொழுப்பு படிவதனால் ஏற்படும் அடைப்பினால் இருதயநோய்கள், மாரடைப்புப் போன்றன தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்தியாவிலே 1960 ஆம் ஆண்டிலே 1.06 வீதம் சனத்தொகையினர் இதனால் பாதிக்கப்பட்டனர். 1961ஆம் ஆண்டு இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும். அடைப்பினால் வருந்துபவர்களுக்காக விசேஷ சத்திரசிகிச்சை (by pass surgery) அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தியாவிலே "அஞ்சியோ பிளாஸ்டிக்" (angioplasty) முறை மூலம் அடைப் புகளை விரிவடையச் செய்கின்ற சிகிச்சை முறையும், 1980 - 1990 ஆண்டு காலப்பகுதிகளிலே இருதய முடியுரு நாடிகளின் அடைப்புகளை விரிவடைச் செய்து அது பினனர் சுருங்கிக் கொள்வதைத் தவிர்த்து இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதற்காக "ஸ்டென்ட்" (stent) முறையும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த இருதய நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை அறிந்தோமானால் அவற்றை நாம் தடுக்கவும் வைத்தியரின் உதவியோடு குணப்படுத்தவும் முடியும். இந்த நோய்களைப் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருகின்றபோதும் நவீன வைத்தியசாலைகள், சத்திரசிகிச்சை வசதிகள் இப்போது இருக்கின்றபோதும் இவற்றின் வீதம் குறைவடைவதற்குப் பதிலாகத் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இந்தியாவிலே இது ஒரு வீதத்தில் இருந்து 10-15 வீதமாக 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதிகரித்துள்ளது. 10-15 வீத மக்கள் இந்த நோய்களால் துன்பப்படுகின்றார்கள்.

### விழிப்புணர்வு தேவை

இலங்கையில் கூட 8-10 வீதமானோர் இந்த இருதயநோய்களால் பாதிக்

**தமிழில்: நந்தன்**

கப்பட்டுள்ளனர். மாரடைப்பு ஏற்படுகின்ற வயது எல்லையும் குறைவடைந்து கொண்டுவருகின்றது. 25-30 வயதினருக்கும்கூட இப்போது மாரடைப்பு ஏற்படுகின்றது. 2015ஆம் ஆண்டளவில் இது மேலும் பலமடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் 15 வயது இளம்பராயத்தினருக்கும்கூட மாரடைப்பு நோய் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. சனத்தொகையில் மூன்றில் ஒருவர் இந்நோயினால துன்பப்படவேண்டி வரலாம். இப்போது நடைமுறையில் உள்ள சிகிச்சை அல்லது தடுப்பு முறைகளால் இதைக் கட்டுப்படுத்த முடியாது. இந்நோய் உடையவர்களில் மிகக்குறைந்த வீதமானோரே சத்திரசிகிச்சை முறைகளை நாடுகின்றார்கள். 40 வீதமானோரின் மரணம் மாரடைப்பினாலேயே ஏற்படுகின்றது. முதலாவது விழிப்புணர்வு உருவாக்கப்படவேண்டும்.


இதயம் உடைய எவருக்கும் மாரடைப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. யாருக்கு எப்போது மாரடைப்பு வரும் என்று யாராலும் கூறமுடியாது. அது ஏற்படும் வரை அவர்கள் அதைப்பற்றி அக்கறை கொள்வதும் இல்லை.

இந்தியாவிலே அபுமலையில் உள்ள பிரம்மகுமாரிகள் ஆன்மீக பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் "குளோபல் வைத்தியசாலையில்" (Global Hospital Research Centre Mount Abu) கடந்த ஒன்பது வருடகாலமாக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் எவ்வாறு சத்திரசிகிச்சை (by pass surgery) அல்லது அஞ்சியோபிளாஸ்டி (angioplasty) சிகிச்சை என்பன இல்லாமலே இந்த நாடிகளில் ஏற்படுகின்ற அடைப்புகளை விரிவடையச்செய்து அல்லது திறக்கச் செய்து இந்த நோய்களைக் குணமாக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாரடைப்பு ஒருவருக்கு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினால் உங்கள் இருதயத்தைப் பற்றி முதலில் அறிந்துகொள்ளுங்கள்.




### இருதயத்தைப் பற்றி அறிந்துகொள்க

இதயமானது நெஞ்சறையின் நடுவில் உள்ள ஒரு 'பம்' ஆகும். அது ஒரு நாளைக்கு ஒரு லட்சம் தடவை துடிக்கின்றது. அது ஓய்வின்றி நாள் முழுவதும் நாம் நித்திரை செய்யும் பொழுது கூடத் துடிக்கின்றது. இதயத்தில் இருந்து இரத்தம் பாய்கின்ற எல்லாக் குருதிக் குழாய்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அவை எழுபது ஆயிரம் மைல் (70,000 miles) நீளமானவையாக இருக்கின்றது. இருதயமானது இத்தகைய நீளமான குழாய்களின் ஊடாக இரத்தத்தை ஒரு நாளைக்கு ஒரு லட்சம் தடவை செலுத்துகின்றது. இடைவிடாது அது தொடர்ந்தும் இயங்குகின்றது. இதயமானது தசைகளினால் ஆக்கப்பட்டது. அதற்கும் இரத்த விநியோகம் தேவையாகும். தொகுதி நாடிகளில் இருந்து தோன்றும் வலது முடியுரு நாடியானது வலது பக்கத்திற்கும், இடது முடியுரு நாடியானது இடது பக்கத்திற்கும் இரத்தத்தை வழங்குகின்றன. இந்தக் குருதி நாடிகள் திறக்கப்படும்போது இரத்தம் அதனூடாக முழுமையாகப் பாய்கின்றது. இவற்றில் அடைப்பு ஏற்படும்போது இரத்தம் பாய்வது குறைவாக இருக்கின்றது. இதயம் இடைவிடாது துடிப்பதன் இரகசியம் என்னவென்றால், அது ஒரு நிமிடத்திற்கு 70 முறை துடிக்கின்றது. ஒரு துடிப்பிற்கு 0.8 செக்கன் (sec) எடுக்கின்றது. இதயம் சுருங்குவதற்கு 0.3 செக்கனும் தளர்வதற்கு 0.5 செக்கனும் எடுக்கின்றது. இதயத் தளர்வின்போது இதயம் ஓய்வெடுக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு துடிப்பிற்கு முன்பும் புத்துணர்ச்சி பெறுகின்றது. இதயம் தளர்வடைகின்ற நேரம் குறைவதே முதலாவது இருதயநோயிற்கான அறிகுறியாக இருக்கின்றது.



உதாரணமாக 0.5 செக்கனுக்கு இருதயம் தளரும் நேரமானது 0.4 செக்கனாகக் குறைவடைகின்றது.

### இருதய நோயின் காரணங்கள்

இதன் காரணமாக இருதயச் சுருக்கத்தின்போது உருவாக்கப்பட்ட நஞ்சுத்தன்மை உடைய பதார்த்தங்கள் கழுவிச செல்லப்படுவது குறைவடைகின்றது. இதயம் தளர்வடைகின்ற நேரம் அல்லது இதயத்தின் ஓய்விற்கான நேரம் குறைவடைவதற்கு வாழ்வில் ஏற்படும் மேலதிக அழுத்தம், மனப்பதட்டம், விரைந்து தொழிற்படுகின்ற மனோநிலை, கோபம், பயம், பாதுகாப்பின்மை, எளிதில் உணர்ச்சிவசப்படுவது போன்ற காரணமாக அமைகின்றன. மனம் பதட்டம் அடையும் போது இருதயத்துடிப்பு அதிகரிகின்றது. உதாரணமாக 70-90 துடிப்பு / நிமிடத்திற்கு அதிகரிக்கின்றது. ஆகவே, துடிப்பிற்கு 0.6 செக்கனை எடுக்கின்றது. 03 செக்கன் அது சுருங்குகின்றது. 0.3 செக்கன் தளர்கின்றது. ஆகவே, இதயம் களைப்படைகின்றது. இதனைத் தடுப்பதில் நவீன மருந்துகளோ, நவீன வசதிகள் நிறைந்த வைத்தியசாலைகளோ உதவமுடியாது. நாமே இந்த விடயத்தில் முயற்சி எடுக்கவேண்டும்.

(வளரும்)

---

**கடந்த 05.05.2004 உதயனின் 'சுகநலம்' பகுதியில் வெளியான 'மாதவிடாய் பற்றி இன்றும் மூடநம்பிக்கைகள்' என்ற கட்டுரையின் இறுதிப் பகுதி இது.**

# மாதவிடாய் நிறுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள்

இங்கு சில பெண்களில் தாயாக வேண்டும் என்ற கூடுதலான ஆசையினாலோ அல்லது பிரசவத்தைப் பற்றிய அதிக பயத்தினாலோ கர்ப்பவதிகளுக்குரிய குணங்குறிகள் தோன்றுகின்றன. அதாவது மாதவிடாய் நிற்றல், குமட்டல், வாந்தி, வயிறு வீக்கமடைதல் போன்ற மாற்றங்கள் இவர்களில் ஏற்படுகின்றன. இப்படியானவர்கள் திரும்பத் திரும்பச் சிறுநீர்ப் பரிசோதனைகளை (HCG) செய்து தாங்கள் கர்ப்பம் தரிக்கவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். இருப்பினும் தாயாக வேண்டும் என்ற ஆசை அதிக அளவில் உள்ளவர்களை நம்பவைப்பது கடினம்.

சில பெண்கள் தாங்கள் மெலிந்து அழகாக வரவேண்டும் என்ற அதிக ஆசையினால் உள்ளெடுக்கும் உணவின் அளவை குறைக்கின்றார்கள். இறுதியில் சில உணவுகளைத் தவிர எல்லா உணவுகளையும் தவிர்க்கிறார்கள். இதனால் மூளையின் தொழிற்பாடு பாதிக்கப்பட்டு மாதவிடாய் நிறுத்தமும் ஏற்படுகின்றது. இப்படியானவர்கள் உணவு உள்ளெடுப்பதை அதிகரித்தால் (சாதாரணமாக) இக்குறைபாட்டை நிவர்த்திசெய்யலாம். முடியாதவர்கள் உளநலவியலாளர்களிடம் ஆலோசனை பெறல் அவசியம்.

மற்றும் துணை மாதவிடாய் நிறுத்தமானது அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் ஒழுங்கீனங்கள், ஓமோனின் ஒழுங்கீனத்தால் சூலகங்கள் பருமனடைதல், சூல்கங்களில் ஏற்படும் கட்டிகள் போன்றவற்றாலும் நிகழலாம். இவற்றைவிட கருத்தடை மாத்திரை பாவிப்பவர்களில் கருத்தடை ஊசி பாவிப்பது நிறுத்தப்படும் போது மாதவிடாய் நிகழலாம். இவர்களில் அநேகமாக 6 மாத காலப்பகுதியினுள் தாமாகவே மாதவிடாய் நிகழும். ஆனாலும், ஒரு தொகுதியினருக்கு ஏற்படுத்துவதற்குச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

### அதிகரித்த இரத்தப்போக்கு

★ மாதவிடாய் ஒழுங்காக உள்ள போதிலும் சில பெண்களில் இரத்தப்பெருக்கு அதிகளவில் பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றது.

★ கருப்பை, சூலகங்களில் ஏற்படும் நோய்கள், கட்டிகள்.

★ மனநிலை பாதிக்கப்படல், அதிக கவலை.

★ கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள்.

★ தொற்றுநோய்கள்.

சில பெண்களில் பூப்பெய்திய சில காலங்களில் அதிகளவு குருதிப பெருக்கு ஏற்படுகின்றது. இது பொதுவான ஒரு செயற்பாடல்ல. ஆகவே, வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவது நல்லது. மற்றும் சில பெண்களில் குறுகிய கால இடைவெளியில் அடிக்கடி மாதவிடாய் நிகழ்கின்றது. இது பொதுவாக பின்வரும் சந்தர்ப்பங்களில் காணப்படலாம்.

★ திருமணம் முடிந்து சில மாதங்கள்

★ கருச் சிதைவின் பின்,

★ குழந்தை பிறந்த பின்

இவ்வாறு நிகழ்வதனால் குருதிச் சோகை ஏற்பட வாய்ப்புண்டு.

### மாதவிடாயின்போது ஏற்படும் நோ

பொதுவாக மாதவிடாயின்போது நோ ஏற்படுவதில்லை. இருப்பினும், சில பெண்களில் மாதவிடாயின்போது அதிக நோ ஏற்படுவதனால் அவர்கள் மிகவும் வேதனை அடைகின்றனர். இது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

★ இடுப்புக் குழியில் ஏற்படும் தொற்று நோயினால்:-

இதன்போது மாதவிடாய்க்கு முன்னரே நோ தொடங்கிவிடும். அத்துடன் இந்நோவுடன் அதிகரித்த இரத்தப்போக்கும் உடலுறவின்போது நோவும் ஏற்படும்.

★ தொற்று நோய் தவிர்ந்த காரணங்களினால்:-

இக்காரணங்கள் பொதுவானதாகவும் பெரும்பாலும் இளம் பெண்களிலும் ஏற்படுகின்றது. இங்கு கருப்பைச் சுவரிலுள்ள தசைகளில் தசைப் பிடிப்பு ஏற்படுகின்றது. இதனால் கருப்பைச் சுவரிலுள்ள குருதிக் கலன்கள் அழுத்தப்பட்டு குருதி விநியோகம் தடைப்படுகின்றது. இதன் விளைவாகக் கடுமையான நோ ஏற்படுகின்றது.

இவற்றைத்தவிர, கருப்பைக் கழுத்து மென்சவ்வுகள் இறுக்கமடைதல், ஓமோன்களில் சமநிலையற்ற தன்மை அதிகரித்த செயற்பாடு மற்றும் மாதவிடாய் மிகவும் வேதனையானது என நினைக்கும் மனநிலை போன்ற சந்தர்ப்பங்களிலும் நோ ஏற்படுகின்றது.

★ முற்றான மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னான காலம்:-

சூலகங்களில் தொழிற்பாடுள்ள சூலகங்களை உருவாக்கும் கலங்

**வெ.நாகநாதன்**
*மருத்துவ பீடம், 4ஆம் வருடம்.*

கள் இல்லாது போகும் பட்சத்தில் இது நிகழ்கிறது.

### நோயுடன் தொடர்புடைய மாதவிடாய் நிகழாமை ஏற்படும் சந்தர்ப்பங்கள்

பெண்ணின் உடலில் ஏற்படும் ஏதாவது அசாதாரண நிகழ்வின் (நோயின்)காரணமாக மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம். இது இரண்டு வகைப்படும்.

1. முதலான மாதவிடாய் நிறுத்தம்.
2. துணையான மாதவிடாய் நிறுத்தம்.

### முதலான மாதவிடாய் நிறுத்தம்

சில வயது வந்த பெண்களில் ஒருபோதும் மாதவிடாய் நிகழாத நிலை காணப்படும். இதற்குப் பல்வேறு காரணங்கள் ஏதுவாகலாம். சிலரில் மாதவிடாய் நிகழ்கின்றபோதிலும் அது கண்களினால் காணமுடியாதவாறு அதாவது குருதி வெளியேற்றம் இன்றி இது நிகழ்கிறது. இது யோனி வழி மென்சவ்வில் அடைப்பு ஏற்படல் அல்லது Hymen துணையில்லாத நிலை காணப்படல் போன்ற நிலைமைகளில் ஏற்படலாம். இவர்களின் குருதி ஆரம்பத்தில் யோனிப்பகுதியில் தேங்கும். பின்னர் கருப்பை சூலகக்கான் என்பவற்றில் தேங்கிக் காணப்படலாம். இதற்கு பின்வரும் குணங்குறிகள் காணப்படும். நாரி நோ, வயிற்று வீக்கம், அமுக்கத்தினால் சிறு நீர்த் தேக்கம் இவர்களுக்கு மென்சவ்வில் சிறு துளையிடல் போன்ற சிகிச்சை மூலம் குருதியை வெளியேற்றிக் குணப்படுத்தலாம். அத்துடன், சில பிறப்புக்குறைபாட்டுக் காரணிகளினாலும், கபச்சுரப்பிகளால் சுரக்கப்படும் சில ஓமோன்களின் குறைபாடு சூலகத்தின் விருத்தியின்மையினாலும் கருப்பை விருத்திக் குறைபாடு போன்றவற்றினாலும் முதலான மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம்.

### துணையான மாதவிடாய் நிறுத்தம்

சில பெண்களின் மாதவிடாய், சில வருடங்களுக்கு ஒழுங்காக நிகழ்ந்து பின்னர் நின்றுவிடுகின்றது. இது பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. பொதுவாக அறுபது வீதமான துணையான மாதவிடாய் நிறுத்தங்கள் மன அழுத்தங்களினாலேயே (Mantal Strees) நிகழ்வதாக அறியப்பட்டுள்ளது. உதாரணமாக, போலியான கர்ப்பந்தரித்தலை குறிப்பிடலாம். உடலினுள் அமைந்துள்ள பால் உறுப்புக்களுக்கான குருதி விநியோகம் மாதவிடாய் காலங்களில் சற்று அதிகரித்துக் காணப்படுவது இயல்பு. எனவே, அக்காலப் பகுதியில் அடிவயிற்றுப் பகுதியில் இலேசான அசௌகரிய நிலை ஏற்படுவதும் இயல்பானதாகும். சிலவேளைகளில் இடுப்புப்பகுதியிலும் இந்த அசௌகரிய நிலை ஏற்படக்கூடும். தேவைப்படின் பொதுவாகப் பயன்படுத்தும் வலிநாசினி மாத்திரை வகை ஒன்றைப் பயன்படுத்தலாம்.

எனினும், மாதவிடாயானது உடலில் நிகழும் ஒரு இயல்பான நிகழ்வு என்பதை உணர்ந்து நாம் அன்றாடக் கருமங்களிலும் விளையாட்டுக்களிலும் பொதுவான விதத்தில் ஈடுபடவேண்டியதே முக்கியமானதாகும். இது மாதவிடாய் காரணமாக ஏற்படக்கூடிய அசௌகரியங்களை மறப்பதற்குப் பெரிதும் துணையாக அமையும்.

### மாதவிடாய் ஒழுங்கீனங்கள்

★ மாதவிடாய் நிகழாமை:-

ஒரு பெண்ணின் வாழ்க்கை வட்டத்தில் மாதவிடாய் நிகழாமை பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றது. இது சாதாரணமான உடற்றொழிலியல் செயற்பாட்டினால் ஏற்படலாம் அல்லது நோயுள்ள ஒரு பெண்ணில் நோயுடன் தொடர்புடையதாக ஏற்படலாம். சாதாரண உடற்றொழிலியல் இயல்புகளினால் ஏற்படும் சந்தர்ப்பங்கள்.

★ பூப்படைவதற்கு முந்திய காலப்பகுதி:-

சாதாரணமாக ஒருபெண் 12-16 வயதெல்லைக்குள் பூப்பெய்துகின்றாள். இதற்கு முந்திய காலப்பகுதியின்போது சூலகத்தினுள் சூல்கள் விருத்தியடைகின்றன. அத்துடன், இக்காலப்பகுதியில் மாதவிடாயை ஏற்படுத்தத் தேவையான ஓமோன்கள் மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. குருதியில் சூல்கள் விருத்தியடைந்து ஒரு வட்டத்தில் உள்ளடக்கப்படும் போது மதவிடாய் நிகழ்கிறது.

★ கர்ப்பகாலம்

சூலானது கருக்கட்டப்பட்டதும் மாதவிடாய் நிகழாமை ஏற்படுகின்றது.

★ பாலூட்டும் காலம்

தாய் குழந்தையைப் பிரசவித்தவுடன் தாயின் உடலில் புரோலக்ரின் எனும் ஓமோனின் அளவு அதிகரிக்கிறது. இக்காலப்பகுதியில் சூல்களின வளர்ச்சி தடைப்படுகிறது. குழந்தை பிறந்தபின் தாய் பாலூட்டாதவிடத்து மாதவிடாய் 2-3 மாதங்களில் நிகழும். தாய்ப்பாலூட்டல் நீடிக்கும்போது மாதவிடாய் நிகழாது இருக்கும் காலப்பகுதியும் நீடிக்கிறது.

திருமணம் செய்யாத பெண்களிலேயே இது காணப்படும். இவை சாதாரணமாக ஒரு பிள்ளை பிறந்தவுடன் குறைந்துவிடும்.

# புலிகள் பலவந்தமாக ஆள்சேர்ப்பதில் ஈடுபடுவதாக சில தீயசக்திகள் பொய்ப்பிரசாரம் செய்கின்றன

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்

யாழ்ப்பாணம்,மே19

விடுதலைப் புலிகள் பலவந்தமாக ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதாகப் பொய்ப் பிரசாரம்செய்து சில தீயசக்திகள் எமது இயக்கத்துக்குக் களங்கம் விளைவிக்க முற்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

கடந்த புதன்கிழமை மாலையாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த 7 பேரை அவர்களின் சுயவிருப்பத்தின் பேரில் பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

மக்களுக்கு நாங்கள் யதார்த்தமாக சொல்கின்றோம். விருப்பம் இல்லாமல் எவரையும் புலிகள் இயக்கத்தில் இணைப்பதும் இல்லை, இயக்கத்தில் விருப்பமில்லாதவர் எவரையும் வைத்திருப்பதுமில்லை.

புலிகள் தமது இயக்கத்தில் பலவந்தமாக ஆள்சேர்ப்பு செய்வதென்றால் இப்படியான பெரியவர்களை எல்லாம் விடவேண்டிய தேவையில்லை. இந்த ஏழு பேருக்கும் ஏ.கே.துப்பாக்கி கொடுத்து காவலரணில் விட்டிருக்கலாம்.

இயக்கத்தில் இருக்க விருப்பம் இல்லை என்றால், அடுத்த நிமிடம் வைத்திருக்கமாட்டோம். இயக்கத்தில் இப்படியான நடைமுறை இருக்கின்றபடியால்தான் விடுதலை இயக்கம் வளர்ந்து வருகின்றது.

விருப்பம் என்றால் இணையலாம். இல்லை என்றால் விலகலாம். அதற்கு ஒரு கட்டுக்கோப்பும் உண்டு.

இதேவேளை-

குடாநாட்டில் சமூகச் சீரழிவுகள் நிறைய நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் இயல்பு வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

இதனை நாங்கள் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வெகுவிரைவில் கட்டுப்படுத்துவோம்.

சுயவிருப்பத்தில் வீடு செல்பவர்கள் உங்களுடைய குடும்பத்தின் மேம்பாட்டிற்கும் சமூகத்தின் மேம்பாட்டிற்கும் மக்களுடைய ஒட்டுமொத்தமான மேம்பாட்டிற்கும் சமுகத்தில் நல்ல பிரஜையாக உருவாகிவர வேண்டும்.

சமூகத்தின் முன்மாதிரியான வாழ்வுடன் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். அதுதான் எமது தலைவருடைய விருப்பமும்.

தலைவரின் பணிப்புக்கு அமையவே இவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் சுமார் 140பேர் வரை அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் - என்றார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் அலுவலக சிறுவர் உரிமைகளுக்கான விசாரணை அதிகாரி எஸ். பெரோஸ் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கம் 18 வயதிற்கு மேற்பட்ட ஏழுபேரை விடுதலை செய்துள்ளார்கள். மிகவும் சந்தோசம் அடைகிறோம். இவர்களுக்குப் பாராட்டும் தெரிவிக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. புலிகள் இயக்கத்துக்கு ஆள்களை பலவந்தமாக சேர்ப்பது என்று.

அண்மையில் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மட்டக்களப்பில் 18 வயதிற்கு மேற்பட்ட சுமார் 150 உறுப்பினர்களை விடுதலை செய்திருந்தார்கள்.

சுயவிருப்பத்தில் இணைந்து சுயவிருப்பத்தில் வீடு செல்வதற்கு அனுமதித்துள்ளனர்.

உலக சட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களை படையில் சேர்த்துக்கொள்ளலாம் என்று உள்ளது. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம 18 வயதிற்கு மேற்பட்டவர்களை இங்கு விடுதலை செய்து வருகின்றனர்.

ஏற்கனவே பலரை புலிகள் விடுவித்துள்ளனர். இப்படியான நிகழ்வு தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (8-7)

### நீர்த்தேக்கங்களை பராமரிக்கக் கோரிக்கை

கொழும்பு,மே19

நீர்த்தேக்கங்களைப் பேணிப் பாதுகாப்பதில் நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை மற்றும பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் ஆகியவை கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடெங்கிலும் சுமார் 10ஆயிரம் நீர்த்தேக்கங்கள் கவனிப்பாரற்று உள்ளன. இந்த நீர்த்தேக்கங்களை நிர்வகித்து பராமரிப்பதற்கான பொறுப்பு அரச துறையில் வெவ்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டமையே அவை பராமரிப்பின்றிச் சீரழியக் காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(ஒரி)

### பிரிவுபசார விழா

தென்மராட்சி,மே19

சாவகச்சேரிப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 32 வருடகால விற்பனையாளராகக் கடமையாற்றிய இளைப்பாறிய க.இரத்தினத்துக்கும், 12 வருடங்கள் எழுதுநராகக் கடமையாற்றித் தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி ப.உதயசீலனுக்கும் சங்க நலன்புரிச் சங்கத்தினால் பிரிவுபசார விழா இன்று காலை 11.00மணிக்கு சங்கத் தலைவர் மா.கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.(ஒ-117)


## தேவை

நெல்லியடி நகர் மத்தியில் பிரதான வீதியை அண்மித்த பகுதியில் கடைக்கட்டடம் ஒன்று உடன் வாடகைக்குத் தேவை.

விவரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

ம.அருளானந்தம்,
கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
T.P: 071 2874161


# தபால் வாக்களிப்பு ஒரே தினத்தில்: தேர்தல் ஆணையாளர் யோசனை

எதிர்காலத்தில் நடைபெற இருக்கும தேர்தல்களின்போது தபால் மூலமான வாக்களிப்பை ஒரே தினத்தில் இடம் பெறச் செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் ஆலோசித்து வருகினறார்.

தேர்தல் ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்படும் தினத்தில் இருந்து, வாக்களிப்பு இடம்பெறும் தினம் வரையில், தேர்தல் கடமைகளில் ஈடுபடவிருக்கும் அரச ஊழியர்கள், தபால் மூலம் தமது வாக்குகளை அளிக்கும் முறையே இதுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இதற்குப் பதிலாக ஒரே தினத்தில் தபால் மூல வாக்களிப்பை நடத்தி முடிக்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றத்தில் நிறுவப்படவுள்ள தேர்தல் முறைமை தொடர்பான செயற்குழுவிடம் தனது இந்த யோசனையைச் சமர்ப்பித்து நாடாளுமன்றச சட்டமொன்றின் மூலம் இதனை நிறைவேற்றுவதற்கு தேர்தல் ஆணையாளர் எண்ணியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின போது முறையற்ற விதத்தில் தபால் மூலமாக வாக்களிக்கப்பட்டுள்ளமை பற்றிய முறைப்பாடுகள் தேர்தல் அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் -

ஒரே தினத்தில் வாக்களித்தால் எதிர்காலத்தில் தேர்தல் தொடர்பான ஊழல்கள் இடம்பெறுவதைக் குறைக்க முடியுமெனவும் - அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், இம்முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேர்தல் செலவீனங்களைக் குறைக்க முடியுமெனவும் தேர்தல் பெறுபேறுகளை விரைவாகப் பெறக்கூடியதாக இருக்குமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)


## கண்ணீர் அஞ்சலி

17-05-2004 அன்று அகாலமரணமடைந்த எமது பீட 2ஆம் வருட மாணவன்

**மரியரட்ணம் குணரட்ணம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

E-03 மாணவர்கள்,
பொறியியற்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்.

(32095) (26)



## 11ஆவது ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு 23 - 10 - 1926



உதிர்வு 22 - 05 - 1993

**வல்லிபுரம் சங்கரப்பிள்ளை**
(விவசாய நண்பன்)

திதி: வைகாசி பூர்வபக்க பிரதமை 19.05.2004

ஆண்டுகள் பதினொன்று கடந்தனவே நின் வதனம் கண்டு
எங்கள் துயர் ஓயவில்லை நின்நினைவு மாறவில்லை
மங்காத நின்புகழ் எம் சந்ததியை வாழ வைக்கும்
எங்கு நீர் சென்றீர் ஐயா ஏங்குகிறோம் உமைக்காண.

பிரிவினால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள.

சந்நிதி இல்லம்,
கைதடி கிழக்கு ,
கைதடி.

(C/35047)(43)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 - 10 - 1922



மறைவு 19 - 04 - 2004

**திருமதி தங்கம் சீனித்தம்பி**

எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த அன்புத் தெய்வத்தை அவர் மறைந்த 31ஆம் நாளில் நினைவு கூர்வதுடன் அவரது ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அமிர்த இல்லம்",
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.

(32092) (26)





மானிப்பாய் நகரில் உங்கள் கையடக்கத் தொலைபேசி தேவைகளை நிறைவு செய்து கொள்ள

## THE PHONE SHOP MANIPAY

Dialog GSM இன் மானிப்பாய் பிரதேசத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

எம்மிடம்

NOKIA, SIEMENS, MOTOROLA, ERISSON

அனைத்துவகையான கையடக்கத் தொலைபேசிகளையும் Kit card, sim card mobitel card கையடக்க தொலைபேசிக்குரிய பற்றி, சார்ச்சர், கவர், கேஸ், பெல்ட்

மற்றும்

புதிய பழைய ACD SONG, VCD SONG, MD3 SONG

என்பவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## THE PHONE SHOP

MANIPAY (மக்கள் வங்கி கட்டடம்)
ஆலடிச்சந்தி,
மானிப்பாய்

T.P:_ 077 - 6128523

(C/32074)

# விடுதலைப் புலிகளின் மனித உரிமைப் பிரிவுக்கு முழு ஆதரவு வழங்க இயன்மார்ட்டின் உறுதி

கிளிநொச்சி,மே19

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் மனித உரிமைகள் பிரிவு ஒன்றை அமைக்கும் அவர்களின் முயற்சிக்கு தனது முழு ஆதரவையும் வழங்கவிருப்பதாகத் தற்போதைய இலங்கை அமைதி முயற்சிக்கான ஆலோசகரும், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவருமான இயன்மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இயன் மார்ட்டின் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பல்வேறு விடயங்களைப் பற்றியும் ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்பொழுது இன்றைய இலங்கை அரசியல் நிலைமைகள் பற்றி தமிழ்ச்செல்வன் விரிவாக இயன் மார்ட்டினுக்கு விளக்கிக் கூறியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் மனித உரிமைப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு யோசித்திருப்பது குறித்தும் தெரிவித்தார். இந்தப் பிரிவு புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் மனித உரிமைகள் ஆணையம் தொடர்பில் மிகமுக்கிய பிரிவாக செயலுருவம்பெறும் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே புலிகளின் காவல் துறை, நீதித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனைகளில் கலந்திருந்த இயன்மார்ட்டின் புலிகளின் ஆதரவில் மனித உரிமைப் பிரிவு அமைக்கப் படுவதற்குத் தன்னாலான முழு ஆதரவும் வழங்கப்படும் என்றார். பொதுமக்கள் தரப்பு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு ஒழுங்குகள் பற்றியும் பயிற்சிகள் அளிப்பது குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சிறைகளில் எதுவித விசாரணைகளுமின்றி தவிர்த்துக் கொண்டவருக்கும் தமிழ்க் கைதிகள் பற்றித் தாம் கவனமெடுக்கவிருப்பதாகவும் - இவர்களின் விவரங்கள் பற்றித் தமிழ் சட்டத்தரணிகளிடம் கேட்டறியவிருப்பதாகவும் இயன்மார்டின் பின்னர் கூறினார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்வதற்கு மறுக்கப்படுவது மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாகவும் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்துத் தெரிவித்த இயன்மார்ட்டின், வீடுகளுக்குத் தடைகள் இன்றிச் செல்வதானது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் அடிப்படை உரிமையாகும் - என்றார்.(ப)




வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் யாழ். மாவட்ட தொழிற் திணைக்களமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்திய தொழில்சார் கல்விக் கருத்தரங்கில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் கழகத் தலைவர் சி.குலசிங்கம், யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.முத்துக்குமாரசாமி, இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ்.சிவகுமாரன் ஆகியோரும் அமர்ந்துள்ளனர். (ஒ-ரி)

# ஊடகங்கள் சுயகட்டுப்பாட்டோடு விளம்பரங்களை வெளியிடவேண்டும்

## அமைச்சர் ரெஜினோல்ட் குரே வற்புறுத்து

ஊடகங்கள் வர்த்தக விளம்பரங்களை வெளியிடுவதில் சுயகட்டுப்பாடுகளை வகுத்துச் செயற்படாவிட்டால் அதுதொடர்பில் அரசு புதிய சட்ட திட்டங்களை உருவாக்க நேரிடும் என தகவல், ஊடகத்துறை அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

அரச, தனியார் - அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் அண்மைக்காலமாக வெளியிடப்பட்டு வருகின்ற வர்த்தக விளம்பரங்களில் சில கலாசார விழுமியங்களை மீறுவதாக அமைந்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாதுவை இராணுவ விடுமுறைத் தளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற களுத்துறை மாவட்ட வர்த்தகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

தனியார் ஊடகங்களில் மட்டுமல்லாது அரச ஊடகங்களிலும் வர்த்தக விளம்பரங்கள் சில கண்மூடித்தனமாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவை எமது நாட்டினதும் சமூகங்களினதும் உன்னதமான பண்பாடுகளுக்கும், கலாசார விழுமியங்களுக்கும் பங்கம் ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. இப்படுமோசமான விளம்பரங்களை இனிமேலும் தொடர அனுமதிக்க முடியாது. ஊடகங்கள் தாமாகவே கட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் ஏற்படுத்திக்கொண்டு கௌரவமான அடிப்படையில் வர்த்தக விளம்பரங்களை வெளியிட முன்வரவேண்டும். அல்லாவிடின் வர்த்தக விளம்பரங்களை வெளியிடுவது தொடர்பில் அரசு புதிய சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஊடகத்துறைக்கு அரசு வழங்கியிருக்கின்ற அதிகபட்ச சுதந்திரத்தை ஊடக நிறுவனங்கள் துஷ்பிரயோகம் செய்வதைக் கைவிடவேண்டும். - இப்படி அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். (க)

# கெருடாவிலில் பொதுமக்கள் கசிப்பு ஒழிப்பில் தீவிரம்

தென்மராட்சி,மே19

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையினை அப்பகுதி பொதுமக்களும் இளைஞர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் இப்பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் பயனாக இரு இடங்களில் சுமார் 100 போத்தல்களுக்கு மேற்பட்ட கசிப்பைக் கைப்பற்றி அழித்ததுடன் கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றினர்.

பற்றைக் காடொன்றிலிருந்து 60 போத்தல்கள் கசிப்பினையும் வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த 42 போத்தல்கள் கசிப்பினையும் இவர்கள் கைப்பற்றினர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)



கப்பூது அந்தணன் திடலில் உள்ள நெடுங்கிராய் குளம் 'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டது.

இக்குளத்தைப் பொதுப் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், கப்பூது அந்தணன் திடல் விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.கந்தசாமியிடம் சம்பிரதாயபூர்வமாகப் பத்திரத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அரச அதிபர் செ.பத்மநாதன், 'நியாப்' பின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கா.பாலகிருஸ்ணன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் ஆகியோர் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டவர்களும் படத்தில் உள்ளனர். (ஒ-49)

# கல்முனையில் காணாமற்போன பௌதிகப் பாட வினாத்தாள்!

## திணைக்களம் விசாரணை

காரைதீவு,மே19

கல்முனையிலுள்ள பரீட்சை நிலையமொன்றில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பௌதிக வினாப்பத்திரமொன்று மர்மமான முறையில் காணாமற்போனது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜேசிறியிடம் முறையிடப்பட்டுள்ளது. கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் இயங்கும் பரீட்சை நிலையமொன்றில் இவ்வினாத்தாள் காணாமற்போயிருக்கிறது.

பௌதிக வினாத்தாள் பொதியைப் பிரித்துப் பார்த்தபோது இறுதி இலக்கத்திற்கான வினாத்தாளைக் காணவில்லை எனப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரும் நோக்குநர்களும கூறுகின்றனர்.

இதுதொடர்பாகக் கல்முனைப் பிராந்தியத்தின் உயர்தரப் பரீட்சைக்குப் பொறுப்பான பிராந்திய சேகரிப்பு நிலைய இணைப்பாளர் எம்.ரீ.ஏ.தௌபீககிடம் கேட்டபோது -

"இதுதொடர்பாகத் தகவல் கிடைத்தபோது நான் அங்குசென்று பார்த்தேன். இறுதி வினாப்பத்திரம் இல்லாமலிருந்தது. பதிவேட்டில் குறித்துக்கொண்டு பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தேன். அத்துடன், பரீட்சை முடிந்து விடைத்தாள்களைப் பொதிசெய்யும் வேளையிலும் அங்கிருந்தேன்" - என்று கூறினார்.

"வினாப்பத்திரம் பொதிசெய்யும் போது இது தவறவிடப்பட்டதா? அல்லது எங்காவது மோசடி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக உடனடியாக எதுவும் கூறமுடியாது. தற்போது விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன" என்றும் அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலமும் நேரடியாக இப்பரீட்சை நிலையத்திற்கு விஜயஞ் செய்து வினாத்தாள் மறைந்த மர்மம் பற்றி விசாரணை செய்தார்.

அருகிலுள்ள பரீட்சை நிலையங்களில் தவறுதலாக வந்திருக்கலாமென சோதனைசெய்து பார்த்தபோது அங்கு அப்படி மேலதிகப் பத்திரங்கள வரவில்லையென்பது தெரியவந்தது.

கல்வியமைச்சின் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஜி.பண்டார இத்தகவலறிந்து விசாரணை நடத்தியிருக்கிறார்.

கல்முனைப் பிராந்தியத்தில் வருடாவருடம் பரீட்சை நடைபெறும்போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு வருவது கவலைக்குரியதெனப் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் ஒரு புள்ளியால் மருத்துவத்துறைக்கு அனுமதி கிடைக்கத் தவறியதையொட்டி 3 மாணவிகள் தற்கொலை செய்ததை மேலதிகாரிகளின் கூட்டத்தில் பரீட்சை ஆணையாளர் இம்முறை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, காரைதீவிலும் பௌதிகப்பத்திரப் பரீட்சையின்போது மோசடி இடம்பெற்றதாகத் தெரிவிக்கும் சுவரொட்டிகள் சில பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாகத் தனக்கு எழுத்து மூல முறைப்பாடு கிடைக்கவில்லையென பரீட்சைக்குப் பொறுப்பான அதிகாரி எம்.ரீ.ஏ.தௌபீக் தெரிவித்தார்.

பரீட்சையில் எப்படிப்பட்ட தவறும நடக்க அனுமதிக்க முடியாதென அதிகாரி தௌபீக் மேலும் அழுத்திக் கூறினார். (க)

# திக்கம் வடிசாலை மீண்டும் கூட்டுறவுச் சங்க சமாசத்திடம்

யாழ்ப்பாணம்,மே19

திக்கம் வடிசாலை வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதென அதன் பொதுமுகாமையாளர் பொ. செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள்ள செய்திக குறிப்பொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 7ஆம் திகதி திக்கம் வடிசாலை, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் கையளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சராக இருந்த கே.என்டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழும், பின்னர் இந்து கலாசார அமைச்சராக இருந்த தி.மகேஸ்வரனின் அமைச்சின் கீழும் இயங்கி வந்த திக்கம் வடிசாலை இப்போது வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15.05.2004 உதயனில் திக்கம் வடிசாலை வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது எனப் பிரசுரமான செய்தி என்றும் சமாசப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (8)

# தொழில்நுட்பப் பாடநெறிக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

கொழும்பு, மே19

பாடசாலையில் ஒருவருடத்திற்கான பொதுத்தகவல் தொழில்நுட்பப் பாடநெறியைப் பூர்த்திசெய்த ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வழங்கக் கல்வியமைச்சு முடிவுசெய்துள்ளது.

சுமார் 350 பாடசாலைகளில் இப்பொதுத்தகவல் தொழில்நுட்பப் பாடத்தைத் தனியானதொரு பாடமாக ஜூன் மாதம் முதல் அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு அமைச்சின் திரட்டு நிதியுதவி, உலகவங்கியின் நிதி மற்றும் சில நிறுவனங்களின் நிதியுதவியும் பெறப்படவுள்ளது.

இப்பாடநெறியைக் கற்கும் வகையில் அனைத்து வலயங்களிலுமுள்ள கணனி வளநிலையங்கள் மாணவரை ஊக்கப்படுத்த வேண்டும். மேற்படி பாடத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் விஞ்ஞான ரீதியிலான பாடங்களை எடுக்காத மாணவர்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பின் வேலை தேடிக்கொண்டிருப்பவர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான மேற்படிப்பைத் தொடரவுள்ளவர்கள் மிகவும் பயனடைவர் எனவும் - அவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் மிகவும் பயனுடையதாக இருக்கும் எனவும் - கல்வியமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஆறு மாகாணசபைத் தேர்தல்களில் மு.காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது ஆறு மாகாண சபைகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து இரு ஆசனங்களையும் குருநாகல் மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களையும் மொத்தமாக நான்கு ஆசனங்களைக் கைப்பற்றியது.

எனினும், வரக்கூடிய மாகாண சபைத் தேர்தலின்போது சகல மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுவது எனத் தீர்மானித்துள்ளது.

அந்த மாவட்டங்களின் வேட்பாளர் யார், முதன்மை வேட்பாளர் யார் என்ற விவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என ஹஸன் அலி தெரிவித்துள்ளார். (க)

# ரெலிக்கொம் நிறுவனம் தனியார் மயமாகாது

## அமைச்சர் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,மே19

ரெலிக்கொம் நிறுவனம் எக்காரணம் கொண்டும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது. அரைவாசிப் பங்குகளைக்கொண்ட அரசின் கண்காணிப்பின் கீழேயே அது இயங்கும் எனத் தபால், தொலைத் தொடர்புகள் மற்றும் மலையக அபிவிருத்திப் பிரதி அமைச்சர் ரோஹித குணவர்த்தன உறுதியளித்தார்.

நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமான சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் எச்சரிக்கை செய்தார்.

நேற்றுமுன்தினம் காலை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே பிரதி அமைச்சர் இப்படிக் கூறினார்.

ரெலிக்[illegible] நிறுவனத்தைத் தனியார் து[illegible]ம் முற்று முழுதாக ஒப்படை[illegible]வதாக சிலர் தவறாகப் பிர[illegible] செய்கின்றபோதும் அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். (க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பகிரா இன புறொயிலர் குஞ்சு களும் பிறீமா இன சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் 21.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 3529, 2867 ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32027)

பளை A9 கண்டிவீதிக்கு அருகில் 84 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.நாக லிங்கம், ராசா பேக்கரி, வண்ணாங் கேணி, கண்டி வீதி, பளை.(32044)

45 நாள் நிரம்பிய அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.வர்ணகுலசிங்கம், அராலி மத்தி, வட்டுக்கோட்டை ஞானியார் கோவிலடி. (32087)

## தவறிவிட்டது

6ஆம் யூனிட், இராமநாதபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வகுலேந்திரன் விஷ்ணுதரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல 842023181V), நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆறுகால் மடத்தடியிலுள்ள லஷ்மி கொமினிகேஷனில் ஒப்படைத்து உதவவும். T.P 21 222 3111. (32094)

இல.8, ஆறாம் குறுக்குத்தெரு, குரு நகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேதுறுப்பிள்ளை எமில் சர்வானந்தன் என்பவருடைய தே.அ.அ (இல.810160390V), வி.அ.அ என்பன குருநகருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. No. 222 2347 (32073)

மடத்தடி வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த நாகரத்தினம் தவமலர் என்பவருடைய உத்தியோக அடையாள அட்டை (Job Card) 10.05.2004 திங்கட்கிழமை சுன்னாகம் பொலீஸ் நிலையத்திற்கும் சூராவத்தை சேர்ச்சுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் சிறி வெற்றிலைக் கடையில் ஒப்படைத்து உதவவும். T.P. 021 2263400. (32084)

## மணமகள் தேவை

யாழ். நகரில் சொந்தக் கடை நடத்தும், படித்த, சைவபோசன மணமகனுகடு படித்த, சைவபோசன, 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு, விள.இல. 2266, மே/பா உதயன். (32020)

## மணமகன்கள் தேவை

நல்ல கௌரவமான குடும்பத்தைச சேர்ந்த, கிரகபாவம் 50-125இற்கு இடைப்பட்ட 25வயது முதல் 35 வயதுக்குள் அமைந்த நற்பண்புகள் நிறைந்த மணமகன்கள் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும். ஜாதகக் குறிப்புகளுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல. 2267, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.(32097)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240
Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## காணிதேவை

மானிப்பாய், உடுவில் பகுதிகளில பிரதான வீதியை அண்மித்ததாகத் காணி அல்லது காணியுடன் வீடு தேவை. தொடர்பு: M.C. ஜீவரட்ணம், 40/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (32085)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வரலாற்றுக்கழக விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வரலாற்றுக் கழக அங்கத்தவர்கள் மற்றும் வரலாற்றுத்துறை மாணவர்கள் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி)

# நன்றி நவில்கின்றோம்



எமது அன்புத் தெய்வம் அமரர்

## திருமதி ரஞ்சினிதேவி பாலகுமரன்

அவர்கள் 09.05.2004 அன்று கொழும்பில் அகால மரணமெய்திய செய்திகேட்டு உடன் வருகைதந்து பலவகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், அன்னாரின் இறுதிச்சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் அன்னார் கொழும்பில் அகாலமரணமடைந்த வேளையில் உடன்வந்து எம்முடன் நின்று பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்த நண்பர்களுக்கும், அங்கு வருகைதந்து ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், அன்னாரின் பூதவுடலை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(32098) (21-13-14)

ப.பாலகுமரன்,
சு.பசுபதி குடும்பம்,
ச.யோகராசா குடும்பமும்
அவரது சகோதரர்கள் குடும்பமும்.

# யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற முதல்வர், செல்வி அ.கந்தையா அவர்களின் பணிநலம் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

## பள்ளி உயரப் பணியாற்றியவர்

யா/ பெரியபுலம் மகாவித்தியாலய முதல்வர் செல்வி அ. கந்தையா அவர்களின் ஓய்வு பெறுகையினைச் சிறப்பிக்கும் வண்ணம் 'சேவைச் சிறப்பு' மலரினை வெளியிடுவதனை இட்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

முதல்வர் பதவி என்பது மிகப் பொறுப்பு வாய்ந்த சமூக அந்தஸ்தில் உயர்ந்த அற்புதமான ஒன்றாகும். அத்துடன் துணிவு, ஆளுமை, வாண்மைச்சிறப்பு நிறைந்த பதவியாகும். அர்ப்பணிப்பு நிறைந்த எங்கள் முதல்வர் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் தம் பதவியை மிளிரச் செய்த சாதனையாளராவார்.

நிர்வாகவிடயங்களை முன்னெடுத்துச் சென்று பாடசாலையை வளர்த்து கல்வித்தரம் உயர வழிசெய்தார். பழைய மாணாக்கர் அவை பொலிவு பெற பதவிவழித் தலைவராக இருந்து செயற்பாடுகளுக்கு உற்சாகம் தந்து வழிநடத்தியவர். கணனிப் பயிற்சி, மேலைத்தேய வாத்தியகுழு, ஆரம்பக்கல்விமாணவர்கள், சிரேஷ்டகல்வி மாணவர்களுக்கென இருகடவைகளாக இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல விடயங்களை பிள்ளைகளின் உயர்வுக்காக ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வெற்றிகண்டவர்.

வைரவிழா முதல்வரின் ஓய்வுக்காலம் மகிழ்வுள்ளதாக அமைந்து சிறந்து வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

துணைச் செயலர்
பழைய மாணாக்கர் அவை

செல்வி கி.கலையமுதா

## கடமையே பெரிதென்று.....

புலன் இந்திலமே பெரியபுலம்
வளர்த்திட வாழ்வை அர்ப்பணித்து
பலபகல் இரவும் ஓய்வின்றி
மனம் நிறை கடமையே பெரிதென்று
பலன் கருதாமல் பணியாற்றி
வலம் வந்தார் முதல் பெண்முதல்வர்
குலமகள் இனிதாய் ஓய்வினிலே
பலமுடன் நலமே வாழ்கவென்று
நலன்புரி கழக ஆசிரியர்
அன்புடன் கூறும் நல்வாழ்த்து

செயலர். ஆசிரியர் நலன்புரிக்கழகம் உமா சூரியகுமாரன்

## பள்ளியில் ஒரு பாரிஜாதம்

"நிமிர்ந்த நன்னடை
நேர் கொண்ட பார்வை!
நிகரில்லா சேவையினைப் -பள்ளிக்கு
நிறைவோடு செய்த அன்னை!
அளவிலா பணி தனையே - பள்ளிக்க
அன்போடு செய்த அன்னை!
பள்ளியில் நுழைந்தால் ஒரு
பாரி ஜாத புஸ்பம்
பாங்கினில் சென்றால்
படர்ந்திடும் அன்பு"

செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்கள் யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு தன் உடல், பொருள் ஓய்வு யாவையும் அர்ப்பணித்துச் செயலாற்றியவர். இவர் சேவையில் பள்ளி இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது. பள்ளியின் அபிவிருத்தி சம்பந்தமாக நாம் எடுக்கும் முடிவுகளுக்கு மன மகிழ்வோடு சம்மதித்த அன்னையான இவர், அபிவிருத்திக்கு வித்திட்ட விருட்சமும் ஆவார்.

இவரின் சேவைக்காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பொற்காலம் ஆகும். சேவையின் முடிவில் ஓய்வுநிச்சயம்.

இவரது ஓய்வுக் காலம் சிறப்புறவும் சிறந்த உடநலமும் உளநலமும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து சமூகப் பணியாற்றவும் எல்லாம்வல்ல ஸ்ரீகாமாட்சி அம்மன் அருள்கிடைக்க வேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

திருவாட்டி கி.சரவணபவன்
செயலர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## அடித்தணைத்த கை

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை" என்பது பெண்கள் பற்றி பாரதியின் அடிநாதப் பார்வை. அந்த வகைக்கு யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் பேரும் புகழும் செல்வி அன்னலட்சுமி கந்தையா அம்மையாரின் ஆற்றலால் வந்தவை என்பதை எண்ணும் போது நல்லூர்கோட்ட அதிபர் சங்கம் பெருமை கொள்கின்றது.

இவரது நிர்வாகத்திறனும் அயரா உழைப்பும் பல்லாயிரம் மாணவர்களைக் கல்வியிலும், விளையாட்டிலும் கலைத் துறையிலும் சிறப்புற விளங்க வைத்துள்ளன.

நகர்புறத்தே நல்லதொரு கலைக் கோவிலாகத் திகழ்வது யா/பெரியபுலம் மகாவித்தியாலயம். அடித்து அணைக் கின்ற நட்பத்தினைப் பாரதிதாசன் கூறியது அம்மையாரின் செயற்திறனைக் கண்டதானோ என வியப்புற வேண்டியிருக்கிறது. அதனால் அதிபர் சமூகம் ஆசிரியர் சமூகம் பெருமை கொள்வதோடு பாராட்டையும் இச்சந்தர்ப்பத்தில் உரிமையோடு வழங்குகின்றது.

அதிபரின் கடமைகளைச் செவ்வனே செய்வதில் முன்னணி வகித்த பெருமையும் அம்மையாரைச்சாரும், இவர் பல்வகை நலன்களோடு வாழ இறையருள் சுரக்க வேண்டும்.

தி.கிருஷ்ணகுமார்
தலைவர்.
அதிபர் சங்கம். நல்லூர்.

## பணியால் உயர்ந்த பண்பாளர்

செல்வி அன்னலட்சுமி கந்தையா ஆசிரியராக, அதிபராக நீண்டகாலம் கல்விப்புலத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ளார். நேர் கொண்டபார்வை, நிமிர்ந்த நடை, புன்னகை தவழும்முகம் இவையனைத்தும் நான் இவரிடத்தில் கண்ட இயற்கையான கோலங்கள். தனது சேவைக்காலத்தில் பாடசாலைகளின் வளர்ச்சியிலும், மாணவர்களின் கற்றல்-கற்பித்தலிலும் இணைப்பாடங்களின் அபிவிருத்தியிலும் அவர் காட்டிய ஆர்வமும், தன்நலமற்ற சேவையும் அளப்பரியது. அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் முதன்மை முகாமையாளர் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை இவருக்குண்டு. தான்அதிபராகச் சேவைபுரிந்த யா/பெரியபுலம் ம.வித்தியாலயத்தில் பல சாவல்களைபாடசாலைச் சமூகத்தினரின் உதவியோடு சாதனையாக்கி சகோதர அதிபர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். தாவுண்டு, தன் வேலையுண்டு என எண்ணாமல் இந்து சமயத்தின் தத்துவங்களை, அதன் வரலாற்றை சுவைபட மேடைகளில் பேச்சுகள் மூலம் எடுத்துச் சொல்வதில் மிகவும் விருப்புடையவராக இருந்தார், இருந்து வருகின்றார்

இவரின் ஓய்வுக்காலம் சிறப்புப் பெற்று இருக்கவும். கல்வித்துறையில் இவரது சேவை தேவைக் கேற்ப தொடரவேண்டுமென யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சகல அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்

"ஒற்றுமையே எமது பலம்"

த.பஞ்சலிங்கம்
மூத்த துணைப் பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

## சிறந்த கல்வியாளர்

அறுபதாவது அகவைதனைப் பூர்த்திசெய்து தனது கல்விச் சேவையில் இருந்து இளைப்பாறிச் சென்ற செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்கள் சிறந்தவொரு கல்வியாளராக விளங்கித் தான் கடமையாற்றிய பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு உயரிய பலசேவைகளை வழங்கி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கல்விப்புல அதிகாரிகளினதும் நெஞ்சங்களில் நிறைந்துள்ளார்.

இவர் என்னுடன் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி பயின்றவர். அதுமாத்திரம் அல்லாது பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் நாமிருவரும் ஒன்றாகவே உயர்கல்வி பெற்றோம். இதற்குமேலாக யாழ். இந்துமகளிர் கல்லூரியில் ஒன்றாகவே கல்வியும் கற்பித்தோம். அத்துடன் இருவரும் ஒரேகாலத்தில் ஆசிரியநியமனம் பெற்றமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

சிறந்த நிர்வாகியாகவும் துணிவும் நேர்மையும் கொண்ட ஒரு வழி காட்டியாகவும் திகழ்ந்து யாழ்/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் உயர்வுக்காய் உழைத்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்கள் மேலும் இம்மண்ணில் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விப்புலத்துக்கு தனது சேவையை வழங்கவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

திருவாட்டி.ச.காங்கேயன்,
கோட்டக் கல்வி அலுவலர் நல்லூர்க் கல்விக் கோட்டம்.

# 1997இற்கு முன்னர் ஓய்வுபெற்றோரின் ஓய்வூதிய முரண்பாடுகள் விரைவில் நீங்கும்

## ஓய்வூதியப் பணிப்பாளர் உறுதி



**ஓய்வூதிய முரண்பாடுகளை நேர்சீர் செய்வதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் கே.ஏ. திலகரத்தினாவும் அத்திணைக்கள அதிகாரிகளும் யாழ். செயலகம் வந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய கச்சேரிகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு யாழ். செயலகத்தில் பயிற்சிப் பட்டறை நடத்தினர். இந்த விஜயத்தின்போது ஓய்வூதியப் பணிப்பாளர், 'உதயனுக்கு' விசேட செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார். அந்தச் செவ்வியின் தொகுப்பை இங்கு தருகின்றோம்.**

*கேள்வி:* தங்கள் தலைமையில் நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையின் நோக்கம் குறித்து விளக்க முடியுமா?

*பதில்:* 1996-12-31 ஆம் திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைச் சீர்படுத்தி ஓய்வூதியர்கள் நியாயமான வகையில் கொடுப்பனவுகளைப் பெற வழி செய்யும் அரசின் திட்டத்துக்கமைய ஓய்வூதியச் சுற்றறிக்கை 6/2004 வெளியிடப்பட்டது. ஆயினும் இச்சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது நடைமுறையிலுள்ள ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மீளாய்வுசெய்து புதிய கொடுப்பனவு மேற்கொள்வதில் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. ஓய்வூதிய முரண்பாடுகளை சீர் செய்யும் பணியில் ஒவ்வொரு ஓய்வூதியர்களின் கோவைகளையும் தனித்தனியாகப் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அதுவுமன்றி ஓய்வூதியம் பெறுவோர் யாவரும் ஒரே அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கவில்லை. இவை அனைத்தையும் தனித்தனியாக சீர்தூக்கி ஆராய்ந்து கொடுப்பனவுகள் குறித்துத் தீர்மானிக்கவேண்டியுள்ளது.

இப்பணியை சரிவர ஆற்றுவதற்குரிய இத்துறையில் அனுபவம் கொண்ட ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே இப்பணியில் அனுபவம் குறைந்த புதிய இளம் உத்தியோகத்தர்களையே பெருமளவில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. அதற்காக அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் அவசியமாகின்றன. அந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையிலேயே இவ்வித பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றோம். அந்த வகையில் நடத்தப்படும் மூன்றாவது பயிற்சிப் பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதென முடிவுசெய்தோம்.

இவற்றில் முதலிரு பயிற்சிப் பட்டறைகளை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்கனவே நடத்தி முடித்துள்ளோம்.

*கேள்வி:-* எந்த அடிப்படையில் இம்மூன்றாவது பயிற்சிப் பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது?

*பதில் :-* இது குறித்து பல தரப்புகளிலிருந்தும் அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குதல் தொடர்பான சுற்றறிக்கை வெளியானதைத் தொடர்ந்து ஓய்வூதியர்களில் பலர் பிரதேச செயலர் காரியாலய மட்டங்களில் தமக்குரிய கொடுப்பனவு நிலுவை குறித்துக் கோரிக்கைகளை மேற்கொள்ளத் தலைப்பட்டனர். தற்போது அரச சேவையில் கடமையாற்றியபின் ஓய்வூதியம் பெற்று வரும் ஏறக் குறைய 4 லட்சம் ஓய்வூதியர்களில் குறிப்பிடத்தக்கதொரு தொகையினர் யாழ். மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். அதுவுமன்றி யாழ்.மாவட்ட செயலகமூடாகவும் இவ்வித பயிற்சிப் பட்டறை ஒன்றின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டு வந்தது. யாழ். மாவட்டத்தில் இப் பயிற்சிப் பட்டறையை ஒழுங்கு செய்வதன் மூலம் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டச் செயலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும ஊழியர்களையும் ஒருங்கிணைத்து ஒரே பயிற்சிப் பட்டறையாக நடத்த முடியுமெனக் கருதி அவ்விதம் செயற்பட்டோம்.

*கேள்வி-* உங்கள் திட்டப்படி கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டச் செயலக அதிகாரிகளையும் ஒன்றிணைத்து நடத்திய இப்பயிற்சிப்பட்டறை எதிர்பார்த்த பலனை அளித்ததாகக் கருதுகிறீர்களா?

*பதில்:-* ஆம்; நிச்சயமாக; ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து இப் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்பதற்காக என்னுடன் தலைமைக் காரியாலய பிரதம கணக்காளர் சுரே, பிரதம உள்ளக கணக்காய்வாளர் குணதிலகா மற்றும் உதவிக் கணக்காளர்களில் ஒருவரான வணிகரத்ன ஆகியோர் வந்துள்ளனர்.

ஏனைய மாவட்டச் செயலகங்களிலிருந்தும், யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேசச் செயலர் பிரிவுகளிலிருந்தும் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஓயவூதிய முரண்பாடுகள் குறித்து எழுந்த சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதில இவர்கள் உதவினார்கள். இது ஒரு சிரமமான பணி என முன்னரே குறிப்பிட்டிருந்தேன். ஆயினும் இப்பயிற்சிப் பட்டறையை நடத்தி முடித்ததன் மூலம் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குதல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய சேவைகளில் சரி பாதிக்கு மேற்பட்ட வரையிலாவது பூர்த்திசெய்யக்கூடியதாயிருக்கும். சிரமமான, சிக்கலான, முடிவெடுக்க முடியாத நிலையிலுள்ள சேவைகள் தொடர்பாக காலக்கிரமத்தில் ஆராய்ந்து முடிவுசெய்யப்படும். அவ்வித சிக்கல்கள் தோன்றுமிடத்து அவை எம்மால் பரிசீலிக்கப்பட்டு அவ்வவற்றுக்கேற்ற வகையில் புதிய சுற்றறிக்கைகள் வெளியிடப்படும்.

அது மட்டுமின்றி இப்பயிற்சிப் பட்டறையின் முடிவில் இதில் கலந்துகொண்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தாம் இவ்விடயம் தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாகவே ஆரம்பிக்கத் தயாராயுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் இப்பயிற்சிப் பட்டறை மிகுந்த பிரயோசனம் அளிப்பதொன்றாக அமைந்தது.

கேள்வி: அப்படியானால் ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டிய சம்பந்தப்பட்ட கோப்புகள் பரிசீலிக்கப்பட்டு கொடுப்பனவு நிலுவைகள் உடனடியாக வழங்கப்படும் என்கிறீர்களா?

பதில்: இதில் சம்பந்தப்பட்ட சகலருக்குமான கொடுப்பனவுகள் ஒரே சமயத்தில் வழங்கப்படுமென உறுதியளிக்க முடியாது. பூரணப்படுத்தப்படும் கோவைகளுக்கான கொடுப்பனவு நிலுவைகள் அவரவர்களுக்கான அதற்கடுத்த மாத வழமையான ஓய்வூதியக் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படும். சிரமமான, சிக்கலான தீர்மானம் மேற்கொள்ள இயலாத கோவைகள் தொடர்பான கொடுப்பனவு நிலுவைகள் தாமதமடையக்கூடும்.

*கேள்வி:* தங்களது சுற்றறிக்கையின்படி 31-12-1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்கள் அனைவரும் இத்திட்டத்தால் நன்மையடைவார்கள் எனத் தோன்றுகிறது. இப்புதிய திட்டத்தின் மூலம் ஒரு சிலர் பாதிப்புறவும் நேருமா?

பதில்: தற்போது குறிப்பிட்ட தொகையொன்றை ஓய்வூதியமாகப் பெற்றுவரும் ஒருவர் புதிய திட்டத்தின்படி தற்போது பெற்றுவரும் ஓய்வூதியத்திற்குக் குறைவாகப் பெறவேண்டி ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவருக்கு நிவாரணமளிக்கும் வகையில் தற்போது அவர் பெற்றுவரும் ஓய்வூதியமே

**செவ்வி: வீயெஸ்ரீ**

தொடர்ந்தும் வழங்கப்படும்.

*கேள்வி:* இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறை குறித்து தாங்கள் திருப்தியடைகிறீர்களா?

*பதில்:* ஆம், இது நிச்சயமாக மிக்க பயனளிக்கும் ஒன்றாகவே நான் கருதுகின்றேன். கலந்துகொண்ட ஊழியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது சந்தேகங்கள குறித்த விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டதை அவதானித்தேன். அவர்கள் உற்சாகத்துடன் கடமையாற்றி மிக விரைவில் இம்மாவட்டங்களில் ஓய்வூதிய முரண்பாடுகள் கொண்ட கொடுப்பனவுகள் பெற்று வரும் ஓய்வூதியர்கள் தமக்குரிய நியாயமான கொடுப்பனவுகளைப் பெற உதவுவார்கள் என நிச்சயமாக நம்புகிறேன்.

*கேள்வி:* இந்த வேளையில் ஓய்வூதியப் பணிப்பாளர் என்ற வகையில் தங்களிடம் மற்றொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். 2003 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அரச சேவையில் புதிதாக இணைந்து கொள்வோருக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதுகுறித்துத் தாங்கள் விளக்கம் தரமுடியுமா?

*பதில்:* 2003 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அரச சேவையில் இணைந்து கொள்ளும் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதி என்ற வகையில் ஊழியர்களின் சம்பளத்தில் 8 சதவீதம் கழிக்கப்படும. அதனுடன் அரசினால் 12 வீதத் தொகை சேர்க்கப்பட்டு வைப்புச் செய்யப்படும். அதேசமயம் அவ்ஊழியரின சம்பளத்திலிருந்து விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக் கழிவுகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது. குறிப்பிட்ட ஊழியர் தனது நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவர் ஓய்வு பெறும் திகதி முதல் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் பெறத் தகுதி கொண்டிருப்பார். ஆயினும், சேவையிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் முன்னைய நடைமுறைக்கமைய அவருக்கான ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.

*கேள்வி:-* உதாரணத்துக்கு, அரச எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த ஒருவர் 1980 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டமை காரணமாக ஒழுககாற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாக வைத்துக்கொள்வோம். அந்த ஊழியர் அரசிடம் சமர்ப்பித்த மேன்முறையீடு பரிசீலிக்கப்பட்டு 1997 ஆம ஆண்டு முதல் அந்த ஊழியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதாகக் கருதப்பட்டு அவருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 1980 ஆம் ஆண்டில் அவர் கடைசியாகச் சேவையாற்றிய போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின அடிப்படையில் கணிக்கப்பட்டு வழங்கப்படுவதாகவும் வைத்துக்கொள்வோம், ஆயினும் அந்த ஊழியருக்கு 1980 ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரையான எவ்வித ஓய்வூதிய நிலுவையும் வழங்காது தவிர்க்கப்பட்டது. அந்த ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்கான தண்டனை அது என நியாயப்படுத்த முடிந்தாலும், தொடர்ந்தும் அந்த ஊழியர் தான் உயிருடன் இருக்கும் வரை 1980 ஆம் ஆண்டில் தான் கடைசியாகப் பெற்ற சம்பள அடிப்படையிலான ஓய்வூதியத்தைப் பெறவேண்டியிருப்பது நியாயமானதாகக் கருதமுடியவில்லை. எனவே, தற்போது வெளியிடப்பட்ட தங்கள் சுற்றறிக்கைக்கமைய இத்தகைய நிலையில் உள்ள ஊழியர் ஒருவரின் சம்பளத்தை 1996-12-31 ஆம் திகதியன்று அவர் பெறவேண்டிய சம்பளத்துக்கமைய மாற்றியமைக்க அதற்குரிய ஓய்வூதியம் வழங்கப்படுவது நியாயமானதல்லவா? இது குறித்து தங்கள் கருத்து யாது?

*பதில்:* இவ்வித உதாரணமொன்றைச் சுட்டிக்காட்டியமைக்கு நன்றி. இது போன்ற பல சிக்கலான சேவைக்கால அனுபவங்கள் கொண்ட ஊழியர்கள் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இவ்வித நிலையிலுள்ள ஊழியர்கள் விடயத்தில் நியாயமாக நடந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டுமெனவே நான் கருதுகின்றேன். ஆயினும். இத்தகைய விடயங்கள் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கும் சமயங்களில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படும் வேளையில் நாம் அதுபற்றி கலந்தாலோசித்து முடிவெடுப்போம். அதன் பின்னர் அவை தொடர்பான சுற்று நிருபங்கள் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் இந்த வகையிலேயே ஆரம்பத்தில் நாம் வெளியிட்ட 6/2000 இலக்க சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, கல்விச்சேவை ஊழியர் தொடர்பாகவும், பாதுகாப்புப் படைகளில் சேவையாற்றும் ஊழியர் தொடர்பாகவும் இரு மேலதிக சுற்றறிக்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

*கேள்வி:* ஓய்வூதியத் திணைக்களத்துடன் தம்மால் மேற்கொள்ளப்படும் கடிதத் தொடர்புகளுக்கான பதில் தனிச்சிங்கள மொழியிலேயே அனுப்பி வைக்கப்படுவதாக தமிழ் மக்களால் பல சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நாட்டில் தமது தாய்மொழியாகிய தமிழ் மொழியில் அரச திணைக்களங்களுடன் தொடர்புகளைப் பேணமுடியும் என சட்டமூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் இக்குற்றச்சாட்டுக் குறித்து தங்களது கருத்தைத் தெரிவிக்க முடியுமா? இவ்வித குற்றச்சாட்டுக்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் முழு நாட்டு மக்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளதே?

பதில்: இவ்வித குற்றச்சாட்டுக்கள் குறித்து எனது கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வித உரிமைகள் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நிர்வாக ரீதியில் இவ்வித நடவடிக்கைகளை நியாயமான முறையில் மேற்கொள்ள நடைமுறைச் சிக்கல்களை நாம் எதிர்கொள்ள நேரிடுகின்றது. தமிழில் கிடைக்கும் கடிதங்களுக்குத் தமிழ் மொழியில் பதிலனுப்புவதற்கான போதிய ஆளணி வசதி எம்மிடம் தற்போது கிடையாது. எமது திணைக்களத்தில் கடமையாற்றும் தமிழ்மொழி மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் கனிஷ்ட தரத்தைச சேர்ந்த ஓரிருவரே கடமையாற்றுவதால் இவ்வித நடவடிக்கைகளை உரியமுறையில் நிறைவேற்ற முடியவில்லை. நாம் அவற்றை நியாயமான முறையில் மேற்கொள்வதற்கு முயற்சித்து வருகின்றோம். இனிவரும் காலத்தில் இது தொடர்பான நடவடிக்கைகளை உரியமுறையில் மேற்கொள்வதற்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். இந்த வகையில் ஓய்வூதியம் தொடர்பாக எம்முடன் மேற்கொள்ளப்படும் தொடர்புகளுக்கான பதில் அனுப்ப நீண்டகால தாமதம் ஏற்படுவதாகவும் குறை கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் தனியே எம்மை மட்டும் குறை கூறுவது நியாயமானதல்ல. மேற்கொள்ளப்படும் தொடர்புகளில் சமர்ப்பிக்க வேண்டிய பூரணமான தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறுதலும் இதற்கான முக்கிய காரணமாகும். உதாரணமாக ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினையொன்று குறித்துத் தொடர்பு கொள்ளும் ஓய்வூதியரொருவர் எமக்குப் பிரயோசனமற்ற பல விவரங்களைச் சமர்ப்பிக்கும் அதேவேளை எமக்கு மிக அவசியமான அவரது விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கத்தைக் குறிப்பிடத் தவறிவிடுகின்றார். இதனால், நாம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதில் அநாவசிய சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுவதுடன் அதற்கான நடவடிக்கையிலும் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே முக்கியமாக ஓய்வூதியத் திணைக்களத்துடன் மேற்கொள்ளும் சகல தொடர்புகளிலும் அவசியமான விவரங்களை ஓய்வூதியர்களோ திணைக்களங்களோ குறிப்பிடுவதால் எமது பணியை இலகுவாக்க முடியும்.

-என ஓய்வூதியப் பணிப்பாளர் விளக்கமளித்தார். ★

# யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.மாவட்டம் உட்பட வடமாகாணத்தில் உள்ள ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் ஆராய்ந்தது.

ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் ஓய்வூதிய முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலகரத்தினா, ஓய்வூதியத் திணைக்கள பிரதம கணக்காளர் எஸ்.சுரே ஆகியோர் அடங்கிய குழு யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்தது.

இக்குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

யாழ்.செயலகத்திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமைச் செயலக உதவி அரசாங்க அதிபர் வி.வீரபுத்திரபிள்ளை உட்பட 5 மாவட்டங்களையும் சேர்ந்த பிரதம கணக்காளர்கள், கணக்காளர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

(ஒ-5-139-ரி)

# சொந்தக் காணியற்றோருக்கும் 25ஆயிரம் ரூபா கொடுப்பனவு

சொந்தக் காணியற்றோருக்கும் ஒன்றிணைந்த உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவிக் கொடுப்பனவாக ரூபா 25 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

கோயில் காணிகள், தனியார் காணிகள், அரச காணிகள் ஆகியவற்றில் குடியிருப்போருக்கு இக்கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

கோயில் காணியில் குடியிருப்பவர்களுக்கு கோயில் தர்மகர்த்தா அல்லது பரிபாலனசபையினர் அல்லது கோயில் உரிமையாளர் ஆகியோரில் ஒரு தரப்பிடமிருந்து சரியான முறையில் குத்தகை ஆவணம் பெற்று கிராம புனர்வாழ்வுக் குழுவின் ஆலோசனைகளையும் பெற்று பிரதேச செயலர் திருப்திப்படும் பட்சத்தில் கொடுப்பனவினை சிபார்சு செய்யலாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் காணியில் உரிமைச் சான்றுகளாக உறுதியோ அல்லது வேறு ஆவணங்களோ இல்லாது குடியிருப்பவர்களுக்கு அவர்களது உரிமையை கிராம புனர்வாழ்வுக் குழு, கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோர் உறுதி செய்யப்பட்டு பிரதேச செயலர் கொடுப்பனவை சிபார்சு செய்யலாம்.

அரச [illegible]களில் குடியிருப்பவர்களின் [illegible]மைகளை குடியேற்றத் திட்ட [illegible]லர், பிரதேச செயலர் ஆகியோ[illegible] உறுதி செய்து பிரதேச செயலர் கொடுப்பனவினை சிபார்சு செய்யலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மே19

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அகுமாரவேல் "பெரியபுராணம்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ந.நிர்மலானந்தன் நிகழ்த்துவார்.

(ஓ-173)

# கச்சாய், பாலாவி, கெற்பேலியில் மீண்டும் சட்டவிரோத மணல் அகழ்வு

கொடிகாமம்,மே19

கச்சாய், பாலாவி, கெற்பேலி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு மீண்டும் அதிகரித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் அண்மைக்காலமாகப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் 'பாஸ்' நடைமுறைகளினால் வாரத்தில் இரண்டு நாள்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்று வந்தது.

தற்போது அனுமதிப் பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளமையால் இரவு நேரங்களில் பெருமளவு மணல் சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்டுக்கொண்டு செல்லப்படுகிறது.

திருட்டுத்தனமாக மணல் ஏற்றப்படுகின்ற வாகனங்கள் உள் வீதிகள் வழியே வேகமாகச் செலுத்தப்படுகின்றன.

இவ்வாறு வாகனங்கள் மிகவும் வேகமாகச் செல்வதனால் வீதிகளில் நடமாடும் பொதுமக்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடுகிறது. இந்த வாகன சாரதிகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவோர் அச்சுறுத்தப்படுகின்றனர்.

எனவே, மேற்படி செயல்களைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, கச்சாய், பாலாவி, கெற்பேலி ஆகிய பகுதிகளில் மணல கடல் மட்டத்தைவிட ஆழமாகவும் வாய்க்கால்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-4-74)

## கலைப்பீட மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,மே19

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று, இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இதில் கலைப்பீட 3 ஆம் வருட மாணவர்களைத் தவறாது கலந்துகொளளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி)


## கண்ணீர் அஞ்சலி



ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (M.L.T.)

**எம்.அருமைத்துரை** அவர்களின்

மரணச்செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் வைத்தியசாலை, மந்திகை, பருத்தித்துறை.

ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும். ஊழியர்களும்.

(சி-35065) (24-12)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நேசராஜன் நாகேஸ்வரி (ராணி)

(பெத்தானியா சுவிஷேச சபை)



வண்ணார்பண்ணை, கில்னர் லேனைப் பிறப்பிடமாகவும் பெத்தானியா சபை, குளப்பிட்டிச்சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசராஜன் நாகேஸ்வரி நேற்றையதினம் (18.05.2004) கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் நேசராஜனின் (றைவர் - தம்பி) அன்பு மனைவியாரும் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கலா, தர்மா, தேவகுமார், அர்ஜன், தீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் வில்வம், மலர், தேவி. சறோ (சவூதி அரேபியா), காந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நேசராணி (குஞ்சு), குணா, வரதன், விக்னேஸ்வரன், பேபி ஆகியோரின் மைத்துனியும் ஜெகன், தனு, கஜன், முருகன், வாணி, நித்தியா ஆகியோரின் மாமியாரும் வனிதா, காயத்திரி, கஸ்தூரி, வாசு, பிரியன், நிலானி, சுதா ஆகியோரின் பெரியம்மாவும் காலஞ்சென்ற கோதண்டபாணி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற இராமசாமி மற்றும் நாகேஸ்வரி தம்பதியினரின் பெறா மருமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பெத்தானிய சுவிஷேச சபை, குளப்பிட்டியில் இன்று (19-05-2004) புதன்கிழமை முற்பகல் 10.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை சபையோர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.*

தகவல்: S.ஜெயகரன் (மருமகன்).

(32103)(42-12-24)

### மரியரட்ணம் குணரட்ணம் (குணம்)

*(பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட 2ஆம் வருட மாணவன்)*



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியரட்ணம் குணரட்ணம் அவர்கள் 17.05.2004 திங்கட்கிழமை கண்டியில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் மரியரட்ணம் - மேரி கலிஸ்ரா தம்பதிகளின பாசமிகு புதல்வனும் மரியராணி (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம் வருட மாணவி), ஜெயரட்ணம் (நோர்வே), சாமினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி), மெல்வின் (ஹாட்லிக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.05.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தும்பளை, பருத்தித்துறை மரிய அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்ட பின், பருத்தித்துறை முனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை, பருத்தித்துறை.*

தகவல்: சின்னப்பு அந்தோனிப்பிள்ளை (மாமனார்).

(32099) (24-12)

### வல்லிபுரம் அருணாசலம்

(ஓய்வுபெற்ற உதவியாளர், வீரசிங்கம் மகா வித்தியாலயம்)



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த வல்லிபுரம் அருணாசலம் அவர்கள் 16.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அருமைக் கணவரும் இராசலட்சுமி, ஆறுமுகம், செல்லத்துரை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தாதேவி (சித்திபரீனா), உதயகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி), ஜெயக்குமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நவாஸ் (குவைத்), மீனா, தில்லைநாதன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சின்னத்தம்பி பண்டாரம் அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2004) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காந்தாளம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

தகவல்: திருமதி அ.நாகேஸ்வரி (மனைவி), பிள்ளைகள்.

(32108)(24-12)


**தவறிவிட்டது**

*சண்டிலிப்பாய் ஆலங்குழாயைச் சேர்ந்த லோகப்பிரகாசம் றமணன் என்பவரது முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவை (File) 16.05.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் குளப்பிட்டிச் சந்திக்கும் சண்டிலிப்பாய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.*

**லோ.றமணன்,**
ஆலங்குழாய், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
T.P.021-222 5413, 0777 286096
0777 283670, 0777 554168

*கண்டெடுத்தவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*

(32107)(26)

**Maths, English**

O/L பரீட்சையில் A,B,C பெறுபேறுடைய தரம் 6இலிருந்து 10 வரை ஆங்கிலம், A/L, G.A,Q, B.A.-I, II, Spoken English, Tofl கற்பிக்கப்படும்.

தொடர்பு: 85, சிவன் கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (32102)

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் ஸ்தாபனத்துக்கு வானில் சென்று வியாபாரம் செய்யும் பல வருட அனுபவம் வாய்ந்த, 35வயதிற்கு மேற்பட்ட ஒருவர் தேவை.

தொடர்பு: விளம்பர இல. 2269, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(C/35070)(42-12-24)

**தேவை**

*பழைய அச்சு இயந்திரத்தில் (எழுத்துக்கள் கோர்த்துச் செய்யும் மற்றர்) வேலை செய்யக்கூடிய நல்ல அனுபவம் வாய்ந்த மெஷின் மைண்டரும் படங்கள் வரையக்கூடிய (ARTIST) ஓவியரும் தேவை.*

தொடர்பு: விளம்பர இல: 2268, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(சி-35069)

**முகவரிகள் தேவையா?**

பிரபல நட்சத்திரங்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்களின் முகவரிகள் தேவையானவர்கள் ரூபா 25/= பெறு மதியான முத்திரைகளை வைத்து சொந்த முகவரியிட்ட தபாலுறைகளை ஜோ எகட்டன் 19/3, மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். (C/35064)

**கணக்கியல் எழுதுவினைஞர் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கணக்கியல் எழுதுவினைஞர் (ஆண்) ஒருவர் தேவை.

தகைமைகள்:

- G.C.E. (A/L) கணக்கியல்
- G.C.E. (O/L) ஆங்கில, கணித பாடங்களில் திறமைச் சித்தி
- M.S. Office
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

விரும்புவோர் 21-05-2004 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**மனிதவள முகாமையாளர், லக்ஷ்மி குறூப், 46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

*(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலத்திற்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் முகவரி அமைந்துள்ளது)*

(சி-35071)

**விழிநீர் சொரியும் அஞ்சலிகள்.....!**

**மரியரட்ணம் குணரட்ணம்**

*(பொறியியற்பீடம், பேராதனை)*



வித்தகனாய் திரும்பி வருவாய் என
நித்தமும் வழி பார்த்திருந்தோம் - எமை
பித்தராக்கிப் பிணமாக வந்தாயே நண்பா!
உத்தமனே உன் நினைவுகள் அழியாதடா!
எமது உயிர் நண்பனின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயருடன் இணைந்து நிற்கும்.....

2ஆம் வருட விஞ்ஞான பீட வடமராட்சி மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகம்.

(32109)(42-12-24)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 18th June 2004.

**FACULTY OF MEDICINE**

Senior Lecturer Grade I (Medical/ Senior Lecturer Grade II (Medical) / Lecturer (Probationary) (Medical) in Anatomy / Forensic Medicine.

**FACULTY OF ARTS**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Linguistics.
Senior Lecturer Grade II in Education.
Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Psychology / Art & Design.

**FACULTY OF AGRICULTURE**

Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Agricultural Engineering / Animal Science.

| POST | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 21,500 - 8x475 - 25,300/- p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 18,325 - 5x475 - 20,700/- p.m. |
| Lecturer (Probationary) | Rs. 11,820 - 10x375 - 15,570/- p.m. |

In addition to the above salary, an academic allowance of 30% of salary and other allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs. 20/- for each form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order / Postal order drawn in favour of the *"Bursar, University of Jaffna"* together with a self-addressed stamped envelope 23x30 cm in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their application through the Head of respective Institution.

Those who wish to apply for more than one post should apply in separate forms for each post.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
18.05.2004

(C/35063) (24)

## குடும்பஸ்தர் மரணம்: சந்தேகத்தில் மூவர் கைது!

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டுப் பகுதியில் வீதியோரமாக சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் மரணம் குறித்து சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் பொலீஸார் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி மூன்று நபர்களும் நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் நாகலிங்கம் நந்தகுமார் என்பவரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறும் திருமதி மேகலா நந்தகுமார், துரைசிங்கம் அருமைத்துரை ஆகிய இருவரையும் 20 ஆயிரம் ரூபா ஆட் பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் -

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார். (எ-9-86)

## வளர்ப்பு நாய்க்கு தடுப்பூசி

அல்வாய்-அத்தாய் விநாயகர் சனசமூக நிலையத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் அல்வாய் முத்துமாரி அம்மன் சனசமூக நிலையத்தில் 10 மணி தொடக்கம் 11 மணி வரையும் அல்வாய் மகாத்மா சனசமூக நிலையத் தில் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி பிற் பகல் 1 மணிவரையும் வளர்ப்பு நாய களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-173)


### தேவை

எமது பேக்கரியிலிருந்து வெளிக் கடைகளுக்கு பாண் விநியோகம் செய்வதற்கு ஆள் தேவை. கணக்குப் பார்க்கும் அனுபவமும் சமீபத்தில் வசிப்பிடமும் அவசியம். கடைக் காவலாளி (WATCHER) ஒருவரும் தேவை.
மேற்காணும் வேலைகளுக்குப் பொருத்தமானவர்கள் நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்புகளுக்கு:
றொலெக்ஸ் பேக்கரி,
118.கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (32116)(36)

### உடன் விற்பனைக்கு

226-XXXX தொடர் இலக்கமுடைய டீசல் டெலிக்கா mmc மொடல் வான் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077-6327627
சு.காந்தி
168/1.முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
077-6333016 (32121)

### மெட்டிஒலி திருமணசேவை

எதிர்வரும் வைகாசி மாத திருமண நன் நாள்களை முன்னிட்டு இன்று (19.05.2004) முதல் (23.05.2004) ஞாயிறு வரை தினமும் காலை 9மணி முதல் மாலை 5மணி வரை இலவச பதிவுகளை மேற்கொள்ளலாம். புகைப்படங்களுடன் தொடர்புகொள்ளவும் (புகைப்படங்கள் கண்ணியத் துடன்கையாளப்படும்) தொடர்புகளுக்கு.
S.பிறேமன்
நியூறெஸ்ற்கவுஸ்
இல. 19 சோமசுந்தரம் அவனியூ,
கச்சேரியடி, யாழ்ப்பாணம். (சி-35674)(17)


## இன்றைய ஆட்டங்கள்

தமிழீழ விளையாட்டுத்துறை, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு வல்வை விளையாட்டுக் கழகமும் கலட்டி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (10-5)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 3.45 மணிமுதல் யாழ். துரையப்பா விளையாட்டுக்களில் இடம்பெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ சென். நீக்கலஸ் வி.க.எதிர் எவறஸ்ட் வி.க.

★ சென்.றொக்ஸ் வி.க.எதிர் சென் அன்ரனிஸ் வி.க. (10-5)

## கண்ணீர் அஞ்சலி



17-05-2004 அன்று விபத்தில்
அகாலமரணமடைந்த பேராதனை
பல்கலைக்கழக பொறியியற்பீட
இரண்டாம் வருட மாணவன்
செல்வன்
**மரியரட்ணம் குணரட்ணம்**
அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.
E/02/A அணி மாணவர்கள்
பொறியியற் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
(32123)(32-11-16)


உ

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

### தாரண வருஷ மஹோற்சவம் - 2004

மேற்படி தேவஸ்தான மஹோற்சவம் 24-05-2004 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04-06-2004 வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

**திருவிழா விஞ்ஞாபனம்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 24-05-2004 | திங்கட்கிழமை | மு.ப. 11.00 மணி |
| சப்பறம் | 01-06-2004 | செவ்வாய்க்கிழமை | இரவு 08.00 மணி |
| தேர் | 02-06-2004 | புதன்கிழமை | மு.ப. 08.45 மணி |
| தீர்த்தம் | 03-06-2004 | வியாழக்கிழமை | மு.ப. 10.00 மணி |
| பூங்காவனம் | 04-06-2004 | வெள்ளிக்கிழமை | இரவு 08.00 மணி |

மஹோற்சவக் கடைகளுக்குரிய விண்ணப்பங்கள் 20-05-2004 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 23-05-2004 பி.ப.3.00 மணிக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது அரைவாசிப் பணம் முற்பணமாகச் செலுத்தப்படுவதோடு, 6ஆம் திருவிழாவன்று மிகுதிப் பணம் முழுவதும் செலுத்தப் படவேண்டும்.

கும்பழாவளை,
அளவெட்டி. (32114) (26) - தர்மகர்த்தாக்கள் சபை.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 04 - 1924



மறைவு 20 - 04 - 2004

### திருமதி முத்துமாணிக்கம் கந்தசாமி

**மனிதர்குல மாணிக்கமாய் மங்கையர் திலகமாய்**
**புனித வாழ்வு வாழ்ந்து மறைந்த அன்புத் தெய்வமே!**
**இனிய பேச்சும் மலர்ந்த முகமும் காண்பது தான் எங்கே?**
**ஆத்மா சாந்தி பெற்று அமைதியடையப் பிரார்த்திக்கின்றோம்.!**

எமது குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்து அன்பும் பாசமும் காட்டிய திருமதி முத்துமாணிக்கம் கந்தசாமி அவர்கள் 20.04.2004 இல் இறைபதமெய்திய செய்தி கேட்டு நேரில் வந்து துக்கம் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில்கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தொலைநகல் மூலமும் 'அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும், எமது அன்புத் தெய்வம் யாழ்.வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்திய சாலையில் நோயுற்று சிகிச்சைபெற்ற சமயம் அவரைப் பரிவுடன் கவனித்த வைத்திய அதிகாரிகள், தாதியர் மற்றும் உத்தியோகத் தர்களுக்கும் மாணிக்க தீபம் என்னும் அன்னாரின் ஞாபகார்த்த மலரினை ஆக்கிய தீவகதியாகன் அவர்களுக்கும் மலரினைக் குறித்த திகதியில் பதிப்பித்துத்தந்த ஷாம்பவி அச்சகத் தினருக்கும் அந்தியேட்டிக்கிரியையில் கலந்து கொண்டவர் களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை (20.05.2004) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*122/18, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (சி35072)(37-11-16) - குடும்பத்தினர்.


**ராஜா** யாழ்ப்பாணம்
5 ஆவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆய்த எழுத்து
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிரஞ்சனாஸ்** சங்கானை



விஜயகாந், கனகா, செந்தில் நடித்த
காயில் காளை
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இந்த (பு.நே)
SLIVER

**லக்ஷ்மி** இணுவில்
இரண்டாவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



சூர்யா (2 வேடங்கள்), ஜோதிகா, நடித்த
மிகப் பிரமாண்டமான தயாரிப்பில
பேரழகன் (ரீல்ஸ்)
தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த



அருள்
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C34180)(22)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலி களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்.
1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிறேமலதா ஜீவகன்

வங்களா வீதி,மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமலதா ஜீவகன் அவர்கள் நேற்று (18-05-2004) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தமோதரம்பிள்ளை, யோகேஸ்வரி தம்பதிகளின் புத்திரியும், ராதா, சீதா, சுதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவகனின் அன்பு மனைவியும் அச்சுவேலியைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வ பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் சிறீதரன் ,சந்திரமோகன், கண்ணன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லண்டன் தொலைபேசி*
*இல.00447958561796* (32119)(17-11-16)
தகவல்:
கி.திவ்வியன்
(சகோதரன - மீசாலை)

### சுப்பிரமணியம் பூபாலசிங்கம்



கொக்குவில் மேற்கு, வராஹி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பூபாலசிங்கம் 16-05-2004 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் சாரதா தேவியின் அருமைக் கணவரும் குணசீலன் (ரவி - சுவிஸ்), வத்சலா (இந்தியா), வசந்தன் (இந்தியா), சத்தியசீலன் (ரகு - சுவிஸ்), சசிகலா (கனடா), ஜெயசீலன் (சீலன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வாசுகி (சுவிஸ்), தர்மராசா (இந்தியா), சந்திரவதனி (ராதா - இந்தியா), சுமதி (இந்தியா), நவபாலன் (கனடா), சாரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-05-2004) புதன்கிழமை 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பை யன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சாரதாபவனம்,*
*வராஹி அம்மன் கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (32117)(26-11-16)
தகவல்:
வசந்தன் *(மகன்).*
T.P.: 077 6257930.

### அந்தோனிப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப் பிள்ளை வஸ்தியாம்பிள்ளை அவர்கள் நேற்று (18.05.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் மரியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியநாதர், காலஞ்சென்ற பங்கிராசா மற்றும் சிங்கராயா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஞ்சலோ (துரை-பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), லியோனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெயா, நேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிலா, பிறேமளா, றூபின்சலா, எட்மன், குமரன் மெந்துஷன் (லண்டன்), லெயோனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற லூர்தம்மா, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.05.2004) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*A.12, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32120)(37-11-16)
தகவல்:
அஞ்சலோ
(துரை - மகன்)

### வல்லிபுரம் செல்லத்துரை



புத்தூரைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை (17.05.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நவீந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (சுவிஸ்), நந்தினி (மட்டுவில்), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் கௌதமன் (ஜேர்மனி), சுசீபன் (ஜேர்மனி), லாவண்யா (ஜேர்மனி), சாயித்யா (சுவிஸ்), லக்கியா (சுவிஸ்), சசிவதனா (மட்டுவில்), கோபிகா (மட்டுவில்), பரணிகா (சுவிஸ்), ஜனகன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியை களுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கோவிலடி,*
*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.* (32118)(11-16-37)
தகவல்:
து.அருள்தாசன்
(மருமகன்)

# வடக்கு-கிழக்கில் இன்றும் நாளையும் சுகாதார ஊழியர்கள் சுகவீன லீவில்!

## வைத்தியசாலைகள் ஸ்தம்பிக்கும் நிலைமை

நிந்தவூர்,மே19

சுகாதார சேவையாளர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் 01.02.2004 ஆம்திகதிய சுற்றறிக்கை மூலம் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படாமையை ஆட்சேபித்து வடக்கு-கிழக்கு உட்பட மூன்று மாகாணங்களில் இன்றும் நாளையும் சுகாதார சேவை ஊழியர்கள் சுகவீனலீவுப் போராட்டமொன்றில் குதிக்கவுள்ளனர்.

அகில இலங்கை சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் மேற்படி சுகவீன லீவுப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

குறிப்பிட்ட - அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு மேல் மாகாணம் மற்றும மத்திய மாகாணங்களில் சுகாதார சேவையாளர்களுக்கு கடந்த மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் வடக்கு - கிழக்கு உட்பட சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களில் அது வழங்கப்படாமை குறித்து பெரும் விசனம் தெரிவிக்கபப்படுகின்றது.

இது விடயமாக குறிப்பிட்ட மாகாணங்களின் ஆளுநர்கள் உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வலியுறுத்தியும் இச்சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

# ஹை-ஏஸ் - டிராக்டர் விபத்து ஒருவர் பலி; 4 பேர் படுகாயம்!

## உமையாள்புரத்தில் திங்களன்று சம்பவம்

வவுனியா,மே19

பரந்தன், உமையாள்புரத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் 'ஹைஏஸ்' வான் ஒன்றும், உழவு இயந்திரம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் மரணமானார்; நால்வர் காயமடைந்தனர்.

உழவுஇயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவரான - உருத்திரபுரத்தைச் சேர்ந்த - ஞா.சுரேந்திரன் (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார். உழவு இயந்திரத்தில் பயணம் செய்த இருவரும் வானில் பயணம் செய்த இருவரும் காயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வான் சாரதி தமிழீழக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.


நேற்று இடம்பெற்ற அகாஷி-தமிழ்ச்செல்வன் சந்திப்பின்போது...

## மு.காவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு எம்.பிக்களும் அடுக்கடுக்காக சுமத்தியுள்ளனர்.

ரிஷாத்பதியுத்தீன், நஜீப் மஜீத், அமீர் அலி, பைஸல்காஸிம் ஆகியோரே ஹக்கீமுக்கு எதிராகத் கொதித்து எழும்பியிருக்கின்றனர்.

நேற்றுமாலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஹக்கீமை வசைபாடும் புராணத்தை அவர்கள் பாடினர்.

சம்மந்தப்பட்ட பெண்ணுக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கி,அவருக்கு கொழும்பில் ஒரு வீட்டையும் வாங்கிக் கொடுத்து அவருடன் ஹக்கீம் ஒன்றாக வாழ்ந்து வந்தார் என்பதை தாங்கள் இரண்டரை வருடங்களாக அறிவோம். என்றார்கள் இந்த எம்.பிக்கள்.

இந்நிலையில் ஹக்கீம் எங்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கி எங்கள் மீது விசாரணை நடத்த முயலகிறார் என்றும் அவர்கள் சீறுகின்றனர். (க)

## நையப்புடைக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண.கதளுவே ரத்னசார தேரரே நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணியளவில் மொறட்டுவ, ராவத்தாவத்தையில் உள்ள தனது சம்புத்த விகாரையில் தங்கியிருந்த சமயம் கடத்தப்பட்டார்.

அவருடன் கலந்துரையாடல் நடத்த வந்திருக்கின்றோம் என்ற பெயரில் மஞ்சள் அங்கி அணிந்து வந்த பிக்குகள் கூட்டம் ஒன்றே திடீரென அவரைத்தாக்கி குண்டுக்கட்டாகத் தூக்கி 'சொக்கலேட்' நிற கரவன் வாகனம் ஒன்றுக்குள் போட்டுக்கடத்திச் சென்றது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட வண.தேரர் நேற்றுக் காலை நாடாளுமன்ற அமர்வுக்கு சமுகம் தரவில்லை.

ஹெல உறுமயக் கட்சியிலிருந்து அவருடன் சேர்ந்து குத்துக்கரணம் அடித்து, அரசுப்பக்கம் தாவிய வண. அப்பரக்க புஞ்ஞானந்த தேரர் மட்டும நேற்று நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தார்.

நேற்றுமாலை ஹெல உறுமயவின் மற்றொரு பிக்கு எம்பியுடன் நாடாளுமன்றத்திற்கு வந்த அவர், தாம் தமது எம்பிப் பதவியை இராஜினாமாச் செய்கின்றார் எனத் தெரிவிக்கும் கடிதத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தார். சபாநாயகரையும் சந்தித்து அவர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். எனக் கூறப்பட்டது.

அவரது இராஜினாமாவை நாடாளுமன்ற செயலாளர் நாயகமும், சபாநாயகரும் உறுதிப்படுத்தினர் எனவும் தெரிகின்றது.

மிரட்டப்பட்டதால் ஏற்பட்ட பீதியில் அவர் இராஜினாமாச் செய்தார் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

சபாநாயகர் தெரிவின் போது தாம் அரசுத் தரப்பினரோடு அணிசார்ந்து நின்ற போதிலும் எதிரணி வேட்பாளரான லொக்கு பண்டாரவுக்கே வாக்களித்தார் என அவர் கூறினார் எனவும் ஒரு தகவல் தெரியவித்தது. (எ-க)

## இந்தியப் பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு இந்திய நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் எம்.பிக்களின் கூட்டத்தில் சோனியா உரையாற்றினார் "ஒரு விஷயத்தில் நான் எப்போதுமே தெளிவாக இருந்தேன் அதாவது எனது உள்ளுணர்வின், மனச்சாட்சியின் குரலைக் கேட்டு நடக்கவேண்டும் என்பதே அது! இன்று எனது மனச்சாட்சியின் குரல், இந்தப் பதவியை நான் அடக்கத்தோடு மறுதலிக்க வேண்டும் என்று எனக்குக் கூறுகிறது" என்றார் சோனியா.

அவர் இப்படிச்சொன்னதும், காங்கிரஸ் எம்.பிக்கள் இந்த முடிவுக்கு எதிராக ஒரே குரலில் கோஷமெழுப்பினார்கள். ஆனால், சோனியா "எனது இந்த முடிவை ஏற்குமாறு உங்களை நான் வேண்டிக்கொள்கின்றேன். இந்த முடிவை நான் திரும்பப்பெறமாட்டேன் என்பதையும் நீங்கள் உணரவேண்டும்" என்று கூறிவிட்டார்.

இதனையடுத்து இந்தியாவின் புதிய பிரதமராக காங்கிரஸின் மூத்த தலைவர் மன்மோகன்சிங் பதவியேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் -

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, நாட்டின் பிரதமராக பதவியேற்பதற்கு தடைவிதிக்க முடியாது என்று டில்லி உயர்நீதிமன்றம் தெரிவித்தது. வெளிநாட்டில் பிறந்தவரான சோனியா நாட்டின் பிரதமராக பதவியேற்பதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோரி ராஷ்டி ரீதிய முத்தி மோட்சா என்ற அமைப்பு டில்லி உயர் நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. இந்த மனுவை பரிசீலித்த தலைமை நீதிபதி பி.சி.படேல், நீதிபதி பி.ஜி.அகமது ஆகியோர் அடங்கிய 'டிவிசன் பெஞ்ச்' சோனியா பிரதமாராக பதவியேற்பதற்கு தடைவிதிக்கமுடியாது என்று கூறியது. எனினும் மனு மீதான விசாரணை இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவித்தது. (எ-9-4)

## சு.க. - ஐ.தே.க....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கப்பாடு ஏற்படவில்லை. வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்" - எனத துள்ளிக் குதித்தார்.

அவருக்கு சாட்டை அடி கொடுத்தார் எதிர்க்கட்சிக் கொறடாவான மஹிந்த சமரசிங்க.

"நாங்கள் உங்களுடன் கதைக்க வேண்டிய அவசியம் இல்லை. பிரதமருடனும் அமைச்சர் மங்கள சமரவீரவுடனும் பேசியே இந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்தினோம்" - என்றார் மஹிந்த சமரசிங்க.

"இப்படி ஓர் இணக்கப்பாடு காணபட்டது எனக்குத் தெரியாதே!" - எனறார் ஜே.வி.பி. விமல் வீரவன்ஸ.

"நீங்கள் ஓரம் கட்டப்பட்டதற்கு நாங்கள் என்ன செய்வது?" - என்றார் மஹிந்த சமரசிங்க.

எனினும் எதிர்க்கட்சியும் அரசும் ஏற்படுத்திய இணக்கப்பாட்டின்படி பிரதி சபாநாயகராக கீதாஞ்சன் குணவர்தன ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்ததாக குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு எதிர்கட்சியின் சார்பில் இ.தொ.காவின் பதுளை மாவட்ட எம்.பியான முருகன் சச்சிதானந்தன் பெயரை நுவரெலியா மாவட்ட எம்.பியான முத்துசிவலிங்கம் முன்மொழிந்தார். அதனை கம்ஹா மாவட்ட எம்பியான டாக்டர் ஜயலத் ஜவர்த்தன வழிமொழிந்தார். அதேவளை அமைசசர் மங்கள சமரவீரவும் அதனை வழிமொழிந்தார்.

"அமைச்சரின் ஆர்வத்திற்கு நன்றி. ஏற்கனவே ஒருவர் வழிமொழிந்து விட்டார். மேலதிகமாகவும் ஒருவர் வழிமொழிய வேண்டிய அவசியம் இல்லை. அது சம்பிரதாயமும் அல்ல"- என்றார் சபாநாயகர்.

இதன் அடிப்படையில் குழுக்களின் பிரதித் தலைவராக முருகன் சச்சிதானந்தன் ஏகமனதாகத் தெரிவு செயயப்பட்டார். இத் தெரிவுகளின் பின் நாடாளுமன்றம் இன்று காலை பத்து மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய அமர்வின்போது கந்தப்பொல விவகாரம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும். இன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்தே சபைக்கு செல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்புகிறேன். வடக்கு - கிழக்குக்கான ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி முதலில் பேசப்படும் என்றே நம்புகின்றேன்.

இலங்கையில் இரு தரப்பினருடனும் நடத்திய பேச்சுக்கள் நம்பிக்கை தருகின்றன. சமாதானப் பேச்சுக்களை விரைவுபடுத்த சர்வதேச சமூகம உதவும் - என்றார் அகாஷி. (ஐ-3)

## மரண அறிவித்தல்

### அருணாசலம் விமலாதேவி

புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் விமலாதேவி 18-05-2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலிச் சந்தை முன்னாள் தேநீர் வியாபாரி அருணாசலத்தின் அன்பு மனைவியும் சோமசுந்தரம், காலஞ்சென்ற கனகலட்சுமியின் அன்பு மகளும் கிருஷ்ணவேணியின் (யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இலட்சுமியின் அன்பு மருமகளும் குமாரசாமி - மகாலட்சுமியின் அன்பு பெறாமகளும் திருமதி யோகநாதன் நித்தியகலாவின் உடன்பிறவாச் சகோதரியும் தில்லையம்பலத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2004) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14/1, துரைராஜா வீதி,
முருகமூர்த்தி பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம். (32125)(11-16-32)

தகவல்:
பொ.அருணாசலம்
(கணவர்)


**இறுதிச் சந்தர்ப்பம்**

A/L 2004 மாணவர்களின்
பல்கலைக்கழக அனுமதியை
தீர்மானிக்கும்
பொதுச்சாதாரண பரீட்சை
வழிகாட்டி
P.உமாசங்கர், P.கமல்தாசன்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா
சிதம்பரப்பிள்ளை, துர்க்கா
அறிவமுது (வன்னி.) (32096)

**அதிரடி வேகத்தில்**
நேற்று நடந்த முடிந்த A/L 2004
GENERAL ENGLISH
வினாத்தாள் விடைகளுடன்
இன்றே உங்கள் கைகளில்
தொகுப்பு : த.தனேந்திரன்
B.Com (Hons) M.M.SPL, H.N Dip.in.Acc
P.G.Dip.In.Edu
பகுதி நேர விரிவுரையாளர் (English)
தொழிநுட்பக்கல்லூரி
கி.இடம்: பூபாலசிங்கம், சிறிலங்கா
சுப்பிரமணியம, துர்க்கா,
சிதம்பரப்பிள்ளை, பிரிங்கா (32124)

**A/L LOGIC 05**
* பகுதி -11
(விஞ்ஞானமுறை)
ஆரம்பம்: 20-05-2004
12.30மணி (ப.நே)
எஸ்.எஸ்.மனோகரன்
FURTHER EDUCATION
(உடுவில் மகளிர் கல்லூரி) (32110)(32)

**விக்னா கல்வி நிறுவனம்**
பிரிவு 6
O/L DAY CLASS (8.30-2.00)
ஆரம்பம்:
21.05.04 (8.30)
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதிசெய்து கொடுக்கப்படும்.
* இதுவே இறுதிப் பிரிவாகும். (சி-35067)(32)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 21.05.2004 இற்கு முன் நேரில்





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.